கோகுலம்

GOKULAM

ஜனவரி 85 ரூ.2





சுபாஷ் சந்திர போஸ்

பிறந்த நாள்: 23-1-1897 அமரரான நாள்: 18-8-1945



கோகுலம்

மலர்—2 இதழ்—12

1985 ஜனவரி மாத இதழ்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
- பாரதியார்

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா

தனிப்பிரதி ரூ. 2/-

ஆண்டுச் சந்தா ரூ. 24/-

அருமைச் சிறுவர் சிறுமியரே,

உங்கள் அனைவருக்கும் மனமார்ந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்; பொங்கல் வாழ்த்துக்கள்.

உலகம் முழுவதும் அறுவடைத் திருநாள் **(harvest festival)** கொண்டாடுகிறார்கள். ஆயினும், நம் தமிழ்நாட்டில், அதைப் பொங்கல் விழா என்று தனிச் சிறப்புடன் கொண்டாடுகிறோம். நமக்கு உதவியவர்களுக்கு வணக்கமும் நன்றியும் செலுத்தும் பண்டிகையாகக் கொண்டாடுகிறோம்.

இந்த இதழில் நம் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளைப் படிக்கப் போகிறீர்கள். வாரத்திற்கு நான்கு அணு சம்பளம் பெற்ற அவர், தளராத முயற்சியாலும், தன்னம்பிக்கையாலும் படிப்படியாக் உயர்ந்து, இன்று கோடிக்கணக்கான மக்களின் அபிமானத்தைப் பெற்றிருக்கிறார். அமெரிக்காவில் மருத்துவ சிகிச்சை பெற்று வரும் அவர், விரைவில் பூரண குணம் பெற்று நாடு திரும்ப நாம் அனைவரும் ஆண்டவன் திருவருளை வேண்டுவோம்.


இதுவரை சிறுவருக்கான உலகப் புகழ்பெற்ற நெடுங்கதைகளைக் 'கோகுல'த்தில் படித்து இன்பம் அடைந்தீர்கள். இந்த இதழிலிருந்து 'பிற நாட்டுச் சிறுகதை' என்ற வரிசையில் சிறந்த பல சிறுகதைகளைப் படிக்கப் போகிறீர்கள்."

— அழ. வள்ளியப்பா



இந்த இதழ் எழுத்தாளர்கள்


கலியாண வெங்கடேசன்


ஜோசப் ஸ்டாலின்


ஸ்ரீரங்கம் ஸ்ரீநிவாசன்

பிருந்தாவனக் கவிஞர்கள்


எஸ். வானதி


விஜி


ப. ஏ. சுதாகரன்


கோ. இளங்கோ


ஏ. பரமேஸ்வரி


அ. பி. கல்பனா

பிருந்தாவனக் கதையரங்கம் — அடுத்த இதழில்

அட்டை வண்ணப்படம்: யோகா

மாலியும் ஜூலியும்

கருத்து: எம்.ஆர்.ராஜன்



சுபாஷ் சந்திர போஸ்

'ஜெய் ஹிந்த்' என்று சொல்லும் போதே நம் மனக்கண் முன் நிற்பவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ். நம் தேசம் விடுதலை பெற மிகத் தீவிர மாகப் போராடிய தலைவர் அவர்.

இங்கிலாந்து சென்று ஐ.சி. எஸ். தேர்வில் வெற்றி பெற்று மிக உயர்ந்த பதவியில் இருந்த அவர், ஓரிரு ஆண்டுகள்கூட அப்பதவி யில் இருக்கவில்லை. மகாத்மா காந்தி நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்தார். மாணவர்கள் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

ஆங்கில அரசு அவரைப் பலமுறை சிறையில் அடைத்தது.

இரண்டாம் உலக யுத்தத்தில் ஆங் கிலேயருக்குப் பெரும் தோல்வி ஏற் பட்டு வந்தது. 'இச்சமயத்தில் ஆங்கி லேயரை எதிர்த்துப் போரிட்டால் எளி திலே சுதந்திரம் கிடைத்து விடும்' என்று போஸ் நம்பினார்.

ஒரு நாள் மாறுவேடம் போட்டுக் கொண்டு ஆப்கானிஸ்தான் வழியாக ஜெர்மன் தலைநகரான பெர்லின் சென்றார். பிறகு, அங்கிருந்து ஒரு நீர் மூழ்கிப் படகில் ஜப்பான் தலைநகரான டோக்கியோ வந்து சேர்ந்தார். பிறகு சிங்கப்பூரை அடைந்தார். தென்கிழக்கு ஆசியாவிலிருந்த 30 லட்சம் இந்தி யர்களும் அவரைத் தலைவராகக் கொண் டார்கள். அவர்களை ஒன்று திரட்டி 'இந்திய தேசிய ராணுவம்' என்ற பெரிய படையை அமைத்தார்.

அந்தப் படை இந்தியாவுக்குள் நுழைந்து, மணிப்புரி சமஸ்தானத்தில் பல இடங்களைக் கைப்பற்றியது. இச்சமயத்தில் அவருக்கு உதவிவந்த ஜெர்மனியும் ஜப்பானும் தோற்றன.

அப்போது விமானத்தில் சென்று கொண்டிருந்த போஸ், பார்மோஸா தீவில் ஒரு விபத்திலே இறந்து விட்ட தாகச் செய்தி வந்தது!

மார்டின் லூதர் கிங்

நீக்ரோ இனத்தவர் மிகவும் கறுப் பாகவும், சுருட்டை சுருட்டையான தலைமயிருடனும் இருப்பார்கள் என் பது தெரிந்ததே. அமெரிக்காவில் 2 கோடி நீக்ரோக்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய முன்னோர்கள் ஆப் பிரிக்காவிலிருந்து வந்தவர்கள்.

அவர்களை, அமெரிக்க வெள்ளையர்கள் மிகவும் கேவலமாக நடத்தி வந் தார்கள். 'கறுப்பு நாய்கள்' என்று கேலி செய்தார்கள். நீக்ரோக் குழந் தைகள் வெள்ளைக்காரக் குழந்தைக ளுடன் சேர்ந்து படிக்கக் கூடாது; சேர்ந்து விளையாடக் கூடாது; அவர் களுக்கென்று ஒதுக்கப்பட்ட பள்ளியில் தான் படிக்க வேண்டும். விடுதிகள், நூலகங்கள், பஸ்கள் — எதிலும் நீக் ரோக்கள் மற்றவர்களுடன் உட்காரக் கூடாது. அவர்களுக்காக ஒதுக்கப் பட்ட இடத்தில்தான் உட்கார வேண் டும் — இப்படி இருந்தது அன்றைய நிலைமை.

அந்த நிலைமையை அடியோடு மாற் றியவர் மார்டின் லூதர் கிங்.

அவர் தம்முடன் சேர்ந்து போராடிய நீக்ரோக்களிடம், ''நாம் ஏசுநாதரின் அன்பு நெறியையே கடைப் பிடிக்க வேண்டும். மகாத்மா காந்தி யின் அஹிம்சை வழியிலேயே போராட் டம் நடத்த வேண்டும்'' என்றார். அவ் வாறே நடத்தினார்; வெற்றியும் பெற் றார். அதனால்தான் அவரை 'அமெ ரிக்கக் காந்தி' என்று உலகம் போற்று கிறது.


35வது வயதிலே அவருக்கு உலகப் பெரும் பரிசான நோபல் பரிசு கிடைத்தது. இவ்வளவு குறைந்த வயதில் எவரும் இப்பரிசைப் பெற்ற தில்லை.

நியாயத்துக்காகவும், நேர்மைக்காக வும் அன்பு வழியில் போராடிய அவர் அதிக நாள் வாழவில்லை. 39வது வயதில் அவரை ஒரு வெறி பிடித்த வெள்ளையன் சுட்டுக்கொன்றுவிட்டான்!





மின்மினிக் கதைகள்



தக்காளி அரசனும் வெங்காய அரசனும்

தக்காளி தேசத்து அரசன் வெங்காய தேசத்து அரசனுக்கு ஒரு கடிதம் அனுப்பினான்.

''கறுப்பு வாலுடன் கூடிய நீல நிறப் பன்றி ஒன்றை அனுப்பி வைக்கவும். இல்லையேல்...?'' என்று இருந்தது அந்தக் கடிதத்தில்.

''என்னிடம் இல்லை. இருந்திருந்தால்...?'' என்று பதில் அனுப்பினான் வெங்காய தேசத்து அரசன்.

தக்காளி தேசத்து அரசனுக்கு இப்பதிலைக் கண்டதும் மூக்குக்கு மேல் கோபம் வந்து விட்டது. ''என்ன! நான் கேட்ட பன்றி அவனிடம் இல்லையாம். இருந்திருந்தால்...?'' என்று எழுதியிருக்கிறானே! இருந்திருந்தால் என்ன செய்வானாம்? மிரட்டுகிறானே! என்ன திமிர்! மந்திரி, இவனைச் சும்மா விடக் கூடாது. உடனே படைகளைத் தயார் செய்யுங்கள். அவன் நாட்டின் மீது படையெடுப்போம்'' என்று உத்தரவிட்டான்.

இரு நாடுகளுக்கும் போர் நடந்தது. பல நாட்கள் நடந்த போரில் நூற்றுக்கணக்கான வீரர்கள் இறந்தார்கள்... இருவருக்கும் பெருத்த சேதம் ஏற்பட்டது.

தக்காளி அரசனிடம் ஒருநாள் மந்திரி சொன்னார்: ''வெற்றி தோல்வியின்றி இப்படி எத்தனை நாட்கள் போர் புரிவது? எதற்கும் எதிரி அரசனைச் சந்தித்துப் பேசுவது நல்லதல்லவா?'' என்றார்.

அவ்வாறே இரு அரசர்களும் ஓரிடத்தில் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்யப்பட்டது.

''நீங்கள் கறுப்பு வாலுடன் கூடிய நீல நிறப் பன்றியை அனுப்பவும். இல்லையேல்...?' என்று மிரட்டி எழுதியிருந்தீர்களே, அதற்கு என்ன அர்த்தம்?''

''ஐயையோ! நான் மிரட்டி எழுதவில்லையே! 'இல்லையேல்... வேறு ஒரு நிறப் பன்றியை அனுப்புங்கள்' என்ற அர்த்தத்தில்தான் எழுதினேன். ஆமாம், நீங்கள் 'என்னிடம் இல்லை. இருந்திருந்தால்...?' என்று எழுதியிருந்தீர்களே! இருந்திருந்தால் என்ன செய்திருப்பீர்களாம்?''



''இருந்திருந்தால்... மகிழ்ச்சியுடன் அனுப்பி வைத்திருப்பேன் என்பதைத்தான் அப்படித் தெரிவித்திருந்தேன்.''

''அடடே, அரைகுறைக் கடிதங்களால் இப்படி அனர்த்தம் ஏற்பட்டு விட்டதே! இதைப் புரிந்து கொள்ளாமல் போரில் இறங்கி விட்டோமே! சரி, இனி போர் வேண்டாம். சமாதானம் செய்து கொள்வோம்.''

இருவரும் சமாதானம் செய்து கொண்டு அவரவர் நாட்டுக்கு மிச்சம் மீதியிருந்த வீரர்களுடன் திரும்பினர்.

பூனைக்குட்டியின் தந்திரம்

அகோரப் பசியுடன் ஊருக்குள் நுழைந்த ஓநாய்க்கு ஒரு சின்னஞ்சிறு பூனைக் குட்டிதான் கிடைத்தது.

''ஓநாய் மாமா, ஓநாய் மாமா, நான் உன் கால் வயிற்றுக்குக் கூடக் காணமாட்டேன். அதோ தெரியுதே, அந்த வீட்டில் பாலடைக் கட்டியை எங்கே வைத்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அது பெரிசாயிருக்கும்; ரொம்ப ரொம்ப ருசியாகவும் இருக்கும். வா, காட்டுகிறேன்'' என்று கூறி, ஓநாயை அழைத்துக் கொண்டு, கொல்லைப் புறத்தில் இருந்த கிணற்றின் அருகே சென்றது.

அங்கே, ஓர் உருளை வழியாகக் கயிற்றைச் செலுத்தி, கயிற்றின் இரு முனைகளிலும் இரண்டு வாளிகளைக் கட்டியிருந்தார்கள். ஒரு வாளி மேலே இருந்தது. மற்றொரு வாளி கிணற்றுக்குள் இருந்தது.

கிணற்று நீரில் தெரிந்த நிலாவின் உருவத்தைக் காட்டி, ''அதோ பார் பாலடைக்கட்டி!'' என்றது பூனைக் குட்டி.

''எப்படி அதை எடுப்பது?'' என்று கேட்டது ஓநாய்.

''இதோ இதில் நான் ஏறிக் கீழே போய் எடுத்து வருகிறேன்'' என்று கூறி, பூனைக் குட்டி மேலேயிருந்த வாளியில் ஏறி உட்கார்ந்து கொண்டது. அந்த வாளி மெல்லக் கீழே சென்றது. அது கீழே போகப் போக, கீழே மற்றொரு முனையில் கட்டியிருந்த வாளி மேலே வந்தது. கீழே சென்ற பூனைக் குட்டி, தண்ணீருக்குள் இறங்காமல், வாளியில் இருந்து வெளியே வந்து, கயிற்றிலே தொத்திக் கொண்டு பத்திரமாக நின்றது.

''அடடே, பாலடைக்கட்டி மிகவும் பளுவாக இருக்கிறதே! ஓநாய் மாமா, நீயும் இங்கே வந்தால், சுலபமாக எடுத்து வந்து விடலாம். அதோ மேலே இருக்கும் வாளியில் ஏறிக் கீழே வா'' என்றது பூனைக் குட்டி.

மறுவினாடியே, ஓநாய் ஒரே தாவாகத் தாவி வாளியில் உட்கார்ந்தது. உடனே அந்த வாளி 'கிடுகிடு' என்று கீழ் நோக்கி வேகமாகச் சென்றது. அதேசமயம், எடை குறைவாயிருந்ததால், பூனை இருந்த வாளி மேல் நோக்கி வந்தது.

ஓநாய் கீழே போன வேகத்தில் தொப்பென்று நீருக்குள் மூழ்கியது. மூழ்கிய ஓநாய், பிறகு எழுந்து வரவே இல்லை!

பணக்காரனின் சொத்து



அந்தப் பணக்காரனுக்கு ஏராளமான நிலபுலன்கள் இருந்தன. நிறைய ரொக்கமும் இருந்தது.

“உன் சொத்து முழுவதும் ஓர் ஏழைக்குப் போகப் போகிறது” என்று ஒரு பிரபல சோதிடர் அவனிடம் கூறினார்.

'என் சொத்து ஏழைக்குப் போவதா! பார்த்து விடுகிறேன்' என்று கூறி, தன் சொத்து முழுவதையும் விற்றுப் பணமாக்கினான். அந்தப் பணத்தைக் கொடுத்து, மிகமிக விலை உயர்ந்த ஒரு வைரக் கல்லை வாங்கி; யாருக்கும் தெரியாமல் தன் குல்லாவுக்குள் வைத்துத் தைத்து விட்டான். எங்கே போனாலும், மறக்காமல் அந்தக் குல்லாவுடனே போவான்.

சில நாட்கள் சென்றன. ஒருநாள் அவன் ஆற்றைக் கடந்து அக்கரை செல்லப் படகில் ஏறினான். பாதி வழி செல்லும் போது, பெரிய புயல் காற்று வீசியது. அந்தக் காற்றடித்த வேகத்தில் அவனது குல்லா அவன் தலையை விட்டுப் பறந்து சென்று நீரிலே விழுந்தது. நீர் அதை வெகுவேகமாக அடித்துச் சென்று விட்டது.

அப்போதும் அந்த மனிதன், “போகட்டும். எப்படியும் ஏழையின் கையில் கிடைக்கப் போவதில்லை. அந்த வகையில் மகிழ்ச்சிதான்” என்று ஆறுதல் அடைந்தான்.

ஆனால், நடந்தது என்ன?

சில நாட்களில், மீன் வியாபாரியிடமிருந்து ஓர் ஏழை ஒரு மீன் வாங்கி வந்து இரண்டாக வெட்டினான். அதன் வயிற்றில் பளபளத்தது பணக்காரனின் வைரம்! நீரிலே கிடந்த குல்லாய் சிதைந்து போய், வைரம் வெளியில் வந்ததும், அதை மீன் விழுங்கியதும், இப்போது ஏழையின் கையிலே தன் சொத்து முழுவதும் கிடைத்திருப்பதும் அந்தப் பணக்காரனுக்கு எப்படித் தெரியும்?

நான்கு கேள்விகள்



நம் தெனாலி ராமனைப் போல ஜெர்மன் தேசத்தில் வேடிக்கையான புத்திசாலி ஒருவன் இருந்தான். அவன் பெயர் ஹௌலெக்லாஸ் என்பது.

அவன் ஒருநாள் மாதா கோவில் கதவிலே, ''யார் எவ்வளவு கடினமான கேள்விகளைக் கேட்டாலும், நான் பதில் சொல்லத் தயார்'' என்ற அறிவிப்பை ஒட்டி வைத்தான்.

அதைக் கண்ட பலர் மறுநாளே பல்கலைக் கழகத்தில் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார்கள்.

ஏராளமான மாணவர்களும் பொது மக்களும் கூடியிருந்தனர். பல்கலைக் கழகத் தலைவர் கேள்விகளைக் கேட்டார். ஹௌலெக்ளாஸ் பதில் கூறினான்.

''கடலில் எவ்வளவு நீர் உள்ளது?''

அலைகளை நிறுத்துங்கள்; அளந்து சொல்கிறேன்.''

''உலகின் நடுப்பகுதி எங்கே இருக்கிறது?''

''எங்கேயும் போக வேண்டாம். இதோ இங்கேயே, இந்த இடத்திலே இருக்கிறது. வேண்டுமானால், அளந்து பாருங்கள்.''

''பூலோகத்திலிருந்து சொர்க்க லோகம் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?''

''மிக அருகிலே இருக்கிறது. அப்படி இல்லையென்றால் நாம் மெதுவாகக் கூறுகின்ற பிரார்த்தனைகள் சொர்க்கத்திலிருக்கும் ஆண்டவனுக்கு எப்படிக் கேட்கும்?''

''ஆகாயத்தின் பரப்பளவு எவ்வளவு என்று கூற முடியுமா?''

''ஏன் முடியாது? சரியாக 60 லட்சம் சதுர மைல்கள்! யார் வேண்டுமானாலும் அளந்து பார்க்கலாம்.''

''போதும், போதும், இனிமேல் எந்தக் கேள்வியும் நான் கேட்க விரும்பவில்லை'' என்று கூறிவிட்டுத் தலைவர் கேள்வி–பதில் நிகழ்ச்சியை முடித்துக் கொண்டார்.

கூட்டம் கலைந்தது.





முதல் தாம்பூலம்

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

ஒரு நாள் தேவர்களுடைய சபை கூடியது. தேவர்களும், அவர்களின் சிறந்த கல்விமான்களும் சிறந்த முனிவர்களும் அங்கு இருந்தனர். அன்று ஒரு சிறப்பான நிகழ்ச்சி நடந்தது. இந்தச் சபையில் சிறந்த கல்விமான் யார்? அவருக்கே முதலாவது தாம்பூலம் (வித்வத் தாம்பூலம்) கொடுக்க வேண்டும் என்று முடிவாகியது. யார் வல்லவர் என்ற ஆராய்ச்சி நீண்ட நேரம் நடந்தது. சரஸ்வதியின் அம்சமாக விளங்கும் ஔவையாரே முதலாவது தாம்பூலத்துக்கு உரியவர் என்று அனைவரும் முடிவு செய்தனர்.

அவர்கள் ஔவையாரிடம் சென்றனர். ''தாங்கள்தான் இந்தச் சபையிலே கல்வியில் முதல்வர். ஆகவே முதல் தாம்பூலத்தைத் தாங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்'' என்று வேண்டினர். அதற்கு ஔவையார் ''நான் முதல் தாம்பூலம் பெறும் தகுதியை உடையவள் அல்லள். தேவர்களுக்குத் தலைவர் இந்திரன். அவர் 'ஐந்திர வியாகரணம்' என்ற அருமையான இலக்கண நூலை எழுதியுள்ளார். முதல் தாம்பூலம் பெறத் தகுதி யுள்ளவர் அவரே. அவரிடம் சென்று கொடுங்கள்'' என்றார்.

பிறகு அனைவரும் இந்திரனிடம் சென்று ஔவையார் கூறியதைத் தெரிவித்தனர். இந்திரன் இதனைக் கேட்டு அச்சம் அடைந்தார். அவர்களை நோக்கி, ''ஓர் இலக்கண நூலை எழுதியதால், நான் சகல கலா வல்லவன் ஆகமுடியுமா? அகத்திய முனிவர் முருகனிடம் பாடம் கேட்டவர். ஆகவே முதல் தாம்பூலம் பெறத் தகுதியுள்ளவர் அவரே. அவரிடம் செல்லுங்கள்'' என்றார்.

தேவர்கள் அனைவரும் அகத்திய முனிவரைக் கண்டு வணங்கினார்கள். தங்கள் கருத்தைத் தெரிவித்தார்கள். அதற்கு அவர், ''நான் முருகப் பெருமானிடம் கல்வியை மட்டுமே கற்றவன். ஆனால் 'சகல கலாவல்லி' 'கலைமகள்' என்ற பெயர்கள் உடைய நான்முகன் தேவியான சரஸ்வதியே முதல் தாம்பூலம் பெறத் தகுதியானவர். அவரிடம் செல்லுங்கள்'' என்று கூறினர்.





பத்து வயதுப் புத்தக ஆசிரியர்!

'கடிகாரம்' என்று ஒரு பாட்டுப் புத்தகம். அந்தப் புத்தகத்தை எழுதியவள் ஒரு பத்து வயதுச் சிறுமி. அந்தப் புத்தகத்திற்கு வேண்டிய படங்களை வரைந்தவளும் அதே சிறுமி தான்! அவள் பெயர் ராஷன் அஸ்பாண்டிய ரோவா.

பிறகு, எல்லோரும் சரஸ்வதியை அடைந்து அகஸ்திய முனிவர் கூறிய செய்தியைக் கூறினர். அதற்கு சரஸ்வதி ''நான் கற்றுக் கொண்டது மிகக் குறைவு. கற்றுக்கொள்ள வேண்டியவை மிகுதியாக உள்ளன. ஆனால், 'வாகீஸ்வரி', 'இராஜ ராஜேஸ்வரி' என்ற பட்டங்கள் உடைய பார்வதி தேவியே கல்விக்கான முதல் தாம்பூலம் பெறத் தகுதியுள்ளவர். ஆகவே அத்தேவியிடம் செல்லுங்கள்'' என்று கூறினார்.

உடனே தேவர்கள் யாவரும் பார்வதியிடம் சென்று கலைமகள் கூறிய கருத்தைக் கூறினர். இதனைக் கேட்ட பார்வதி தேவி புன்னகை புரிந்தார். அவர்களை நோக்கி, ''நான் வாழைப் பழத்தின் தோலைப் போன்றவள். உள்ளே இருக்கும் பழத்திற்கு ஒப்பானவன் என் மகன் முருகனே. அவனிடம் சென்று முதல் தாம்பூலத்தை வழங்குங்கள்'' என்று பார்வதி தேவி கூறினார்.

பிறகு, அனைவரும் கந்தலோகத்தை அடைந்தனர். முருகப் பெருமானை வணங்கி, பார்வதி தேவி கூறிய கருத்தினைத் தெரிவித்தனர். கல்விக்கான முதல் தாம்பூலத்தை அவரிடம் நீட்டினர். உடனே முருகக் கடவுள், ''நல்லது; நாம் இந்தத் தாம்பூலத்தை ஏற்றுக் கொள்வோம்'' என்று கூறி ஏற்றுக் கொண்டார். அவர் ஏற்றுக்கொண்டதைக் கண்டு எல்லாத் தேவர்களும் மனம் மகிழ்ந்தனர்.

மாணவர்கள் கட்டிய மிதக்கும் படகு

'மிதக்கும் வகுப்பு அறை' கட்ட வேண்டும் என்று பிளாரிடாவிலுள்ள சரோஸட்டாவில் பள்ளி ஆசிரியர் மைக்கேல் ஸ்டுவேர்ட் கனவு கண்டார். தம்பா வளைகுடாவில் மிதக்கும் இந்த வகுப்பறையில் கடல் விஞ்ஞான ஆய்வுக்கு வித்திட்டார்! அவரது கனவு ஒரே வருஷத்தில் பூர்த்தியாயிற்று!


''நான் மிதக்கும் வகுப்பறைக்கான மாதிரியைத் தயாரித்தேன். மாணவர்களும் நானும் அதற்கு நிதி வசூலித்துக் கட்டினோம். நாலாயிரம் மணி நேரத்தில் பெரும்பாலும் மாணவர்கள் அடங்கிய 150 பேர் இந்த மிதக்கும் படகைத் தயாரித்தனர். இந்த மிதக்கும் படகுக்கு Floating Class Room என்று நாமகரணம் சூட்டினர். 12.3 மீட்டர் நீளமுள்ள இந்தப் படகு கிட்டத்தட்ட முப்பதினாயிரம் பேர்கள் சவாரிசெய்து ஆய்வு நடத்த உதவியிருக்கிறது. ஆறாவது, எட்டாவது, பத்தாவது வகுப்பு சரோஸட்டா வட்டார மாணவர்கள் படிப்புத் திட்டங்களுக்கு இந்தப் படகு பயன்பட்டது'' என்கிறார் அவர்.

ஆறாவது வகுப்பு மாணவர்கள் நீர்ப் பாதுகாப்பு, புல்லுணவு பற்றித் தெரிந்து கொண்டனர். மாணவர்கள் தங்கள் ஆராய்ச்சிகளை புல்லை நீரிலிருந்து எடுத்துப் பரிசோதித்து அறிந்தனர். அவர்களுடைய பள்ளியில் கடல் பொருட்காட்சி ஒன்றை நிறுவி ஒவ்வொரு மாணவனும் கற்றறிய வழி வகுத்தனர்.

எட்டாவது வகுப்பு மாணவர்கள் நீரிலுள்ள அசுத்தங்களைப் பற்றி ஆராய்ந்தனர். கடல் விஞ்ஞானத்தைப் பற்றிய ஆய்வுகளை சரோஸட்டோ கௌண்டி சர்க்கார் நூல் வடிவில் கொணர்ந்திருக்கிறது.

வருஷத்தில் மூன்று தடவை ஒவ்வொரு மாணவனும் இந்தப் படகினைப் பயன்படுத்துவானாம். இந்த மிதக்கும் படகின் வெள்ளோட்டத்துக்கு நிதி வசூலிக்கும் செயல்களும் உண்டு. இந்தப் படகினைத் தயாரித்ததற்கு உதவியவர்கள் பெயர்கள் ஒரு தகட்டில் பொறித்து வைக்கப்பட்டிருக்கின்றன! இந்த மிதக்கும் வகுப்பறைப்படகுக்கான கருவிகளை மொத்த விலையில் சரசமாக வாணிபர்கள் தர முன்வருகிறார்கள். கடல் அதிகாரிகள் இந்த மிதக்கும் படகினை இலவசமாகத் துறைமுகத்தில் மிதக்க அனுமதிச் சீட்டு வழங்கி யிருக்கிறார்கள். பயனுள்ள இந்த மிதக்கும்வகுப்பறைக்கு மக்களின் பேராதரவு கிடைத்து வருவதில் அதிசயமில்லை!

— பி. எஸ். மணி



அவனே இவன்!



இத்தாலி நாட்டின் ஓவியன் ஒருவன்
ஏசுவின் வரலாற்றை
சித்திர மாக வரைந்திட எண்ணி
மெத்தவும் முயன்றானே.

இத்தரை மீதில் தேவ குமாரன்
எப்படி இருந்திருப்பார்?
சித்திரை நிலவாய்ச் சிறிய மலராய்ச்
சிறந்தே இருந்திருப்பார்!

அத்தகு ஜோதி முகத்தை வரைந்திட
ஆர்வமாய் எண்ணியுமே,
சித்தம் குளிர்ந்திடச் சின்னக் குழந்தை
ஒன்றினைத் தேர்ந்தெடுத்தான்.

ஐந்து வயதுப் பாலகன் ஏசுவை
அழகாய் வரைந்தானே.
இந்த விதத்தில் வரைந்து முடித்தான்
எல்லாப் பருவமுமே!

முடிவில் ஏசுவைக் காட்டிக் கொடுத்து
முப்பது காசுபெற்ற
முரடன் யூதாஸ் வடிவை வரைய
முனைந்து முயன்றானே!

முரடன் யூதாஸ் முகம்போல் இருக்கும்
ஆளை அவன்தேடி,
மூலை முடுக்கு வீதிகள் எங்கும்
மிகவும் அலைந்தானே!





ஆ. ஜோசப் ஸ்டாலின்

முரடன் யூதாஸ் முகத்தைப் படத்தில்
முழுதாய்க் கொண்டுவர,
சரியாய் மாதிரி கிடைக்கா தந்த
ஓவியன் சலித்தானே!

ஒருநாள் அந்த ஊரின் நடுவே
ஓவியன் செல்லுகையில்
பிச்சை எடுத்துப் பிழைக்கும் ஒருவனைச்
சாலையில் கண்டானே!

இத்தனை நாளும் தேடிய யூதாஸ்
வடிவம் இதுஎன்றே
இதயம் சிலிர்த்தே ஓவியன் அங்கே
இன்பம் கொண்டானே!

அவனைப் பார்த்தே யூதாஸ் படத்தை
ஓவியன் வரைந்தானே!
அதனைப் பார்த்தே உரைத்தான் அந்தப்
பிச்சைக் காரனுமே:

''பாவப் பட்ட என்னைப் பார்த்தே
பாலன் ஏசுவைநீ
ஓவிய மாக அன்று வரைந்தாய்;
ஆனால், இன்றைக்கோ,

ஏசு மகானைக் காட்டிக் கொடுத்து
இதயம் கல்லான
மாசு மனிதன் யூதா சுக்கும்
மாதிரி ஆனேனே!''

வெறும் கார்டூனல்ல!



சார், தபால்!

இன்னும் கேள்வி — பதில் பகுதியை ஆரம்பிக்காமலேயே இருக்கிறீர்களே என்று ஏங்கிய என் போன்றவர்களுக்கு, சென்ற இதழைப் பார்த்ததும் மிகவும் மகிழ்ச்சி. பல தரப்பட்ட சந்தேகங்களைச் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை போக்கிக் கொள்ள இப்பகுதி மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

—மேஜர்தாசன், ஈரோடு—10.

டிப்பிலி ராஜாவின் எலிவேட்டை படித்து வீட்டில் அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தோம். இம்மாதிரிக் கதைகளை வெளியிடும் போது ஒரு பாக்கெட் வயிற்று வலி மருந்தையும் இணைப்பாகக் கொடுங்கள்.

—கே. நரசிம்மன் (7378), ஓசூர்.

உன் அட்டையில் தலைவர்களின் படங்களை வெளியிடுகிறீர்களே, அவர்கள் பிறந்த ஊர்களையும் வெளியிட்டால் நன்றாக இருக்குமே!

—எஸ். சிவகுமார் (5250), செங்கோட்டை.

குழந்தைக் கவிஞரின் 'அரசன் தந்த பரிசு', 'கோகுலத்தில் கண்ணன்', 'ஒரு பூனை புலியாகிறது' இவைகளுடன் வந்த டிசம்பர் இதழ் ஒரு பொன்னேடு மாதிரி இருந்தது.

—சி. திருப்பதி, கறம்பக்குடி.

அன்னை இந்திரா பற்றிய கோகுல வாசகர்கள் வழங்கிய சந்திப்பு நிகழ்ச்சிகள் என் விழிகளில் கண்ணீர் கசியச் செய்துவிட்டன.

—எம். ஏ. பாஷா, சின்னசேலம்—1.

வசந்தா கோவிந்தன் எழுதிய 'அம்மாவுக்கு உதவி' கதையைப் படித்தவுடன் நான் என் அம்மாவின் கையிலிருந்த ரேஷன் கார்டையும், டின்னையும் வாங்கிக் கொண்டு கியூவில் போய் நின்றேன்.

—ரெ. இளஞ்செழியன் (6255), காத்தான் சாவடி.

இதுவரை உரக்கப் படித்துக் கொண்டிருந்த நான் 'உரக்கப் படித்த நெல்லையப்பன்' கதையைப் படித்ததும், உரக்கப் படிப்பது தவறு என்பதை உணர்ந்தேன்.

—நா. முருகேசன் (5989), இலால்குடி.

ஒவ்வொரு மாதத்தின் நாயகர்களை அறிமுகப்படுத்தியும், அவர்களது படங்களை வெளியிட்டும் வளரும் நாளைய பாரதத்து நற்சிறுவர்களுக்கு நல்ல பாதையைக் காட்டிடும் 'கோகுலம்' இதழின் சேவையைப் பாராட்டி மகிழ்கிறேன்.

—ப. மூர்த்தி, பெங்களூர்—21.

பிருந்தாவனக் கதையரங்கில் இடம் பெறும் சிறுகதை ஒவ்வொன்றும் நல்லறிவை வளர்ப்பதாக உள்ளது. அனைவரும் படித்து மகிழ வேண்டிய பகுதி.

—வி. ஜெயவேலு, அத்திமலைப்பட்டு.

டிசம்பர் இதழ் அட்டையில் உள்ள சிறுவன், இந்தியாவின் முதல் முப்பரிமாணப் படமான 'மை டியர் குட்டிச் சாத்தான்' படத்தில் குட்டிச் சாத்தான் வேடத்தில் சிறப்பாக நடித்த சிறுவனைப் போல் தெரிகிறதே!

—ந. சண்முக வரதராஜன் (1348), கோவை—1

ராஜாஜி பிறந்த மாதமாகிய டிசம்பரில் ராஜாஜியின் குட்டிக் கதைகளை வெளியிட்டிருப்பது மிகவும் பொருத்தமே. எல்லாம் மிகவும் சுவையான கதைகள்; அறிவுக்கு விருந்தளிக்கும் கதைகள்.

—எம். சித்ரா, கோவில்பட்டி.

ரா. பொன்ராசனின் 'நினைப்பதேன்?' பாட்டு நினைத்து நினைத்துப் பாராட்டப்பட வேண்டிய பாட்டு. எப்படிப்பட்ட உண்மையை எவ்வளவு சுலபமாகக் காட்டிவிட்டார்!

—சித. லலிதா, மதுரை.

'மாவட்ட வினா—விடை'யின் மூலம் எங்கள் மாவட்டத்தைப் பற்றிய பல உண்மைகளை அறியச் செய்த புவனை கலைச் செழியன் அவர்களுக்கு நன்றி.

—கே. பார்வதி, சிதம்பரம்.

பிருந்தாவனக் கவியரங்கில் 'சொக்கன் கட்டிய விமானம்' வெகு ஜோர். கவிஞர்களை உருவாக்கும் களமாகவும் விளங்குகிறது கோகுலம்.

—என். சந்துரு, கோபி.

'மாலியும், ஜூலியும்' வெறும் கார்டூன் படம் அல்ல; நன்னடத்தையைக் கற்றுக் கொடுக்கும் ஜூலி வாழ்க!

'இவைகள் பேசினால்...?' கருத்துத் தந்த சிறை தர்மலிங்கம் அவர்களுக்கும் பொருத்தமாகப் படங்கள் வரைந்த ஓவியருக்கும் நன்றி!

—பெ. சுந்தர்ராஜ், புதுக்கோட்டை.

ஒரு பூனை புலியாகிறது! ஆரம்பமே வீரநடை—மன்னிக்க, வீரப் பாய்ச்சல் போடுகிறது. கதையில் 28—ஆம் பக்கம் நவம்பர் மூன்று ஞாயிற்றுக்கிழமை என்றும் பிறகு நவம்பர் 8 வியாழக்கிழமை என்றும், அதன் பிறகு நவம்பர் 9 மீண்டும் வியாழக்கிழமை என்றும் வருகிறது. நவம்பர் 3 ஞாயிறு என்றால், நவம்பர் 8 வெள்ளி என்றும், நவம்பர் 9 சனி என்றும் அல்லவா இருக்க வேண்டும்.

—அமுதி, ஜின்னா நகர்—609 203.

(ஆம், தவறுதான், வருந்துகிறோம் —ஆசிரியர்

பிருந்தாவனம்





பத்திரிகைகளின் பெயர்கள்

கீழ்க்கண்ட வரிகளை நாம் சில வார, மாதப் பத்திரிகைகளில் தொடர்ந்து பார்த்து வருகிறோம். ஒவ்வொரு பத்திரிகையின் குறிக்கோளையும் அந்த வரிகள் மூலம் அறியலாம். எந்த எந்தப் பத்திரிகையில் இந்த வரிகளைக் காணுகிறீர்கள்?

1. உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம் உண்மையென்று தானறிதல் வேணும்.
2. எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பது வேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே.
3. எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழியவே.
4. தமிழ்த் திருநாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா.
5. தாயில்லாமல் நானில்லை.

விடைகள்: 1. கோகுலம், 2. ஆனந்த விகடன், 3. அமுதசுரபி, 4. கல்கி, 5. தாய்.

—கு. கணேசன் (537), பேரையூர்.

ணம்

'ணம்' என்று கடைசியில் இரண்டு எழுத்துக்கள் வரும் சொற்களாகக் கூறுங்கள், பார்க்கலாம்:

1. ———பக்தர்கள் அடைவது
2. ———கணக்கில் வருவது
3. ———விபத்தில் ஏற்படுவது
4. ———மற்றோர் இடம் செல்வது
5. ———எல்லோருக்கும் இறுதியில் வருவது
6. ———கம்பர் இயற்றியது

விடை: 1. சரணம், 2. கோணம், 3. ரணம், 4. பயணம், 5. மரணம், 6. இராமாயணம்.

—என். மோகனசுந்தரம் (46), பொள்ளாச்சி.



முழம் 35 காசு


"என்ன இது! நீங்க பூதானே வித்துக்கிட்டிருந்தீங்க, இப்பே கரும்பு விக்கிறீங்களே!"

"பொங்கல் வருதே, அதுதான்."

"சரி, சரி, கரும்பு என்ன விலை?"

"முழம் முப்பத்தஞ்சு பைசா. மூணு முழம் ஒரு ரூபா."

—எம். ஆர். ஸ்ரீபிரியா (225), சென்னை—33.




எந்த ஊர்?

1. வீடு கட்ட முடியாத செங்கல்; உடுத்த முடியாத பட்டு இரண்டும் சேர்ந்தால்...?
2. கப்பல் போகாத சமுத்திரம் எது?
3. சிறுமிகள் ஆடுகின்ற ஆட்டம்; ஏழைகள் வாழுகின்ற பகுதி இரண்டும் சேர்ந்தால்...?
4. சாய்ந்து கொள்ள முடியாத திண்டு; கல்லுக்கு முன்னே கிடக்கிறது.

விடை: 1. செங்கல்பட்டு, 2. அம்பா சமுத்திரம், 3. பாண்டிச்சேரி, 4. திண்டுக்கல்.

—எஸ். பாலாஜி (5838), மயிலாப்பூர்.



பாராளுமன்றம்

நம் இந்தியாவில் (பார்லிமெண்ட்) பாராளுமன்றம் என்பதை மற்ற நாடுகளில் எவ்வாறு அழைக்கிறார்கள்?


அமெரிக்கா—காங்கிரஸ்.
பிரான்சு—நேஷனல் அசெம்பிளி.
இத்தாலி—செனேட்.
சுவிட்சர்லாந்து — ஃபெடரல் அசெம்பிளி.
பாரசீகம்—மஜ்லிஸ்.

—ஏ.பிரபு (641), பரோடா.

புதிர்ச்சிதறல்

அச்சுக் கோப்பவர் எழுத்துக்களைக் கைதவறிக் கீழே கொட்டி விட்டார். கொட்டிய எழுத்துக்களை வாரி எடுத்து வரிசையாக வைத்தார். நல்ல வேளையாக அந்த எழுத்துக்கள் அந்தந்த வரிசையிலே இடம் மாறி உட்கார்ந்து விட்டன. அவற்றை ஒழுங்காக அமைக்க முடியுமா பாருங்கள். எல்லாம் கோகுலத்தில் வரும் வார்த்தைகளே:

1. தை ங் ய க க ம் ர
2. ன தா வ ந் ரு ம் பி
3. ஞ ர் ழ தை கு ந் க க் வி
4. டி ர் ட் ப் பு தி போ
5. ள் தி ற பு கு ர்
6. ன் ன் தை சி க ு
7. ட் வி ு மா வி வ டை ட



விடை: 1. கதையரங்கம், 2. பிருந்தாவனம், 3. குழந்தைக் கவிஞர், 4. புதிர்ப் போட்டி, 5. குறள் புதிர், 6. சின்னுன் கதை, 7. மாவட்ட வினு விடை.

—எம். ஆர் அருளாளன் (3546), சென்னை—33.

என் ஊர்

1 கடை — ஒத்தக்கடை.
3 அடைப்பு — மூன்றடைப்பு.
4 மாவடி — நாலுமாவடி.
5 கிராமம் — அஞ்சு கிராமம்.
6 முகநேரி — ஆறுமுகநேரி.
8 ஊர் வட்டம் — எட்டூர் வட்டம்.
அச்சம் 10 — அச்சம்பத்து.
படுக்க 10 — படுக்கப்பத்து.
7000 பண்ணை—ஏழாயிரம் பண்ணை.

—எம்.எஸ். கோமதி (37), குமாரபுரம்.



சிக்கனம்

மிகவும் ஏழையாக இருந்து, தம்முடைய முயற்சியால் உலகப் பெரும் செல்வரானவர் ராக்பெல்லர். அவர் வீண் செலவு செய்ய மாட்டார்; சிக்கனமானவர். ஒரு முறை அவர் ஒரு நகரத்திலுள்ள நடுத்தரமான ஒரு விடுதியில் தங்க வந்தார். அவ்விடுதிக்காரர், ''உலகப் பெருஞ் செல்வரான நீங்கள் இப்படி என் விடுதியில் தங்கலாமா? உங்கள் மகன் இந்த நகருக்கு வரும் போதெல்லாம் ஆடம்பர விடுதியில் தங்குகிறாரே!'' என்று கேட்டார்.

அதற்கு ராக்பெல்லர் கூறினார்: ''அவன் எங்கு வேண்டுமானாலும் தங்கலாம். அவன் தந்தையோ பெரிய பணக்காரர். ஆனால், என் தந்தையோ மிக ஏழைதானே!''

—மு.பாபு (5085), திண்டுக்கல்.

பெரியோரின் அறிவுரைகள்

* ஒருவரிடம் இல்லாத குணங்களை இருப்பதாகப் புகழ்வது அவரைக் கேலி செய்வதாகும்.

—நபிகள் நாயகம்.

* உன் உள்ளம் அழுக்கடைந்தால், உன் உடலும் நாவும் கூட அழுக்கடைந்து விடும்.

—குருநானக்.



* எறும்பைப் போல உழைப்பவர் யாருமே இல்லை. ஆனால், அது பேசுவதே கிடையாது.

—பிராங்க்லின்.

* வீரன் ஒரு தடவைதான் சாகிறான்; கோழை பல தடவைகள் சாகிறான்.

—ஷேக்ஸ்பியர்.

—வெ. கணபதி சுப்பிரமணியன் (2665), கோவை—5.

தெய்வப் புதிர்



நாம் வணங்கும் கடவுள்களின் பெயர்களில் ஒரு புதிர் கண்டுபிடியுங்கள்:

1. கேள்வியுடைய கடவுள்
2. மான் உடைய கடவுள்
3. மழை உடைய கடவுள்
4. கண் கண்ட கடவுள்
5. இறுதியில் பதியுடைய கடவுள்.

விடை: 1. பிள்ளையார், 2. அனுமான், 3. கருமாரி, 4. கண்ணன், 5. வேங்கடாசலபதி.

—பி.சீதாலட்சுமி (5693), விருதுநகர்



கடைசிப் பெட்டி

டில்லிக்குச் செல்லும் ஒரு ரயிலில் கடைசிப் பெட்டி மட்டும் வழியில் ஓரிடத்தில் நிறுத்தப்படும். இது தெரியாத டில்லி செல்ல வேண்டிய ஒருவர் கடைசிப் பெட்டியில் ஏறிப் படுத்துத் தூங்கி விட்டார். அவர் விழித்துப் பார்த்த போது, வண்டியில் யாருமே இல்லை, அவரைத் தவிர!

உடனே இறங்கி ஸ்டேஷன் மாஸ்டரிடம் கேட்டார். "இது கடைசிப் பெட்டி. வழக்கமாக இதை இங்கே கழற்றி விடுவார்கள்" என்றார் ஸ்டேஷன் மாஸ்டர்.

உடனே அந்த மனிதர் "இனிமேல் புகை வண்டியில் கடைசிப் பெட்டியே இருக்கக் கூடாது. அப்படி இருந்தாலும் அது நடுவிலே இருக்க வேண்டும்" என்று கோபமாய்க் கூறினார்.

"சரிங்க" என்றார் உள்ளூரச் சிரித்துக் கொண்டே ஸ்டேஷன் மாஸ்டர்.

—எஸ். கி. ஜெகதீசன் (5700),
சென்னை—49.



வம்பும் அம்பும்


கடின உலோகம் இரும்பு;
கண்ணில் விழுவது துரும்பு;
மலரா முல்லை அரும்பு;
இனிப்பாய் இருக்கும் கரும்பு.

வீண் அரட்டையே வம்பு;
வில்லில் தொடுப்பது அம்பு;
தானிய வகையில் கம்பு;
பெரியோர் சொல்வதை நம்பு.

—எஸ். சிவகுமார் (6104),
பொங்கலூர்.

சென்னைத் துறைமுக இயல், இசை, நாடக மன்றம் நடத்திய குழந்தைகள் தினவிழாவில் பங்கு பெற்றவர்கள்





ஒன்று சேர்த்தால்?

இங்கே இருக்கும் 18 துண்டுகளையும் வெட்டி சிலசிலவற்றை ஒன்றுசேர்த்து ஒட்டி 6 உருவங்களை உருவாக்குங்கள். 15 நிமிட வேலை. அதற்குள் செய்து விடுகிறவர்கள் தான் மிக மிகக் கெட்டிக்காரர்கள்.

கீதா.

விடை:பக்கம் 31

கேளுங்கள்; சொல்லுகிறோம்?

நான் இரவு 7 மணிக்குத் தூங்கி காலையில் 7 மணிக்கே எழுந்திருப்பேன். ஒருவர் எத்தனை மணி நேரம் தூங்க வேண்டும் என்று கணக்கு இருக்கிறதா?

—ஆர். எஸ். குமார், செஞ்சி

அடேயப்பா! 12 மணி நேரம் தூங்குவதா? மிகவும் அதிகம்தான். பொதுவாகப் பெரியவர்கள் 8 மணி நேரமும், சிறு குழந்தைகள் 10 மணி நேரமும் தூங்க வேண்டும் என்கிறார்கள்.

தமிழில் எங்களுக்காக வேடிக்கையான — சிரிப்பூட்டும் பாடல்களை அதிகமாக எழுதியவர் யாரேனும் இருக்கிறார்களா?

—சி. கோதை, பழவேற்காடு

'லெமன்' என்ற கவிஞரின் பாடல்களைப் படித்ததில்லையா?



'வானர சேனை' என்று ஒரு படையை இந்திரா காந்தி 12 வயதிலே ஆரம்பித்தாராம். 'வானர சேனை' என்று ஏன் அதற்குப் பெயர் வைத்தார்? அது செய்த வேலை என்ன?

—என். பிரபாவதி, மதுரை-2

இராமபிரானுக்கு வானரங்கள் உதவியது போல், சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்களுக்கு உதவவே 'வானர சேனை' என்று பெயர் வைத்தார். காயம் பட்டவர்களுக்கு முதல் உதவி அளிப்பது, தலைவர்கள் தரும் தகவல்களை மற்ற இடங்களுக்கு எடுத்துச் செல்வது போன்ற வேலைகளை அந்தச் சேனை செய்து வந்தது.

'சர்தார் பட்டேல்' என்கிறோமே, 'சர்தார்' என்பது ஒரு பட்டமா?

ஆர். பெருமாள், கோவை-38

'சர்தார்' என்றால் 'தளபதி' என்றுதான் அர்த்தம். 'இரும்பு மனிதர்' என்று போற்றப்பட்ட அஞ்சா நெஞ்சரான பட்டேலை, மகாத்மா காந்தி, 'சர்தார்', 'சர்தார்' என்றுதான் அழைப்பார். அதுவே அவர் பெயருக்கு முன்னால் ஒரு பட்டம் போல் ஒட்டிக்கொண்டு விட்டது!

வலது கை இடது கையை விட பலமுள்ளதாக இருக்கிறதே, என்ன காரணம்?

-சை. ஜைனுதீன், வாணியம்பாடி

வலக் கையை நாம் அதிகமாகப் பயன்படுத்துகிறோமல்லவா, அதுவே ஒரு சிறந்த பயிற்சியாகி, பலம் தருகிறது.

'Christmas Comes but once a year' என்று ஆங்கிலத்திலே ஒரு பழமொழி இருக்கிறதே, அதேபோல் தமிழில் உண்டா?

—பி. லீலாவதி, சென்னை-18

ஏன் இல்லை? 'அமாவாசைச் சாப்பாடு சும்மா சும்மா வருமா?' என்று கேள்விப்பட்டதில்லையா?


வசந்த காலம், வேனில் காலம் என்றெல்லாம் சொல்லுகிறார்களே, இது என்ன காலம்?

—வி. ஜேம்ஸ், திருச்சி

ஐப்பசி, கார்த்திகை கூதிர் காலம்.

✲ ரத்னம் ✲ லெமன்





யானைதான் அதிக நாள் வாழுமாம். என் நண்பன் சொல்கிறான். இல்லை, ஆமைதான் அதிக நாள் வாழும் என்கிறேன் நான். யார் சொல்வது சரி?

—எஸ். கிரி, உளுந்தூர்ப்பேட்டை

கிரி சொல்வதுதான் சரி. யானையின் சராசரி வயது 100தான். ஆமையின் சராசரி வயது 350.

கிறிஸ்துமஸ் உலகம் முழுவதும் டிசம்பர் 25ஆம் தேதிதான் கொண்டாடப்படுகிறதா?

—எப். மனோகர், திருத்தணி

ஆரம்ப காலத்தில் சில இடங்களில் ஜனவரி 6, மார்ச் 25, டிசம்பர் 25 என்று வெவ்வேறு நாட்களில் கொண்டாடப்பட்டது. ஆனால் ரோம் நகரப் பாதிரியார் டிசம்பர் 25ஆம் தேதியில்தான் கிறிஸ்துமஸ் கொண்டாட வேண்டும் என்று உத்தரவு போட்டாராம். அதன்படி இப்பொழுது உலகம் முழுவதும் டிசம்பர் 25தான் கிறிஸ்துமஸைக் கொண்டாடுகிறார்கள்.

தெர்மாஸ் பிளாஸ்கில் எத்தனை மணி நேரம் காப்பி அல்லது டீயை சூடாக வைத்திருக்க முடியும்?


—வே. சிந்தாமணி, கருங்குழி

24 மணி நேரம்.

ஏற்கெனவே வழங்கிவந்த கதைகளை வைத்தே ஷேக்ஸ்பியர் தம் நாடகங்களைத் தயாரித்து எழுதினார் என்று என் ஆங்கில ஆசிரியர் கூறுகிறார். அப்படித்தானா?

—கே. பிரபாகர், சென்னை-34

அவர் கூறியது சரியே. ஷேக்ஸ்பியர் எழுதிய 37 நாடகங்களில் 34 நாடகங்களுக்கு மூலம் எது என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.



என் தம்பி கான்வென்டில் படிக்கிறான். என் அம்மாவை அவன் 'மம்மி' 'மம்மி' என்றே கூப்பிடுகிறான். 'அம்மா' என்று கூப்பிடச் சொன்னால் 'மம்மின்னுதான் சொல்லணும்'னு என் டீச்சர் சொன்னாங்க' என்கிறான். என்ன செய்வது?

—ச. மலர்விழி, மதுரை-1



குழந்தை பேசத் தொடங்கியதும் கூறுகின்ற முதல் சொல்லே 'அம்மா' என்ற அழகான சொல்தானே! முன்னாள் பள்ளிக் கல்வி இயக்குனர் திரு கே. வேங்கடசுப்பிரமணியம், ''நான் படித்த வரலாற்றுப் பாடத்தில் எகிப்து தேசத்தில் இறந்த சடலங்களைத்தான் 'மம்மி' என்று அழைத்து வந்ததாக அறிந்தேன்'' என்று 'கல்விச் சிந்தனைகள்' என்ற புத்தகத்தில் எழுதியிருக்கிறார். இது உன் தம்பிக்கோ அல்லது அந்த டீச்சருக்கோ தெரிந்தால் அப்படிச் சொல்வார்களா?

பாரதியார் எழுதிய 'பாப்பாப் பாட்டு' முதன் முதலாக எதில் வெளிவந்தது?

—என். ராமு, காரைக்கால்

இப்போது நூறாவது பிறந்த நாள் கொண்டாடு கிறோமே, சுப்பிரமணிய சிவா, அவர் நடத்திய 'ஞானபாநு' என்ற பத்திரிகையில் தான் (1912-15).

சிறுவருக்கான கலையரங்கம் சென்னை நகரில் எங்காவது இருக்கிறதா?

—ஐ. மோகன்ராஜ், கரூர்

இருந்தது. 'பாலர் அரங்கம்' என்ற பெயரிலே.. அதையே 'கலைவாணர் அரங்கம்' எனத் திடீரென்று பெயர் மாற்றம் செய்துவிட்டார்கள். கல்கத்தாவிலும், ஹைதராபாத்திலும் உள்ள சிறுவர் அரங்குகளைப் பார்த்த போது 'நம் தமிழ்நாட்டிலும் இப்படி ஓர் அரங்கம் இருந்தால்....?' என்ற ஏக்கமே ஏற்பட்டது.

எழுத்தாளர்களின் புகைப்படங்களை வெளியிட்டுப் புதுமை செய்கிறது 'கோகுலம்'. எங்களுக்காக எழுதும் எழுத்தாளர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள ஏதாவது புத்தகம் இருக்கிறதா?

—ம. சத்தியநாராயணன், திண்டுக்கல்.

ஓ! இருக்கிறதே! 'குழந்தை எழுத்தாளர் யார்—எவர்?' என்று 1961ல் ஒரு புத்தகம் வெளிவந்தது. 201 எழுத்தாளர்களைப் பற்றிய விவரங்கள் அடங்கிய அந்தப் புத்தகத்தைத் தொகுத்தவர் ரத்னம். தமிழ் எழுத்தாளர்களைப் பற்றி முதல் முதலாக வெளிவந்த புத்தகம் அதுதான்! அதன் மறு பதிப்பில் மேலும் பல எழுத்தாளர்களைச் சேர்த்து (மொத்தம் 370) ஏ. எஸ். ஹரிஹரன் (ரேவதி), பி. என். பாலசுப்பிரமணியம் இருவரும் 1972ல் அளித்தனர். இரண்டு புத்தகங்களையுமே வெளியிட்டது: குழந்தை எழுத்தாளர் சங்கம்.

'உடும்புப் பிடி' என்கிறார்களே, அப்படியென்றால்?

—ர. செல்வராஜ், பெரியகுளம்

கால் நகங்களால் சுவர்களையும் மதில்களையும் கெட்டியாகப் பற்றிக் கொள்ளும் சக்தி உடும்புக்கு உண்டு. திருடர்கள் சுவர்களில் ஏறவும், போர் வீரர்கள் கோட்டை மதில்களில் ஏறவும் உடும்பின் இடுப்பிலே கயிற்றைக் கட்டி சுவர் அல்லது மதில் மேல் ஏற விடுவார்கள். மேலே சென்று அது கெட்டியாகப் பற்றிக் கொள்வதால், கயிற்றைப் பிடித்துக் கொண்டு எளிதாக ஏறிவிடுவார்கள். இதைத்தான் 'உடும்புப் பிடி' என்கிறார்கள்.

கவியரசு கண்ணதாசன் அவர்களின் சொந்த ஊர் எது?

—டி. கோமதி, கம்பம்

பிறந்தது சிறுகூடற்பட்டி என்ற சிற்றூரில். சுவீகாரம் போனது காரைக்குடிக்கு.

விமானம் தாங்கிக் கப்பல்' என்றால் என்ன? சொல்லுவீர்களா?

—ஏ. விவேக், விருதுநகர்

கடற்படையில் முக்கியமாக இருக்கும் இதை, 'மிதக்கும் விமான நிலையம்' என்றும் சொல்லலாம். இதன் மேல் பகுதி அகலமாகவும், சமதளமாகவும் இருக்கும். இதனால் சிறு விமானங்கள் இதிலிருந்து பறந்து செல்லவும், திரும்பி வந்து இறங்கவும் வசதியாக இருக்கிறது.



உயிர்கள் உலக நகைச்சுவை

எடையூர் சிவமதி



பயம் ஏன்?


தாய் அட்டை: பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளைக்கண்டால், நீ ஏன் இப்படிப் பயப்படுறே?

குழந்தை அட்டை: அவங்க எப்பப் பார்த்தாலும் 'அட்டை போடணும்'னு, அட்டை போடணும்'னு சொல்றாங்களே! என்ன பண்ணுவாங்களோ!

நொண்டுவது ஏன்?

ஆண் கொசு: ஏன் இப்படி நொண்டி நொண்டி நடக்கறே?

பெண் கொசு: தெரியாத்தனமா ஒரு வழுக்கைத் தலை மேலே உட்கார்ந்திட்டேன். காலை வழுக்கி விட்டுடுத்து!





விரட்ட மாட்டார்!


ஈ—1: என்ன அவர் சாப்பிடும் போது மட்டும் எல்லா ஈக்களும் வந்து ஒரேயடியா மொய்க்குது?

ஈ—2: அவர் ரொம்ப நல்லவராம். எச்சில் கையாலே கூட ஈ விரட்ட மாட்டாராம்!

சேட்டு கடை எலி

எலி—1: அந்த எலிக்கு எவ்வளவு திமிரு! நம்மளோட பேச மாட்டேங்குது!

எலி—2: அது சேட்டு கடையிலே குடியிருக்கிற எலியாச்சே!



பிருந்தாவனக்

மியாவ் மாமா

மியாவ் மாமா, மியாவ் மாமா,
எங்கே போறீங்க?
வேலே வெட்டி யில்லே யின்னு
இங்கே வாருங்கோ.

மீசை மேலே வெள்ளை யாக
என்ன சொல்லுங்க?
யோசிக் காமல் பாலேத் திருடி
ஏன் குடிச்சீங்க?

அப்பா போற ஆபீசுக்கு
நேர மாச்சுங்க.
அபச குனம் போலக் குறுக்கே
வந்தி டாதீங்க!

—எஸ். வானதி (3487), கோவை.





பிரதமர் ராஜீவ் காந்தி

இன்று நமது பிரதமராம்
ராஜீவ் காந்தி.
இந்தி ராவின் மூத்த மைந்தர்
ராஜீவ் காந்தி.
அன்னே போலத் துணிச்சல்காரர்
ராஜீவ் காந்தி.
அவர்க்கு மிகவும் உதவிவந்தார்
ராஜீவ் காந்தி.

நல்ல தோற்றம் உடையவராம்
ராஜீவ் காந்தி.
நாற்ப தாண்டு நிறைந்தவராம்
ராஜீவ் காந்தி.
எல்லோ ருக்கும் நன்மைசெய்ய
ராஜீவ் காந்தி.
இச்சை யோடு பணிபுரியும்
ராஜீவ் காந்தி.

நேரு வுடைய செல்லப்பேரர்
ராஜீவ் காந்தி.
நிறையத் திறமை உடையவராம்
ராஜீவ் காந்தி.
பார தத்தை மேலும்மேலும்
ராஜீவ் காந்தி.
பாரில் உயர்த்திக் காட்டவேண்டும்
ராஜீவ் காந்தி.

—விஜி (397), மதுரை—2.

வளரும் பருவம்

வளரும் பருவம் பெரியோர் சொன்ன
வழியில் செல்லுவோம்.

மதித்து நடந்து அன்னே, தந்தை
மகிழச் செய்குவோம்.

கற்ற வித்தை உலகம் போற்றக்
கடமை யாற்றுவோம்.

காடு தோறும் கழனி ஆக்கிக்
கனிகள் காணுவோம்.

தேனமுத மொழிகள் சொல்லிச்
சேர்ந்து வாழுவோம்.

சேர்ந்து வாழ்ந்து நமதுதேசம்
சிறக்கப் பண்ணுவோம்.

—ப.ஏ. சுதாகரன் (3572), தாய்முடி.

கவியரங்கம்

தமிழே வா!

செந்தமிழ் மொழியே வா, வா, வா.
சிறுவர்க் கின்பம் தரவே வா.
எந்தன் உயிரே வா வா வா.
எழிலுடன் நீயும் வா வா வா.

உண்மை பற்பல சொல்ல வா.
உவமை பற்பல உரைக்க வா.,
அன்பை எமக்கே ஊட்ட வா.
ஆவல் தீர்க்க வா வா வா.

வல்லமை நீயும் தரவே வா.
வாழும் வழியைக் கூற வா.
எல்லார் மனமும் மகிழ்ந்திடவே
ஏட்டில் பவனி வா வா வா.

—கோ. இளங்கோ (3017), இராஜ
பாளையம்.

சத்திய வழியில் நில்!

நித்தம் வாழ்வில் சத்தியம் ஒன்றே
நினைவில் கொண்டு வாழ்ந்துவிடு.
சத்திய வாழ்வில் காந்தி படைத்த
சரித்திரம் கண்டு துணிந்துவிடு.

சத்தம், கூச்சல், சண்டை எதற்கு?
சமரச வாழ்க்கை பழகிவிடு.
சித்தம் இறைவன் செயலே என்று
சிறப்பாய் வாழ்வை நடத்திவிடு.

உண்மை என்றும் உன்னை உயர்த்தும்.
உயர்வாய் வாழ்வைத் துவங்கிவிடு.
திண்மை கொண்ட நெஞ்சத் தோடு
திறம்பட வாழ்வில் நீச்சலிடு.

—அ. பி. கல்பனா (1374),
தஞ்சாவூர்–2.

பச்சைக்கிளி

பச்சைக் கிளியே வந்திடுவாய்.
பவள வாயைத் திறந்திடுவாய்.
இச்சை மொழிகள் பேசிடுவாய்.
இன்பம் பெறவே கொஞ்சிடுவாய்.

ஒற்றுமை என்றும் உயர்வென்றே
ஒன்றாய்க் கூடி வாழ்ந்திடுவாய்.
குற்ற மில்லா உன்வாழ்வில்
கொஞ்சும் இயற்கை சிரித்திடுமே.

பாப்பா தந்திடும் பழத்தினையே
பாங்காய்த் தின்றிடும் பசுங்கிளியே.
பறந்தே செல்லும் உன்னழகைப்
பார்த்தே நாங்கள் மகிழ்ந்திடுவோம்.

—ஏ. பரமேஸ்வரி (7287),
பட்டி வீரன் பட்டி.



வாசு கண்ட வா~~ண~~ன வேடிக்கை

"என்னடா வாசு, தசரா லீவிலே நீ டில்லி போயிருந்தாயாமே! அங்கே என்ன என்னவெல்லாம் பார்த்தாய்?"

"நான் போன வருஷம் போன போதே, செங்கோட்டை, குதுப் மினார், பார்லிமெண்ட் கட்டடம், பொம்மை மியூசியம் எல்லாம் பார்த்து விட்டேன். இந்தத் தடவை போன போது, நான் மிகமிக அதிசயமான ஓரிடத்துக்குப் போனேன்."

"மிகமிக அதிசயமான இடமா! அதைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுடா."

"அந்த இடத்திலே நான் பல வான வேடிக்கைகளையெல்லாம் பார்த்தேன்..."

"என்ன! வாண வேடிக்கையா? அப்படியானால், எல்லாம் நம் சிவகாசியிலிருந்து போன வாண வெடிகளாகத் தான் இருக்கும். அப்படித்தானே!"

"என்னடா இது! வாண வேடிக்கை என்றா நான் சொன்னேன்? வான வேடிக்கை என்றல்லவா சொன்னேன்?"



"வான வேடிக்கையா! அப்படியென்றால்...?"

"சொல்கிறேன், கேள். நேரு மாமா இருந்த தீன் மூர்த்தி பவனத்துக்குப் பக்கத்திலே இருக்கிறது அந்த இடம். நான் போன போது, அங்கே 200—க்கு மேற்பட்ட குழந்தைகள் வந்திருந்தார்கள்!"

"சரிடா, அந்த இடத்துக்குப் பெயர் கிடையாதா?"

"பெயரில்லாமலா? 'நேரு பிளானட்டோரியம்'—அதாவது 'நேரு கிரக மண்டலம்' என்பது தான் அதன் பெயர். போன பிப்ரவரி மாதம்தான் அதைத் துவக்கினார்களாம். வாரத்திலே ஐந்து நாள் திறந்திருக்குமாம்."

"நீ அங்கே என்னென்ன பார்த்தாய்?"

"முதலிலே எங்களை அங்கிருந்த கண்காட்சிப் பகுதிக்கு அழைத்துச் சென்றார்கள். அங்குதான் எத்தனை எத்தனை கருவிகள், மாதிரிகள்!"

"அதையெல்லாம் தொட்டுப் பார்க்கலாமா?"

"ஓ! நான் கூடத் தொட்டுப் பார்த்தேனே! சில கண்காட்சிகளில் 'தொடாதீர்கள்' என்று அறிவிப்பு இருக்கும். இங்கே அது இல்லை."

"அப்படியானால், 'தொடுங்கள்' என்ற அறிவிப்பு இருந்ததா?"

"அப்படி எந்த அறிவிப்பும் இல்லை. ஆனாலும், நாம் எதையும் தொட்டுப் பார்க்கலாம். அங்கே ஒரு டெலஸ்கோப்—அதுதான் தொலைநோக்கி இருந்தது. அதன் வழியாக வானத்தைப் பார்த்தேன். இன்னும் பல கருவிகள் இருந்தன. சில கருவி

களிலிருந்த பொத்தான்களை அழுக்கிப் பார்த்தோம். நெம்பு கோல்களை மேலும் கீழும் அசைத்துப் பார்த்தோம்.''

''ஆமாம், என்னென்ன கண்டீர்கள்?''

''வெவ்வேறு கலர்களில் நட்சத்திரங்களைக் கண்டோம். பருவ நிலைகளுக்கு ஏற்றபடி எவ்வாறு நிறங்கள் மாறுகின்றன என்பதையெல்லாம் தெரிந்து கொண்டோம். எப்படிப் பூமி சுற்றுகிறது? எப்படி இரவும் பகலும் மாறி மாறி வருகின்றன, எப்படிச் சூரிய கிரகணம், சந்திர கிரகணம் ஏற்படுகிறது என்பதையெல்லாம் அங்கே விளக்கிக் காட்டினார்கள்.''

''ஓ! அப்படியா! அப்புறம்...?''

''மிகமிகப் பெரிய பந்திலே பாதியை வெட்டி வைத்தது போல ஒரு கூடாரம் இருந்தது. அதற்குள் எங்களைப் போகச் சொன்னார்கள். அங்கு போய் உட்கார்ந்தோம். மேலே பார்த்தோம், வலப்பக்கம் பார்த்தோம், இடப்பக்கம் பார்த்தோம், எதிர்ப்பக்கம் பார்த்தோம். எங்கு பார்த்தாலும் ஒரே நீல நிற வானம் தெரிந்தது. வெல்வெட் மீது பளபளவென்று மின்னும் நட்சத்திரங்கள் தெரிந்தன. சிறிது நேரத்தில் எங்கும் இருட்டு; ஒரே இருட்டு! சில வினாடிகளில் மெல்லத் தெரிந்தது தகதக என்ற ஒளி!''

''பயமாக இருந்திருக்குமே!''

''போடா பயங்கொள்ளி! உடனே நாங்களெல்லோரும் கைதட்டினோம்; ஒரே ஆரவாரம்! பிறகு.. அங்கே நிலாவைப் பார்த்தோம். பாலடைக் கட்டி போல இருந்தது.''

''அப்புறம்...?''

''அப்புறம் என்ன! கூடாரத்தை விட்டு வெளியில் வந்தோம். அங்கிருந்த அம்மையாரைப் பார்த்து நாங்கள் கேள்விகள் கேட்டோம். எல்லாக் கேள்விகளுக்கும் அந்த அம்மையார் பொறுமையாக, விளக்கமாகப் பதில் கூறினார்கள். சில கருவிகளை இயக்கியும் காட்டினார்கள்.''

''அப்புறம் என்ன செய்தீர்கள்?''

''அந்த அம்மையாருக்கு நன்றி கூறி, விடைபெற்று வீடு திரும்பினோம்.''

''என் மாமா போன மாதம் தான் டில்லிக்கு மாற்றலாகிப் போயிருக்கிறார். இந்தக் கோடை விடுமுறையில் நானும் டில்லிக்குப் போய், அந்த நேரு பிளாட்பாரத்தை...''

''டேய், டேய், அது பிளாட்பாரம் இல்லேடா, பிளானட்டோரியம்டா.''

''அதை அவசியம் பார்க்கப் போகிறேன்.''

''அப்படியே செய்.''

நன்றி: ஸ்பான்



பழைய கதை; புதிய பாடல்

கண்ணி ரண்டும் தெரியா மனிதர்
கரிய இருளிலே
கையில் அரிக்கேன் விளக்கை ஏற்றிப்
பிடித்து வந்தனர்.
கண்டான் எதிரே வந்த இளைஞன்
இந்தக் காட்சியை.
கிண்டல் செய்ய நினைத்தே அவனும்
கேள்வி கேட்டனன்:

"இரவும் பகலும் ஒன்று போலே
இருக்கும் உமக்குமே,
எந்த வகையில் இந்த விளக்கு
உதவும், கூறுமே?"

"அருகில் வருவோர் என்றன் மீது
மோதி டாமலே
அவருக் கிந்த விளக்கு வெளிச்சம்
உதவு மல்லவோ?"

எதற்கு விளக்கு?

குழந்தைக்கவிஞர்





குழந்தைகள் ஒரே ரகம்

சி. ஆர். நாகராஜன்

அந்தக் குழந்தை 'ஓ'வெனப் பெருங்குரல் எடுத்து அழுதது. அது ஆரம்பித்து விட்டால் ஆலைச் சங்கு கூடத் தோற்றுப் போகும். அவ்வளவு சத்தம்! அதன் அம்மா அழுகையை நிறுத்த இன்னும் இரண்டு வைத்த தால், அது தன் உச்ச ஸ்தாயியை எட்டிப் பிடித்தது. எனக்குப் பரிதாபம் தாளவில்லை. கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தேன்.

எதிரே பூவரச மரத்தடிக் குடிசையி லிருந்து வெளிப்பட்ட குப்பம்மாள் குழந்தையை இடுப்பில் எடுத்துக் கொண்டு சமாதானப்படுத்தத் தொடங்கினாள். ஆகாயத்தைக்காட்டி ''இங்கே பாருடா கண்ணு, காக்கா பறக்குது; கொக்கு பறக்குது! அதோ அந்த மரத்திலே பார், கிளி குந்தி யிருக்குது. என் ராசா அழாதேடா!'' எனச் சொல்லிக் கொண்டே அதன் கண்களில் வழிந்த நீரைத் துடைத் தாள் தனது புடவைத் தலைப்பால்.

''எனக்கு அந்த பீப்பீ தான் வேணும்...ம்...ம்...'' என்று ராகம் இழுத்தான் குப்பம்மாளின் பையன்

''ராசா! அதெல்லாம் வாங்கற அளவு நமக்குக் காசு இல்லடா; இந்தா! இந்த ஊதலை ஊதிப் பாரு! நல்லாச் சத்தம் வரும்!'' — போன வருஷம் மாரியம்மன் திருவிழாவில் வாங்கிய மூங்கில் ஊதலைக் கொடுத்துச் சமாதானப்படுத்தினாள்.

அதை வாங்கிக் கீழே எறிந்த அவன், தன் அழுகையை நிறுத்த வில்லை. கோபமடைந்த குப்பம்மா ''ஆங்காரத்தைப் பாரு'' என்று மேலும் இரண்டு வைத்தாள்.

''அடுத்த வீட்டுப்படி மிதிக்கா தவளாயினும் பிள்ளையைப் பெத்த பிறகு நாலு வீட்டுப்படி ஏறித்தானே ஆகணும்'' என்று முணுமுணுத்த வாறே இடுப்பில் குழந்தையுடன் எனது அடுத்த வீட்டுக் காம்புவுண் டுக்குள் நுழைந்தாள் குப்பம்மாள்.

டவுனிலிருந்து அவன் அப்பா வாங்கி வந்திருந்த மௌத் ஆர்கன், பிளாஸ்டிக் ஊது குழல், மற்றும் சில பொம்மைகளை வைத்து விளையாடிக் கொண்டிருந்தான் பக்கத்து வீட்டுப் பையன் பாபு. அவன் அம்மா மில்லில் ஹெட்கிளார்க்காக வேலை பார்ப்பவர். விலையுயர்ந்த விளையாட்டுப் பொருள்களாக வாங்கி வந்து தருவார். அவன் அம்மா பாபு விளையாடும் அழகை அருகில் அமர்ந்து ரசித்துக் கொண் டிருந்தாள்.

''அம்மா...'' தயக்கத்துடன் தொடர்ந்த குப்பம்மாள் ''பையன் விடாம அழுவுறான்; அந்த வாயிலே வைச்சுப் பாடறதைக் கொஞ்சம்

குடுங்கம்மா. கொஞ்ச நேரம் பாடிட்டுத் தந்துடச் சொல்றேன்'' என கூனிக் குறுகி, எண்சாண் உடம்பை வளைத்துக் கேட்டாள்.

இவள் எதைக் கேட்கிறுள்? நான் எட்டிப் பார்த்தேன். ''ஓ! அந்த மௌத் ஆர்கனைக் கேட்கிறுளா?''

''அதெல்லாம் தர முடியாது. முப்பது ரூபா கொடுத்து டவுன்ல நாலு கடை தேடி நல்லதா வாங்கி யாந்து இருக்காரு; உன் பிள்ளை கடிச்சு உடைச்சுடுவான்''— இது பாபுவின் அம்மா.

குப்பம்மாவின் இடுப்பிலிருந்த குழந்தை அதையே ஆவலாகப் பார்த்துக் கொண்டிருந்தது. பாபு அந்த மௌத் ஆர்கனை அப்போது வாயில் வைத்து வேண்டுமென்றே இனிய இசை எழுப்பி, அந்த ஏழைக் குழந்தையின் அழுகையை அதிகப் படுத்தினுன்.

''அதெல்லாம் ஒடைக்காம நான் பத்திரமாப் பாத்துக்கிறேன். கொஞ்சம் கொடுங்கம்மா'' எனக் கெஞ்சினுள் குப்பம்மாள்.

''முடியாதுன்ஞ முடியாதுதான். ஐயோ, எச்சிலாயிடும்''

பாபு இப்போது பந்தை எடுத்துக் கொண்டு தோட்டத்துப் பக்கம் விளையாடப் போய் விட்டான்.

''இப்ப சும்மாத்தானே இருக்கு! ஒழுங்காக் கொஞ்ச நேரத்திலே திருப்பித் தந்துடறேன்'' எனக் கூறிய குப்பம்மாள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த என்னையும் விவகாரத்தில் இழுத்தாள். ''சார், நீங்களாவது கொஞ்சம் சொல்லி வாங்கிக் கொடுங்க. கொஞ்ச நேரத்திலே திருப்பித் தந்துடறேன்'' என்று என்னிடம் சிபாரிசுக்கு வந்தாள்.

அவளது பணிவான வேண்டுகோளும், ஏழ்மையும் எனது உள்ளத்தை உலுக்கின. உலக மண்ணில் மேடு பள்ளங்களை வைத்த இறைவன் மனித வாழ்க்கையிலும் மேடுபள்ளங்களை வைத்து விட்டானே! ஏன்தான் இந்த ஏற்றத் தாழ்வோ?

எப்படியோ சிபாரிசு செய்து அந்த மௌத் ஆர்கனை வாங்கிக் கொடுத்து விட்டேன். குப்பம்மாவின் குழந்தையின் முகத்தில் குதூகலம் கொப்பளித்தது. என் கண்கள் பனித்தன.

மதிய சாப்பாட்டுக்குப் பின் சிறிது கண் அயர்ந்தவன், பக்கத்து வீட்டு பாபுவின் அழுகுரல் கேட்டு எழுந்தேன். பாபு சமர்த்தாச்சே! ஏன் அழுகிறுன்?

''அழாதேடா பாபு! அப்பா வந்ததும் ஐஸ்கிரீம் வாங்கித் தரச் சொல்கிறேன். இந்தா இப்ப நெய் பிஸ்கட்



சாப்பிடு'' எனச் சமாதானப்படுத்தினாள் அடுத்த வீட்டு அம்மா.

பையன் நிறுத்துவதாகத் தெரியவில்லை. ஒன்றும் மசியக் காணோம். 'மொத், மொத்' என்று அடி வாங்கிய பாபு உரக்க அழலானான். காலையில் குப்பம்மாளின் மகனுக்கு விழுந்ததற்கு இது ஒன்றும் குறைந்ததாகத் தெரியவில்லை.

குப்பம்மாள் இன்னும் மௌத் ஆர்கனைத் தரவில்லையா? வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தேன். ஜன்னல் வழியாகப் பார்த்ததில் பக்கத்து வீட்டுக்கார அம்மா பாபுவை இடுப்பில் வைத்துக் கொண்டு குப்பம்மாவின் குடிசையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தாள்.

சண்டை போடப் போகிறாளா? நான் மெதுவாக வாசலுக்கு வந்தேன்.

''அதைக் கொஞ்சம் கொடு; பையன் விடாமல் அழுகிறான்''—பாபுவின் அம்மா.

''அதெல்லாம் வேணாங்க; உங்க பையனுக்குத் தெரியாது; தின்னுவான்''—குப்பம்மாள்.

என்ன கதை அப்படியே தலைகீழாகத் திரும்புகிறது போலிருக்கிறதே! நான் ஆச்சரியமாகக் கவனித்தேன்.

''பரவாயில்லை. அதுதான் வேணுமின்னு அடம் பிடிக்கிறான். கொஞ்சம் கொடம்மா!''

''பாபுவுக்குப் பழக்கமில்லீங்க; கடிச்சு உள்ளே போய்த் தொண்டையில சிக்கிக்கின ஆபத்துங்க!'' குப்பம்மாள் எப்படியோ சமாளித்துப் பார்த்தாள்.

இவள் கெஞ்ச, அவள் மறுக்க, எனக்கோ ஒரே ஆச்சரியம்! காலையில் இருந்த நிலைமை மாறி விட்டதே! பணக்கார வீடு படியிறங்கிக் குடிசையின் முன்னால் கையேந்தி நிற்கிறதே! என்னே காலத்தின் கோலம்! முற்பகலில் இருந்தது பிற்பகலில் மாறிவிட்டதே!

என்னைப் பார்த்த பாபுவின் அம்மா, ''சார், நீங்க சொல்லுங்க சார்! பாபு ஒரேயடியா அடம் பிடிக்கிறான். அந்த மௌத் ஆர்கன் வேணாமாம். இந்த பீப்பீதான் வேணுமாம்'' என்றாள்.

நான் அப்போதுதான் பார்த்தேன். குப்பம்மாவின் மகன் பூவரசம் இலையில் செய்யப்பட்ட பீப்பீயை வாயில் வைத்துக் கொண்டு ஊதிக் கொண்டிருப்பதை.

ஓ! இலையில் செய்யப்பட்ட ஊதல்! இயற்கையின் துணையுடன் இன்பநாதம்!

எனக்கும் அதைச் செய்யத் தெரியாததால் என் வேண்டுகோளுக்கிணங்கக் குப்பம்மாள் ஒரு பூவரசம் இலையைப் பறித்து அதன் நரம்பைக் கிழித்து, மடக்கிச் சுருட்டி, வாயில் வைத்து ஒருதரம் 'ப்பீப், ப்பீப்' என்று சோதனை செய்தாள்.

அதே எச்சில் இலையைப் பாபுவிடம் தந்தாள். பாபுவின் அம்மாவுக்கு இப்போது எச்சில் கண்ணில் படவில்லை. அருமை மகனின் அழுகையை மாற்றுவது ஒன்றே குறிக்கோள். பாபு 'ப்பூ, ப்பூ' என ஊதிப் பார்த்து சத்தம் வராமல் அழுதான். மீண்டும் மீண்டும் முயற்சி செய்தான். 'பீப், பீப்' என்று சத்தம் வந்துவிட்டது! ''ஹையா! எனக்கும் ஊத வந்திருச்சே!'' என்று மகிழ்ச்சிக்கூச்சலிட்டான். பாபுவின் அழுகை ஓய்ந்து ஆனந்தம் அடைந்ததைக் கண்ட தாயின் மனமும் முகமும் பூரித்தன.

ஒன்று சேர்த்தால்?


—விடை

1. 2+12+14=குடை.
2. 6+7+18=பானை.
3. 4+9+15=மணி.
4. 3+5+16=கெட்டில்.
5. 1+8+17=வாக்கிங்ஸ்டிக்.
6. 10+11+13=பக்கெட்.

ஆஸ்திரேலியாவில் மட்டுமே காணப்படும் விந்தை மிருகங்களில் "கோலா" என்னும் கரடியும் ஒன்று. இதன் சிறப்பு என்னவென்றால்...

இந்தக் கரடி தன் வாழ்நாள் முழுவதும் யூகலிப்டஸ் மரத்தின் இலைகளை மட்டுமே தின்று உயிர் வாழ்கிறது.






நமக்கு இரண்டு கண்கள் உள்ளன. இரண்டுக்கும் தனித்தனியாகப் பார்க்கும் சக்தி இருக்கிறது. இருந்தாலும் நாம் எதனையும் இரண்டாகப் பார்ப்பது இல்லை. ஒன்றாகத்தான் பார்க்கிறோம். இரண்டு கண்களின் பார்வையையும் வாங்கி ஒன்றாக்கித் தரும் பணி மூளையினுடையது.

விந்தை உலகம்


சீனாவை கி.மு. 246-ல் ஆண்ட மன்னன் சீன்-ஹி-கிராம்டி. சீனத்தின் புகழ்பெற்ற நெடுஞ்சுவரை எழுப்பியவனும் இவன்தான். சீனாவுக்கு சீன்-ஹி-கிராம்டி என்ற இவனது பெயராலேயே அப்பெயர் வந்தது என்கிறார்கள் சரித்திர ஆராய்ச்சியாளர்கள்





கடல் நீரைக் கொண்டு ஐஸ் செய்தால் அந்த ஐஸ் உப்பு கரிக்காது. நீர் மட்டுமே ஐஸாக மாறும். கடல் நீரில் இருக்கும் உப்பு தனியாகப் பிரிந்து போய் விடும்.

செந்தமிழ்ச்செல்வன்



கடவுளின் குழந்தை

கதை: ஆனந்தி படம்: வினு








ஒரு நாள் ஜோசப் என்பவர் வேலை செய்யும் தச்சுப் பட்டரையைத் தாண்டி மேரி செல்ல நேர்ந்தது. அவர்கள் கண்கள் சந்தித்தன.

மேரி வீடு திரும்பிய பின்னர் தேவதூதன் கேபிரியல் தோன்றினர்.






மேரியும் ஜோஸப்பும் திருமணம் செய்து கொண்டு எளிய வாழ்க்கை நடத்தி வந்தார்கள்
ஒரு நாள்... ரோம் நகரத்திலிருந்து சக்கரவர்த்தியின் கட்டளையை எல்லா மக்களுக்கும் தெரியப் படுத்தினார்கள் தூதுவர்கள்.
ரோமாபுரி சாம்ராஜ்யத்தில் வசிக்கும் ஒவ்வொரு பிரஜையும் அவரவர்களுடைய சொந்த ஊருக்குச் செல்ல வேண்டியது. சக்கரவர்த்தியின் பிரஜைகளைக் கணக்கெடுக்கும் வேலை நடந்து வருவதால் உடனே அவரவர் ஊருக்குப் போய் விட வேண்டும் என்பது ஸீஸரின் கட்டளை.
இதைக் கேட்ட ஜோஸப் கவலையடைந்தார். மேரியுடன் அவர் பெத்தலேம் என்ற தம்முடைய ஊருக்குப் போக வேண்டும்.
வீடு திரும்பியதும்...
மேரி பயணம் உனக்குக் கஷ்டமாக இருக்குமே என்று வருத்தப் படுகிறேன்.
ஒரு கஷ்டமும் இல்லை. புறப்பட ஏற்பாடுகள் செய்வோம்.
வெகு தொலைவில் இருந்த பெத்தலேம் ஊருக்கு வேறு பலருடன் சேர்ந்து இவர்களும் புறப்பட்டார்கள். மேரியைத் தங்களுடைய கழுதையின் மீது அமர்த்திக் கூடவே நடந்தார் ஜோஸப்.



குளிர் காலம். இரவு நேரங்களில் கூடாரம் அமைத்து, தீமூட்டி உணவு சமைத்து உண்டு தூங்கினார்கள்.
இன்னும் ரொம்ப தூரம் இருக்கிறதா?
அதோ! அந்தச் சிறு குன்றில் விளக்குகள் தெரிகின்றன பார்த்தாயா! அதுதான் நம் ஊர்.
பெத்தலெமை அடைந்ததும்...
இன்று உங்கள் வீட்டில் தங்குவதற்கு இடம் தருவீர்களா?
இடம் இல்லையே.
எங்குமே தங்க இடம் கிடைக்கவில்லை.
உள்ளே இடமே இல்லையே.
என் மனைவி மிகவும் களைத்து விட்டாள். உங்கள் சத்திரத்தில் தயவு செய்து தங்க இடம் தர வேண்டும்.


அதோ அந்தக் கொட்டகையில் வேண்டுமானால் தங்கிக் கொள்ளுங்கள். தலைக்கு மேல் கூரையாவது இருக்கும்.
நன்றி! ஐயா!
மாட்டுத் தொழுவத்தின் உள்ளே...
இந்த வைக் கோலை எடுத்துப் பரப்பிக் கொள்ளுங்கள். குளிர் காற்றைத் தடுக்க கதவுக்கு ஒரு திரை தொங்க விட்டுக் கொள்ளுங்கள்.
அன்றிரவு அந்தக் கொட்டகையில் கிறிஸ்து பெருமான் அவதரித்தார்.
கொட்டகையின் மீது ஒரு புதிய நக்ஷத்திரம் ஒளி சிந்தியது.
பெத்தலேம் கிராமத்தைச் சுற்றி இருந்த குன்றுகளிலும் புல் வெளிகளிலும் இடையர்கள் தங்கள் ஆடுகளை மேய்ப்பார்கள்.


பொழுது சாயும் நேரத்தில் தங்கள் ஆடுகளைச் சேர்த்துப் பட்டியில் அடைப்பார்கள்.
இருபத்தெட்டு முப்பது.. நாற்பது.
மாட்டுத் தொழுவத்தில் கிறிஸ்து பிறந்த அன்று இரவு.
இரவு என்ன அழகாய் இருக்கிறது.
ஆமாம்! ஒரே சந்தோஷமாய் இருக்கிறது.
அதோ பாருங்கள் வெளிச்சம்.
என்ன? என்ன?
நம்மிடம் வருகிறதே!
ஒளிவட்டத்தில் இரண்டொரு தேவதைகள் தோன்றல்.
பயப்பட வேண்டாம். எல்லா மக்களும் மகிழும் செய்தியைக் கேளுங்கள்.


பெத்தலேம் நகரில் இன்று தேவ மகனான கிறிஸ்து பிறந்திருக்கிறார். அந்தக்குழந்தை மாட்டுத் தொழுவத்தில் நீர்த் தொட்டியில் கண் வளர்கிறது.
ஒளி வட்டம் வளர்ந்தது. பல தேவ தூதர்கள் ஆனந்தம் பொங்கப் பாடினார்கள்.
இறைவனின் புகழ் பெருகுவதாக.
பூவுலகில் அமைதி நிலவுவதாக.
மனிதர்களிடை அன்பு நிலைப்பதாக.
ஒளி வட்டம் மறைந்தது.
என்ன அற்புதமான இரவு!
உடனே நாம் பெத்தலேம் போவோம்.
இந்த ஆட்டுக் குட்டியைப் பரிசாகக் கொண்டு செல்வோம்.
பெத்தலேம் நோக்கி வழி நடந்தார்கள்.
அந்த நக்ஷத்திரத்தைப் பார். பெத்தலேம் நகர் மீது ஒளி வீசுகிறது!
பெத்தலேம் நகரமே தூங்கிக் கொண்டிருந்தது. தேவ தூதர்கள் சொன்ன அற்புதக் குழந்தையைத் தேடி அலைந்தார்கள் இடையர்கள்.
அங்கே வெளிச்சம் தெரிகிறது போய்ப் பார்க்கலாம்.

சின்னஞ்சிறு குழந்தையை அணைத்துக் கொண்டு மேரி அமர்ந்திருப்பதைப் பார்த்தார்கள். ஒவ்வொருவராக அருகில் வந்து மண்டியிட்டு வணங்கினார்கள்.




ஆட்டுக்குட்டியை அவர்கள் பரிசளித்ததும் மேரி புன்னகை புரிந்தாள். குழந்தையும் தன் சிறிய கண்களைத் திறந்து பார்த்தது.





சிறிது நேரம் குழந்தையைப் பார்த்து மகிழ்ந்த அந்த எளிய ஆட்டிடையர்கள் சந்தோஷமாகக் கிளம்பிச் சென்றார்கள்.
தெய்வக் குழந்தை பிறந்த அன்று எல்லா ஜீவராசிகளும் அளவற்ற மகிழ்ச்சியால் பூரித்தன.
கிறிஸ்து பிறந்த மாட்டுத் தொழுவத்தின் அருகில் மூன்று மரங்கள் இருந்தன.
ஆலிவ் மரம் தன்னுடைய பரிசாகப் பழக் கொத்துக்களை ஈந்தது.
ஈச்ச மரம் பழங்களைச் சொரிந்து தன் இன்பத்தைத் தெரிவித்துக் கொண்டது.
ஆனால் பாவம்! ஊசி இலை மரத்துக்குப் பழம் பூ எதுவும் இல்லை. அதற்குத் துக்கம் தாங்க முடியவில்லை.


ஊசிஇலை மரம் அழுவதை நட்
சத்திர தேவதைகள் பார்த்தன.
ஐயோ! பாவம்!
இந்தமரம் கண்ணீர்
விடுகிறது. நாம்
அதற்கு உதவி
செய்வோமே.
இரண்டு நட்சத்திரங்களும்
சிலிர்த்துக் கொண்டன.
என்ன அற்புதம்!
அழுது கொண்டிருந்த மரத்தின்
மீது ஒளித் துகள்கள் சிந்தின.
ஊசி இலை மரத்
தின் மீது
சின்னஞ்சிறு
விண்மீன்கள்
ஜொலித்தன.
பறவைகளும்
மரங்களும்
ஆடுகளும்
அதிசயத்துடன்
அந்த ஊசி
இலை மரத்தைப்
பார்த்தன.
அன்று முதல் என்றும் பசுமையோ
டிருக்கும் ஊசி இலை மரத்துக்கு
கிறிஸ்துமஸ் மரம் என்ற பெயர்
வழங்கிற்று.


கிறிஸ்துமஸ் பண்டிகையை ஆனந்தமாகக் கொண்டாடுகின்ற
குழந்தைகளுக் கெல்லாம் பரிசுகளைச் சுமக்கும் பாக்கியம் பெற்ற
மரமாக விளங்குகிறது கிறிஸ்துமஸ் மரம்.
கிறிஸ்து பெருமான் பிறந்த
நாடு அந்தக் காலத்தில் ஜூடா
என்று அழைக்கப்பட்டு வந்தது.
ஜூடாவுக்குக் கிழக்கே வெகு
தூரத்தில் ஒரு நாட்டில் மூன்று
அறிஞர்கள் இருந்தார்கள்.
தெய்வ பக்தி மிகுந்தவர்கள்.
அவர்கள் வைத்தியர்களாகவும்
இருந்தார்கள்.
அரசர்கள் முதல் பொதுமக்கள்
வரை பலர் அவர்களிடம் ஆலோசனை
கேட்க வருவார்கள்.


இரவில் மூவரும் உயரமான கட்டிடத்தில் ஏறி வானத்து நக்ஷத்திரங்களை ஆராய்ந்து வந்தார்கள்.
ஓர் இரவு...
சில நாட்களாக ஒரு புதிய ஒளி வான மண்டலத்தில் காணப்படுகிறது.
ஒரு புதிய நக்ஷத்திரம் உருவாகிறது.
புதிய நக்ஷத்திரம் உதிக்கிறது. ஒரு பேரரசர் பிறக்கப் போகிறார் என்று ஆண்டவன் நமக்கு அறிவிக்கிறார்!
மறுநாள்...
நேற்றிரவு நாம் கண்ட விண்மீனைத் தொடர்ந்து நாம் போக வேண்டும் என்று தோன்றுகிறது.
ஆம்! இன்றே புறப்படுவோம். அந்த அற்புதக் குழந்தையை தரிசனம் செய்ய வேண்டும்.
மூவரும் ஒட்டகங்களின் மீது ஏறிக்கொண்டு பிரயாணத்தைத் தொடங்கினார்கள்.


இரவில் நக்ஷத்திரம் அவர்களுக்கு வழிகாட்டியது. பல நாட்கள் பிரயாணம் செய்து ஜெருஸலம் நகரத்தை அடைந்தார்கள்.
என்ன கம்பீரமான நகரம். இங்குதான் நமது அரசர் பிறந்திருக்க வேண்டும்.
இன்று நகருக்கு வெளியே தங்கி நாளை காலையில் விசாரிக்கலாம்.
மறு நாள் காலை நகர வாசலில்...
யார் நீங்கள்? எதற்கு வந்திருக்கிறீர்கள்?
நாங்கள் கிழக்கே வெகு தொலைவிலிருந்து வருகிறோம் அப்பா. யூதர்களின் அரசர் பிறந்திருக்கிறாராம். அவரைத் தரிசிக்க வந்தோம்.
இங்கே ஹெராட் மன்னர் தான் அரசாள்கிறார். அதோ தெரிகிறதே அது தான் அரண்மனை.
மூவரும் முதலில் ஜெருஸலத்தின் பிரசித்திபெற்ற யூதர்களின் கோவிலுக்குச் சென்றார்கள்.


அப்பிறகு ஜெருசலத்தின் தெருக்களில் மேலும் கீழும் அலைந்தார்கள்.
யூதர்களின் அரசர் பிறந்திருக்கிறாராமே! தெரியுமா?
தெரியவில்லையே.
அப்படிக் கேள்விப் படவில்லையே.
அரண்மனையில் ஹெராட் அரசனை ஒரு நண்பன் அணுகி....
அரசே! ஜெருசலத்துக்கு மூன்று அயல் நாட்டார் வந்திருக்கிறார்கள், தெரியுமா?
இந்த நகருக்கு யாராவது வந்து கொண்டே தான் இருக்கிறார்கள். அது என்ன அதிசயம்?
அவர்கள் யூதர்களின் அரசர் பிறந்திருப்பதாகவும் ஒரு நக்ஷத்திரம் அவர்களுக்கு வழி காட்டியதாகவும் சொல்லுகிறார்கள். பலர் அவர்கள் சொல்வதை நம்புகிறார்கள்.
ஆ! உடனே அவர்களை இங்கு அழைத்து வா.
அறிஞர் மூவரும் மன்னர் முன் கொண்டு நிறுத்தப் பட்டனர்.
உங்கள் வரவு நல் வரவாகுக. இங்கு வந்த காரணம் என்ன?
நாங்கள் வான மண்டலத்தை ஆராய்பவர்கள். புதிய விண்மீன் தோன்றியதால் உலகத்தையே கட்டியாளும் மன்னன் பிறந்ததாகப் பொருள். அத்தகைய நக்ஷத்திரத்தைத் தொடர்ந்து வந்திருக்கிறோம்.


கண்டு பிடித்து விட்டீர்களா அவனை?
தாங்கள் காட்டக்கூடும் என்று நினைத்தோம்.
ஹெராட் வஞ்சனையாகப் பேசினான்.
எனக்குத் தெரிந்து அப்படி ஒரு மன்னன் பிறக்கவில்லை. நீங்கள் கண்டால் எனக்கு அவசியம் தெரிவிக்க வேண்டும். நானும் அம்மன்னனுக்குப் பரிசுகள் அளிக்க விரும்புகிறேன்.
மூன்று அறிஞரும் ஜெரூஸலத்தை விட்டுக் கிளம்பினார்கள்.
அரசன் பேசியபோது எனக்கு ஒரு பயம் ஏற்பட்டது.
ஹெராட் கொடுங்கோலன் என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.
அதோ. அந்த விண்மீன் வழி காட்டுகிறது.
விண்மீன் வழிகாட்ட பெத்லேம் நகரை அடைந்து அரண்மனை இருக்கிறதா என்று தேடினார்கள். கடைசியில் அவர்கள் தொடர்ந்து வந்த விண்மீன் ஒரு மாட்டுக் கொட்டில் மீது ஒளி பொழிவதைக் கண்டார்கள்.
இது ஒரு பேரரசர் பிறந்திருக்கும் இடமாக இருக்குமா?
ஆண்டவன் செயலை யார் அறிவார்?
நக்ஷத்திரத்தை நம்புவோம்


கதவு திறந்தது. மூவரும் மெல்ல உள்ளே வந்தார்கள். மேரியின்
மடியில் இருந்த குழந்தையைக் கண்டதும் அவர்கள் ஐயம்
தீர்ந்தது.
நாங்கள் யூதர்களின்
அரசரைப் பூஜிக்க
வந்திருக்கிறோம்.
இந்தத் தங்கப்பேழையை வருங்
கால மன்னருக்குப் பரிசாக
அளிக்கிறேன்.
இந்த மணம் வீசும்
அத்தரை எங்கள்
மன்னருக்கு
அளிக்கிறேன்.
தலை சிறந்த
இந்தத் தைலத்தை
நான்
காணிக்கையாக்கு
கிறேன்.
இந்தக் குழந்தை தன் சாம்ராஜ்யத்தைப் பெறும்
வலிமையைப் பெற்று விளங்கட்டும்.
அன்றிரவு வெளியே கூடாரமடித்து மூவரும்
தங்கினார்கள்.


அவர்களுள் முதியவர் ஒரு கனவு கண்டார். கனவில் தேவ தூதன்.
ஹெராட் இந்தக்குழந்தையைக் கொல்ல நினைத்திருக்கிறான். நீங்கள் ஜெருஸலம் போக வேண்டாம்.
கனவு கண்டவர் திடுக்கிட்டு விழித்தார்.
தேவ தூதன் சொல்லியது மெய்யாகத் தான் இருக்கும்.
அவர் மற்ற இருவரையும் எழுப்பி...
நம்மை வேறு வழியாகப் போய் விடச் சொல்லி என் கனவில் தேவ தூதன் சொன்னார். நாம் உடனே கிளம்பி விடுவோம்.
யூதர்களின் அரசனை, உலகாளப் பிறந்தவனை, கடவுளின் குழந்தையைத் தாங்கள் கண்டதாக மன்னன் ஹெராதுக்குத் தெரிவிக்காமலே மூன்று அறிஞர்களும் தங்கள் ஊர் திரும்பி விட்டனர்.
2000 ஆண்டுகளுக்கு முன்பு அற்புத நிகழ்ச்சிகளோடு பிறந்த இந்தக் குழந்தையே ஏசு பிரான் என்றும் கிறிஸ்து என்றும் புகழ் பெற்று உலகுக்கே வழி காட்டியாக விளங்கியது. அவர் பெயரால் கிறிஸ்துவ மதம் தோன்றி வளர்ந்து உலகம் முழுதும் பரவியது. கிறிஸ்துவ மதத்தின் மிக எளிய ஆனால் மிகச்சிறந்த கொள்கை இதுதான்: ஒருவரை ஒருவர் நேசியுங்கள்.
1985
புத்தாண்டு வாழ்த்துக்கள்!

ஒரு பூனை புலியாகிறது



டாக்டர் பூவண்ணன்

2. தேனீ கொட்டியது

அலறிய சேரனின் உடம்பு நடுங்கியது.

அவன் மீண்டும் அலறியிருப்பான். அதற்குள், ''தம்பி'' என்ற குரல் கேட்டது. சற்று முன்பு அவன் விழுந்தது, பிணத்தின் மீதல்ல; உயிருள்ள ஒரு மனிதன் மீது தான்! அவன் கைதான் சேரனின் காலைப் பிடித்தது; அவனுடைய குரல்தான், அவனை அழைத்தது.

''தம்பீ, பயப்படாதே!''

அதே குரல்!

''இந்த இருளிலும் என் உடல் நடுங்குவதைக் கீழே விழுந்துகிடக்கும் மனிதன் கவனித்துவிட்டானே?''

''தம்பீ, அச்சத்தை அகற்றி, நான் சொல்வதைக் கேள்.''

அந்தக் குரல்தான், குறள் போல அறிவுரை கூறியது.

அச்சம் தவிர்!

ஆண்மை தவறேல்!

ப்ாரதியாரின் புதிய ஆத்திசூடியை அவன் படித்திருக்கிறான்! அதைப் படிக்கத் 'தெரியும்! பயன்படுத்தத் தெரியவில்லையே!

''பயப்படாதே, தம்பீ.''

சேரனின் பயம் முற்றிலும் நீங்காவிட்டாலும் படபடப்பு ஓரளவு குறைந்தது. நடுக்கமும் குறைந்தது!

அதைச் சேரனின் காலைப் பிடித்தவனால் உணர முடிந்தது. அவன் பிடியைத் தளர்த்திக் கையை விலக்கினான்.

''பயப்படாதே, தம்பி!''

குரலில் இருந்த கனிவு அவனை ஓடாமல் நிறுத்தியது.

''தம்பி, ஒரு உதவி செய்ய வேண்டும்! உன்னைக் காத்துக் கொள்ள விரும்பினால் நீ இந்த உதவியைச் செய்தே ஆக வேண்டும்.''

திடுக்கிட்டான் சேரன்.

''என்னைக் காத்துக் கொள்ளவா?''

சேரன் கேட்டான்.

''ஆமாம். உன்னைக் காத்துக் கொள்ளத்தான். உட்கார், சொல்கிறேன்.''

மந்திரத்துக்குக் கட்டுப் பட்டவன் போல சேரன் அந்த மனிதனின் சொல்லுக்குக் கட்டுப்

பட்டான். முழங்கால் இரண்டும் நிலத்தைத் தொட, காலின் விரல்கள் நிலத்தை உந்த, கைகள் இரண்டையும் முழங்காலின் மேல் வைத்து ஊன்றிய நிலையில் அமர்ந்த சேரன் கீழே விழுந்திருந்தவனை உற்றுப் பார்த்தான்.

அதற்குள் வானத்தின் இருள் கலையுமாறு நட்சத்திரங்கள் தோன்றின. மேகங்களின் இடையே நிலா தன் முழு வடிவைக் காட்ட முடியாமல் ஒளிந்து ஊர்ந்தது. அதனால் ஓரளவு வெளிச்சம் பரவியது.

அந்த வெளிச்சத்தில் கீழே விழுந்து கிடப்பவனைப் பார்க்க முடிந்தது.

நாற்பது வயது மதிக்கக் கூடியவன், தரையில் மல்லாந்து விழுந்திருந்தான். வயிற்றுப் பகுதியில்...

''ஐயோ... ரத்தம்! ஐயா, ரத்தம் கசியுதுங்களே! கீழே விழுந்தப்போ கல்லு முள்ளு குத்திட்டதுங்களா? இப்போ உங்களைக் காத்துக் கொள்ளத்தான் உதவி வேணும். நீங்க தப்பா என்னைக் காத்துக் கொள்ள உதவி செய்யணும்னு சொல்லிட்டீங்க.''

அந்த மனிதனின் முகத்தில் ஒரு குறுநகை படர்ந்தது. சேரன் கூறியதை மறுப்பது போலத் தலையை இடமும் வலமுமாக மெல்ல அசைத்தான்.

''இல்லை தம்பி, என்னைக் காத்துக் கொள்ள உதவி கேட்கவில்லை. என்னைக் காத்துக் கொள்ள முடியாது! வயிற்றிலே துப்பாக்கிக் குண்டு பாய்ந்து அரை மணி நேரமாச்சு. இப்பவே ஒரு டாக்டர் வந்தாலும் என்னைக் காப்பாத்த முடியாது!''

''துப்பாக்கியா? ஐயையோ! துப்பாக்கிக் குண்டு பட்டா ரத்தம் கசியுது? முதலில் உங்களைக் காப்பாத்தணும். இருங்க நான் போய் டாக்டரைக் கூட்டியாறேன்.''

எழுவதற்கு முயன்ற சேரனின் காலை மீண்டும் அவன் கை தொட்டது.

''இப்போது என்னைக் காப்பது முக்கியமல்ல. உன்னைக் காப்பது முக்கியம்.''
அவன் அழுத்திச் சொன்னான்.

''என்னைக் காக்கணும்னு சொல்றீங்க. நான் ஏதாவது ஆபத்திலே சிக்கிட்டேனுங்களா?''


''தம்பீ! இந்த நாடே இப்போ ஆபத்திலே சிக்கியிருக்கு. நாட்டுக்கு அழிவுன்னா, அதிலே வாழற உனக்கும் அழிவு. உன்னைப் போலக் கோடிக்கணக்கானவங்களுக்கும் அழிவு. இந்த நாட்டைக் காக்க நீ ஒரு உதவி செய்யணும். அது உண்மையில் உன்னைக் காக்கச் செய்யற உதவி. நான் சொல்றதைக் கவனமாக் கேளு. நான் இந்திய நாட்டு ஒற்றர் படையினருள் ஒருவன். எனக்கு அளிக்கப்பட்ட பெயர் தேனி. எங்கள் பிரிவில் நான் திறமையானவனாகக் கருதப் பட்டேன். அப்போதுதான் ஓ.பி.யு. தோன்றியது.''

''ஓ.பி.யு.வா? அப்படியென்றால்...?''

சேரன் கேட்டதும் அந்தத் தேனி விளக்கம் தந்து பேச்சைத் தொடர்ந்தான்:

ஒற்றர் படை சில ரகசிய செயல்களுக்கு, ரகசியமான பெயர்களை வழங்கும். அதிலே ஒன்று ஓ.பி.யு. இந்தியா, உலகிலுள்ள பெரிய குடியரசு நாடுகளில் அமெரிக்காவுக்கு அடுத்தது. ஆனால் இந்தியா கூட்டு சேராக் கொள்கை உடைய நடுநிலை நாடு. எந்த வல்லரசின் வலையிலும் விழாத இந்தியாவைத் தம்முடைய ஆதிக்கத்தில் கொண்டு வர வேண்டும் என்று பெரிய

ஓவியராகலாம்



நாடுகள் விரும்பும். சிறிய நாடுகளோ, எத்தனையோ சாதி மத மொழி வேற்றுமைகளுக்கு இடையே இந்தியா தலைநிமிர்ந்து நிற்பதைக் கண்டு பொறாமையால் மனம் புழுங்கும். அதனால் இந்தியாவுக்கு அவப்பெயர் உண்டாக்க, அதற்கு அல்லல் கொடுக்க வெளிநாட்டினர் சிலர் விரும்புவார்கள்;விரும்புகிறார்கள். அவர்கள் இந்தியாவில் குழப்ப நிலையை உண்டாக்க ஒரு திட்டம் தீட்டிச் செயல்படுகிறார்கள் என்று ஒரு தகவல் ஒற்றர் படைக்கு வந்தது. அந்தத் திட்டத்தைக் கண்டுபிடித்து அழிக்கும் செய்கைக்கு, ஆபரேஷன் ப்ளோ அப் (**Operation Blow Up**) என்று பெயரிட்டார்கள். அதன் சுருக்கமே ஓ.பி.யு.

ஓ.பி.யு.வில் பலரை ஈடுபடுத்தினார்கள். இந்தியாவின் மாநிலம் ஒவ்வொன்றிலும் தலைசிறந்த ஒற்றர்கள் செயலில் இறங்கினார்கள். அவர்கள் கண்டுபிடித்த செய்தி இரண்டு. முதலாவது: இந்தியாவில் குழப்பம் விளைவிக்க வெளிநாடுகள் முயல்வது உண்மை. இரண்டாவது: இந்திய மக்களின் அன்புக்கும் மரியாதைக்கும் உரிய தலைவர்களை ஒரே நாளில் கொலை செய்து, அப்பழியை உள்ளூர் கட்சிகள் மீது சுமத்திக் கலவரம் உண்டாக்குவது, அவர்கள் திட்டம்.

இந்த இரண்டையும் கண்டுபிடித்த பிறகுதான்,

தேனியிடம் பெரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இந்தச் சதித் திட்டத்தில் பங்கு பெற்றுள்ளவர்கள் யார், யார் எனக் கண்டு பிடிக்க வேண்டியது தேனியின் பொறுப்பானது. தமிழ் நாட்டவனான தேனி ஏறத்தாழ எல்லா இந்திய மொழிகளையும் அறிந்தவன். அதனால் பல மாதங்களாகப் பல மாநிலங்களில் சுற்றித் திரிந்தான். இறுதியாக பம்பாயில் சதிக் குழுவைச் சார்ந்த ஒருவனைக் கண்டுபிடித்து, அவனை நிழல் போலத் தொடர்ந்தான். இரண்டு நாட்களுக்கு முன் ஊட்டிக்கு வந்து சேர்ந்தான்.

ஊட்டியில் ஃபெர்ன் ஹில் பகுதியில் ஒரு பங்களாவில் சதித் திட்டத்தவர் கூடுகிறார்கள் என்பதை அறிந்த தேனி அந்தக் கூட்டத்தில் நடப்பதை அறிய முயன்றான். ஒரு ஈ காக்கை கூட பங்களாவுக்குள் நுழைய முடியாதபடி காவல் மிகுதியாய் இருந்தது. தேனியின் முயற்சிகள் பலிக்கவில்லை.

பங்களாவுக்குச் சிறிது தூரத்தில் இருந்த வானுயர வளர்ந்த பலாமரத்தில் ஏறி அமர்ந்து, சக்தி வாய்ந்த பைனாகுலர் மூலம் பங்களாவையே பார்த்தான் தேனி. சதியாளர்கள் ஓர் அறையில் கூடுவதைப் பார்க்க முடிந்தது. பம்பாயில் தேனி கண்டுபிடித்த மனிதன் உட்பட எட்டுப் பேர் அறையில் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் தலைவன் என்று தோன்றியது. அவனிடம் மற்றவர்கள் பணிவோடு நடப்பது தெரிந்தது. தலைவன் கைகளை ஆட்டி, மேஜையைக் குத்தி, மூக்கின் முனைக்கு வந்த கண்ணாடியைப் பின்னுக்குத் தள்ளி, பேசினான்..பேசினான்... வெகுநேரம் பேசினான். அனைத்தையும் பழங்காலத்து ஊமைப்படம் போலத் தேனி பார்த்துக் கொண்டிருந்தான்.

தலைவன் தன் கோட்டின் உள்புறம் இருந்த பையிலிருந்து, கோகுலம் அளவுள்ள—சிவப்பு அட்டை போட்ட ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்து மேஜையில் வைத்துக் கொண்டான். அதிலிருந்த பக்கங்களைப் புரட்டினான். அதிலேயே ஏதோ எழுதினான்.

தேனி அதை வேதனையோடு பார்த்தான். சதியாளர் தனக்கு வெகு அருகிலேயே கூடி மிக முக்கியமான முடிவு எடுப்பதைப் பார்க்க முடிந்ததே தவிர அவர்கள் பேசுவதில் ஒரு சொல்லைக் கூடக் கேட்க முடியவில்லையே என்று துடித்தான்.

அவர்கள் என்ன முடிவு செய்தார்கள்?

அதை மட்டும் அறிய முடிந்தால், அதற்கு விலையாகத் தன் உயிரையும் தரச் சித்தமாக இருந்தான்.

கண்ணாடி சன்னலுக்குப் பின்னே தெரிந்த, அறையிலிருந்த சதியாளர்களின் தலைவனைப் போலத் தோற்றமளித்தவன் எழுந்தான். மற்றவரும் எழுந்து விட்டார்கள். சில நிமிடங்களில் அந்த அறை காலியானது. தேனி காலியான அறையையே வெகுநேரம் பார்த்தான். வெறும் அறையைப் பார்ப்பதால் என்ன பயன்?

தேனி அப்போதும் மரத்திலிருந்து கீழே இறங்கவில்லை.

பத்து நிமிடத்தில் சிலர் அந்தப் பங்களாவிலிருந்து வெளியே சென்றனர். அவர்கள் அறைக்குள் இருந்தவர்கள்தாம். அவர்களில் யாரையாவது தொடர்ந்து போனால், சதியாளரின் முடிவுகளை அறிய முடியுமா?

தேனி சிந்தித்தான். அவன் பம்பாயிலிருந்து கண்காணித்து வரும் ஆசாமி வெளியே வந்தால் அவனைப் பின்பற்றிச் செல்ல நினைத்தான். அதுவரை மரத்திலே

இருப்பதற்குப் பதில் கீழே இறங்கி நிற்கலாமே!

தேனீ நினைத்துக் கொண்டிருக்கும் போதே பங்களாவிலிருந்து ஒருவன் வெளியே வந்தான். அவன் அறைக்குள் இருந்த தலைவன்— அதாவது, தலைவன் என்று தேனீயால் நினைக்கப்பட்டவன்.

அவன் பங்களாவிலிருந்து வெளியே வந்தான். சாலை வழியாகச் செல்லாமல், தேனீ ஏறியிருந்த மரம் இருந்த பகுதியில் நிதானமாக நடந்தான்.

அவன் எங்கே போகிறான்?

அது பிற்பகல். மணி நான்கு. அந்த நேரத்தில் அவன் சாலைகள் இல்லாத பகுதியில் செல்வது ஏன்? யாரையாவது சந்திக்கப் போகிறானா?

தேனீயின் பார்வை அவனைத் தொடர்ந்தது.


ஒரு நூறு முழம் வடக்கு நோக்கி நடந்து சென்ற அவன், அங்கிருந்து கிழக்கு நோக்கிச் சென்றான். பிறகு மேற்கு நோக்கி நடந்தான். கிழக்கும் மேற்குமாக நடந்து கொண்டிருந்ததைப் பார்த்த போது, 'இவன் வாக்கிங் செய்கிறான். உடல் நலத்துக்காக நடை போடுகிறான்' என்பது தெரிந்தது.

தலைவன் நடந்து கொண்டிருந்த இடத்துக்கருகே, ஒரு பங்களா. அதற்குள் இரண்டு சிறுவர்கள் சிவப்பு நிறமுள்ள ஒரு வட்டத் தட்டை (டிஸ்க்) வீசியெறிந்து விளையாடிக் கொண்டிருந்தனர். ஒரு சிறுவன் வீசியெறியும் தட்டு குட்டிச் சூரியன் போல கரகரவென சுழன்றபடி மேல் நோக்கி ஏறி, வான வில்லின் பாதையில் வருவது போலக் கீழ் நோக்கி இறங்கியது. அடுத்த முனையில் இருக்கும் சிறுவன் அதை மிக லாகவமாகப் பாய்ந்து பற்றி, மீண்டும் வீசி எறிந்தான்.

தேனீயும் ஒரு காலத்தில் சிறுவனாக இருந்தவன் தானே! அவனையறியாமல் அவன் மனம் அந்தப் பறக்கும் தட்டில் பதிந்தது.

திடீரென்று பறக்கும் தட்டு கைநழுவித் திசைமாறி, மேலெழுந்தது. வெகு உயரத்துக்குப் போனது. அந்தத் தட்டிலேயே தேனீயின் பார்வை படிந்தது.

மேலெழுந்த தட்டு கீழ்நோக்கி இறங்கும் இடத்தில் ஒரு பலா மரம். அதில் தேன்கூடு! பறக்கும் தட்டு அந்தத் தேன் கூட்டில் பட்டென்று மோதியது! உடனே அந்தத் தட்டுடன்



பாதி தேன் கூடு வெட்டுண்டு கீழ்நோக்கிச் செல்வதற்கும், நடந்து கொண்டிருந்த தலைவன் அங்கே வருவதற்கும் சரியாக இருந்தது. பாதி தேன் கூடு அவன் தலையில் மோதி, தோளில் குதித்துக் கீழே விழுந்தது.

மறுவினாடி!

''ஆ... ஓ....'' என்று அலறிய தலைவன் ருத்ர தாண்டவம் ஆடினான்.

தேன் கூட்டிலிருந்த தேனீக்கள் தலைவனை முற்றுகையிட்டு, முகம், கை, கால் என்று கண்ட இடங்களில் கொட்டின! அவன் வலி பொறுக்க முடியாமல், குதித்துக் கூச்சலிட்டு ஓடினான். தேனீக்களோ அவனை விரட்டிச் சென்றன. தலைவன் ஒரு வழியாக பங்களாவுக்குள் நுழைந்து விட்டான்.

தேனீக்கு—ஒற்றன் தேனீக்கு இக்காட்சி மகிழ்ச்சி அளித்தது.

''நமது தாய்நாட்டுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்யும் ஒருவனை இப்படித்தான் கொட்ட வேண்டும்! எனக்கு, அவனை ஓட ஓட விரட்டிய தேனீ என்ற பெயர் மட்டும் இருக்கிறது. செயல் இல்லையே?''

தேனீ நினைத்தபடி தேன் கூடு விழுந்த இடத்தைப் பார்த்தான் தேன் கூட்டுக்குப் பக்கத்தில் சிவப்புத் தட்டு! அதற்குச் சிறிது தூரத்தில்...? அது என்ன? இன்னொரு சிவப்புத் தட்டா? சிறுவன் எறிந்தது ஒரு தட்டுத்தானே?

தேனீயின் பார்வை சிறுவர்கள் விளையாடிய பங்களாவைத் துழாவியது. அங்கே சிறுவர்கள் இல்லை.. அவர்கள் எறிந்த தட்டுப் பட்டுதான் ஒருவர் ஐயோ என்று கூச்சலிடுகிறார் என்று நினைத்தார்கள். அதனால் கூச்சல் கிளம்பியதும் அவர்கள் வீட்டுக்குள் ஓடி மறைந்து விட்டார்கள்.

தேனீ மீண்டும் தேன் கூடு விழுந்த இடத்தைப் பார்த்தான். வந்தது ஒரு சிவப்புத் தட்டுத்தானே? இரண்டு எங்கிருந்து வந்தது?

தேனீயின் பார்வை கூர்மையானது.

தேன் கூட்டுக்கு அருகே இருப்பது தான் சிவப்புத் தட்டு. சற்று தூரத்தில் இருப்பது வட்டமான தட்டல்ல!



அது என்ன?

தேனி அவசர, அவசரமாகக் கழுத்தில் தொங்கிய பைனுகுலரைக் கையில் பிடித்துக் கண்ணில் பொருத்திப் பார்த்தான்.

அது வட்டமானதல்ல!

நீண்ட சதுர வடிவம் பெற்றது!

இரண்டாக மடிந்த மடிப்பு சீராகாமல், ஒரு பகுதி நிமிர்ந்து நின்று காற்றில் அசைந்தது.


அது சிவப்பு அட்டை போட்ட நோட்டு! தலைவன் ரகசியக் கூட்டத்தில் பயன்படுத்திய நோட்டு!

அது எப்படி அங்கே வந்தது?

தலைவனின் கோட்டுப் பைக்குள் இருந்தது. தேனீக்கள் கொட்டிய போது அவன் ஆடிய ருத்ர தாண்டவத்தில் கீழே விழுந்து விட்டது. அதைக் கவனிக்காமல் அவன் ஓடி விட்டான்.

இதை உணர்ந்த தேனியின் முகம் மலர்ந்தது. 'கடவுளே! உனக்கு ஆயிரம் நன்றி!' என்று கூறிக் கொண்டே மரத்திலிருந்து சரசரவென இறங்கினான். நோட்டு இருந்த இடத்தை நோக்கி ஓடினான்.

கோஹினூர் வைரத்தைக் கண்டெடுத்த குதூகலத்துடன் தேனி சிவப்பு நோட்டுப் புத்தகத்தை எடுத்துப் புரட்டினான். அவன் முகத்தில் ஒரே வியப்பு. அந்த நோட்டில் மாநிலந்தோறும் அந்தச் சதிக் குழுவில் ஈடுபட்டிருப்பவர்களின் பட்டியல் இருந்தது. அதை வியப்போடு புரட்டிய தேனி கடைசிப் பக்கத்தில் இருந்த



செய்தியைக் கண்டு வேதனை அடைந்தான்.

சிவப்பு நோட்டுப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு ஓடிவிடலாமா?

கூடாது!

"நோட்டுப் புத்தகம் காணேம்' என்பதை அறிந்து தலைவன் இன்னும் கொஞ்ச நேரத்தில் இங்கே வந்து தேடுவான். நோட்டு இல்லை என்றால், அது யாரிடம் சிக்கியது என்று ஆராய்வான். அதற்கெல்லாம் இடம் தராமல் நோட்டில் இருப்பதைப் படம் எடுத்துக் கொண்டு அதை அங்கேயே போட்டுவிட்டுப் போகலாம்."

தேனியின் திட்டம் சிறந்ததுதான், அது நிறைவேறியிருந்தால்! பலா மரத்தின் பின்னே நோட்டுப் புத்தகத்தைப் பிரித்து வைத்தான். அவனிடம் உள்ள நுட்பமாகப் புகைப்படம் எடுக்கும் மிகச் சிறிய—ஒரு ஃபைவ் ஸ்டார் சாக்லெட் அளவுள்ள கேமிராவால் படம் எடுத்தான். ஒவ்வொரு பக்கமாகத் தள்ளிப் படமெடுத்தான். கடைசிப் பக்கத்தைப் புரட்டி வைத்த போது தடதடவென யாரோ ஓடி வரும் சத்தம் கேட்டது.

தலைவனும் மற்றொருவனும் அவனை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் தான் புகைப்படம் எடுப்பதைப் பார்த்து விட்டார்கள் என்பதை உணர்ந்த தேனி அங்கிருந்து ஓடினன்.

தலைவன் தன்னுடன் வந்த ஆளிடம், "அவன் ஓ.பி.யு.வின் ஆள். நம் திட்டத்தைப் படம் எடுத்து விட்டான். அவனைப் பிடி. ஓடு. நான் இன்னும் சிலரை அனுப்புகிறேன்" என்று உத்தரவிட்டான்.

தலைவனுடன் வந்த ஆள் தேனியைப் பின் தொடர்ந்து ஓடினன்.

தலைவன் தேனி விட்டுச் சென்ற நோட்டுப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு பங்களாவுக்குள் ஓடினன். அங்கிருந்து சிலரை அனுப்பினன்.

தேனி வெகுவேகமாக ஓடினன். ஃபெர்ன் ஹில் பகுதியிலிருந்து பேருந்து நிலையத்துக்குப் போனன். அங்கிருந்து கடை வீதிக்குள் நுழைந்தான்; சேரிங்கிராஸுக்கு ஓடினன். இறுதியாகப் புகழ்பெற்ற அரசினர் பூங்காவில் நுழைந்து விட்டான். அப்போதுதான் அவனல் கொஞ்சம் மூச்சு விட முடிந்தது.

தேனியைப் பிடிக்க வந்தவர்களும் பூங்காவில் நுழைந்தனர். ஏராளமான மரஞ்செடிகள் நிறைந்த பல ஏக்கர் பரப்புள்ள பூங்காவில் தேனி மறைந்திருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கச் சிரமப்பட்டனர்.

வந்தவர்கள் திறமையானவர்கள். அவர்கள் ஒவ்வொரு இடமாகப் பார்த்துக் கொண்டே முன்னேறினர்.

பூங்காவின் மறுபக்கம் உயரமான இடம். அங்கே ஒரு புதருக்குப் பின் மறைந்திருந்த தேனியை அவர்கள் பார்த்து விட்டார்கள். அவனைத் தப்பிச் செல்ல விடக் கூடாது என்று ஒருவன் சுட்டான். அது சைலன்சர் பொருத்திய துப்பாக்கி. அதனல் சுட்ட சத்தம் கேட்கவில்லை.

துப்பாக்கிக் குண்டு தேனியின் வயிற்றைத் துளைத்தது. உயிர் போவது போன்ற வேதனை. என்றாலும் தேனி வாய் விட்டுக் கத்தாமல், அங்கிருந்து வேறு புதருக்குள் நுழைந்து விட்டான்.

தேடி வந்தவர்கள் ஓடி வந்தார்கள். அவர்களிடம் சிக்காமல் ஒரு புதரிலிருந்து மறு புதருக்குத் தாவினன். அவர்கள் பார்க்காதவாறு பூங்காவின் உயரமான கிழக்குப் பகுதியை அடைந்தான். அங்கிருந்த முள் வேலியைத் தாண்டி சாலைக்கு வந்தான். சேரன் நடந்த ஒற்றையடிப் பாதை வழியே சென்று, மேலே நடக்க முடியாமல் கீழே

விழுந்து விட்டான்.

''தம்பீ... தம்பீ...''

தேனீ குரலை உயர்த்தியதோடு, கையையும் உயர்த்திச் சேரனை அசைத்தான்.

தேனீ கூறியதைக் கேட்டு வியப்பிலும் திகைப்பிலும் சிலையாகி விட்ட சேரன் உணர்வு பெற்றான்.

''என்னங்கோ?''

''நான் சொன்ன கதையைக் கேட்டுத் தூங்கிட்டேயோன்னு நினைச்சேன். கதை கேட்டா குழந்தைங்க தூங்குவாங்க.''

''ஐயா, நீங்க சொன்னது தூங்கச் செய்யற கதையா! தூங்குறவங்களை எழுப்புற கதைங்கோ. என்னை அனுமதிங்க. நான் டாக்டரைக் கூட்டியாறேன்.''



சுப்புவின் பதில்

அப்பா: ஏண்டா சுப்பு, ஷேவிங் பண்ணிக்கிற பிளேடு இவ்வளவு மோசமாயிருக்கு?

சுப்பு: காலையில் நான் பென்சில் சீவின போது நல்லாத் தானேப்பா இருந்தது?

—இழை. அ. கதிர்வேல்.

''வேண்டாம் தம்பி. என்னைக் காப்பாத்த முடியாது. ஆனால் நீ உதவி செஞ்சா உன்னைக் காப்பாத்தலாம். உன் நாட்டைக் காப்பாத்தலாம்.''

தேனீ கூறியபடி தன் கையால், கால் சட்டைப் பையிலிருந்து ஒரு எக்ளேர் சாக்லெட் அளவுள்ள பொருளை எடுத்துச் சேரனிடம் நீட்டினான்.

''தம்பீ, நீ நாட்டுப் பற்றுள்ள நல்ல தம்பின்னு தெரியுது. என் வரலாற்றைக் கேட்டப்போ உன் முகத்திலே தெரிஞ்ச கோபம்—ஆத்திரம்—வேதனை உன் குணத்தைத் தெரிவித்தன. என் கையில் இருப்பது நான் எடுத்த மைக்ரோ ஃபிலிம். இதைச் சென்னைக்கு நீயே எடுத்துச் செல்ல வேண்டும். சென்னையில் 693641 என்னும் தொலைபேசியுடன் தொடர்பு கொண்டு ஓ.பி.யு.வின் தமிழ்நாட்டுத் தலைவனிடம் தேனீ கொடுத்ததாகக் கூறி ஒப்படைக்க வேண்டும். செய்கிறாயா?''

வெகு தூரத்திலிருக்கும் சென்னைக்கு அவன் அதுவரை சென்றதே இல்லை. தேனீ கொடுக்கும் ஃபிலிமை சென்னையில் உள்ள ஓ.பி.யு. தலைவனிடம் சேர்க்க முடியுமா? செய்ய முடியாததைச் செய்வதாக வாக்களிப்பது தப்பல்லவா?

சேரன் தயங்கினான்.

''தம்பீ! தயங்காதே! நாட்டுக்காக இதைச் செய்!''

தேனீ சொன்னான்.

''நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே! நாட்டுக்காக நீ என்ன செய்தாய் என்று உன்னையே கேட்டுக் கொள்.''

சென்னை அறிஞர் கூறியது நினைவுக்கு வந்தது! ''வீட்டுக்குச் சேவை செய்ய முடியாத என்னால் நாட்டுக்குச் சேவை செய்ய முடியுமா?''—சேரன் தன்னையே கேட்டுக் கொண்டான்.

''தம்பீ, தயங்காதே! முயன்றால் செய்ய முடியாதது எதுவும் இல்லை.''

சேரன், கையை மெல்ல நீட்டி தேனீயின் கையிலிருந்த மைக்ரோ

ஃபிலிம் ரோலை எடுத்துக் கொண்டான்.

''தம்பி, இதை நவம்பர் பதினாலாம் தேதிக்குள் சென்னையில் சேர்த்து விட வேண்டும். சதிக் கூட்டத்தாரின் நோட்டிலிருந்த கடைசிப் பக்கத்தை நான் படம் பிடிக்கவில்லை. அதில் என்ன இருந்தது தெரியுமா? வரும் நவம்பர் பதினாலாம் தேதியில் சென்னையில் ஒரு அரசியல் வாதியைக் கொலை செய்யத் திட்டமிட்டிருக்கிறார்கள். அது முன்னோடி. அது வெற்றி பெற்றால், டிசம்பர் முதல் தேதி ஒவ்வொரு மாநிலத்திலும் புகழ் வாய்ந்த அரசியல்வாதிகளைக் கொலை செய்யப் போகிறார்கள். நவம்பர் பதினாலாம் தேதி யாரைக் கொல்லப் போகிறார்கள் என்பது அதில் இருந்தது. டிசம்பர் முதல் தேதி யாரைக் கொல்லப் போகிறார்கள் என்பது அதில் இல்லை. ஆனால் அக்கொலைகளைச் செய்யப் போகும் கொலைகாரர்களின் பட்டியல் ஃபிலிமில் உள்ளது.''

தேனிக்கு மூச்சு வாங்கியது.

அதே நேரத்தில் தூரத்தில் யாரோ பேசும் குரல் கேட்டது.

தேனி மிரண்டான்.

''தம்பி, என்னைத் தேடுபவர்கள் வருகிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்களிடம் நீ சிக்கக் கூடாது. அவர்கள் உன்னைப் பார்க்கவும் கூடாது! ஓடு! இந்த ஃபிலிமை நீயே கொண்டு சென்று சென்னையில் சேர்க்க வேண்டும்.''

''செய்கிறேன் ஐயா! என் உயிரே போனாலும் கவலையில்லை. கொலையாளர்களின் பட்டியலை நீங்கள் குறிப்பிட்டவரிடம் சேர்த்து விடுகிறேன். ஐயா, சென்னையில் நவம்பர் பதினாலாம் தேதி யாரைக் கொலை செய்யப் போகிறார்கள்?''

சேரன் கேட்டான்.

அதே நேரம் பேச்சுக் குரல் நெருங்கியது. காலடி ஓசை கேட்டது.

தேனியின் முகத்தில் மிரட்சி. சேரனைப் போய் விடுமாறு சைகை செய்தான்.

சேரன் எழுந்து நின்றான்.

''கொலையாகப் போகிறவர் யார் ஐயா?''

தேனி மூச்சு வாங்க வாயைத் திறந்தான். குரல் எழும்பவில்லை.

''கு... கு... ம... ம.........''

நா குழறிய தேனியின் தலை சட்டென்று பக்கவாட்டில் சாய்ந்தது. தேனி இறந்து விட்டான் என்பதைச் சேரன் தெரிந்து கொண்டான்.

அப்போது...

பளீர் என்று டார்ச் ஒளி சேரன் முகத்தில் பட்டது.

மேலே சாலையில் சிலர் நின்றிருந்தனர்.

டார்ச் ஒளி நகர்ந்து, கீழே கிடந்த தேனி மீது படர்ந்தது.

மறுகணம்...

''அதோ அவன்!''

என்று ஒரு குரல் கேட்டது!

சேரனுக்கு வந்தவர்கள் யார் என்பது தெரிந்து விட்டது.

அவன் அங்கிருந்து ஓடத் தொடங்கினான்.

''அந்தப் பையனைப் பிடி! விடாதே!''

ஒரு குரல் எழுந்தது! தொடர்ந்து சிலர் ஓடி வரும் காலடிச் சத்தம் கேட்டது.

சேரன் புலியைக் கண்ட புள்ளி மானைப் போல ஓடினான்.

வந்தவர்களில் இரண்டு பேர் அவனைப் பின் தொடர்ந்து ஓடினர்.

காலடி ஓசை தன்னை நெருங்குவதை உணர்ந்த சேரன் அப்போதும் திரும்பிப் பார்க்காமல் ஓடினான்.

(தொடரும்)

பளு தூக்கும் கலை

குண்டுமணி



ரயில்வே ஸ்டேஷனில் போர்ட்டர், பெட்டி படுக்கைகளை அநாயாசமாக ஏந்தி வருவது கண்டு சிறுவர்கள் ஆச்சரியப்படுவதுண்டு. அது அவர்கள் தொழில்! ஆனால், பளு தூக்கும் கலை விளையாட்டுக் கலையில் அங்கம் வகிக்கிறது.

1896ம் ஆண்டு நடைபெற்ற முதல் நவீன ஒலிம்பிக்கில் பிரிட்டன்தான் பளு தூக்கும் போட்டியில் தங்கப் பதக்கம் சூடியது. லண்டன் சாம்பியன் பெயர் லான் செஸ்டன் எல்லியட். இருபதாம் நூற்றாண்டில் வில்லியம் புல்லம் உலக சாம்பியன். பிரிட்டனில் 15 தேசிய விருதுகளை வென்றவர். முதல் பளு தூக்கும் சங்கத்துக்குச் சட்ட திட்டங்களை உருவாக்கியவரும் வில்லியம் புல்லம்தான்.

1938ம் ஆண்டில் அமெரிக்காவில் பதினேழு வயதுள்ள ஜான் டேவிஸ் பளு தூக்கும் போட்டியில் உலக சாம்பியன் பட்டத்தைப் பெற்றிருக்கிறார். பால் ஆண்டர்ஸன் அதிக அளவு எடையைத் தூக்கிப் பெருமை பெற்ற சாம்பியன். ஐந்நூறு கே.ஜி. எடையைத் தூக்கியவர் இவர். ஒரு மனிதனால் தூக்க முடிந்த அளவு ரிகார்டும் அவருக்குத்தான்!

வியாஸோவ் ரஷ்ய சாம்பியன். ஐந்து தடவை ஒலிம்பிக் சாம்பியன் இவர்.

தலைசிறந்த பளு தூக்கும் சாம்பியன்கள் இரான், துருக்கி, ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து வந்தாலும் ரஷ்யர்களும் பல்கேரியர்களும் இந்தக் கலையில் தலைசிறந்து விளங்கினார்கள். 1976 மாண்ட்ரீயால் ஒலிம்பிக்கில் அவர்களுக்கே வெற்றி!

எடை தூக்கும் போட்டி இருவகை. ஒன்று இரண்டு கை Snatch; மற்றொன்று இரண்டு கைகள் clean and Jerk. முதல் போட்டியில் பளு தூக்கும் சாம்பியன் பளுவின் தண்டை இரு கைகளாலும் பற்றிக் கொள்வார். அவரது உள்ளங்கை கீழ் நோக்கி இருக்கும். பிறகு அவர் ஒரே அசைப்பில் எடையைத் தூக்கிவிடுவார். அதனைத் தன் தலைக்கு மேல் கைவீச்சு அளவு உயரே தூக்கிவிடுவார்! 'ஸ்பிளிட்' முறையில் தூக்குவதும் 'ஸ்குவாட்' முறையில் தூக்குவதும் உண்டு.

பளுவைத் தலைக்கு நேராகத் தூக்க வேண்டும் என்பது குறிக்கோள். பளு தூக்கும் கைகளும் கால்களும் நேராக இருத்தல் வேண்டும்.

பளு தூக்கும் போட்டியினை மூன்று ரிபரிகள் இருந்து ஆய்வு செய்து முடிவு வழங்குவார்கள்.

எடை தூக்கும் பயிற்சியினைத் தங்கள் உடல் நலத்துக்காகவே கைக்கொள்வதும் உண்டு. எடை தூக்கும் போட்டிகளை ஒரு மரப் பிளாட்பாரத்தில் நான்கு சதுர மீட்டர் பரப்பளவில் நடத்துவார்கள். பளுதூக்குவதை அந்தப் பிளாட்பாரத்துக்குள் நிகழ்த்த வேண்டும். அதை விட்டு நகர்ந்து செய்தால் அது செல்லுபடியாகாது. பளுக்கள் பல்வகைப்படும். ப்ளைவெயிட் 52 கிலோ கிராம், பாண்டம் வெயிட் 56 கிலோ கிராம், பெதர் வெயிட் 60 கிலோ கிராம், லைட் வெயிட் 67.5 கிலோகிராம், மிடில் வெயிட் 75

கிலோகிராம், லைட் ஹெவி வெயிட் 82.5 கிலோ கிராம், மிடில் ஹெவி வெயிட் 90 கிலோகிராம், ஹெவி வெயிட் 110 கிலோ கிராம், சூப்பர் ஹெவி வெயிட் 110 கிலோகிராமுக்கு மேல் என்று பிரிக்கப்பட்டுள்ளது.

நீதிபதிகளும் ரிபரிகளும் இந்தப் பளு தூக்கும் போட்டி சரியாக இருக்கிறதா என்பதனை வெள்ளை விளக்கு, சிவப்பு விளக்கு எரியவிட்டுத் தீர்ப்பளிப்பார்கள். அனைவரும் வெள்ளை விளக்கினை எரிய விட்டால் அது 'சரியான லிப்ட்' என்று தெரிந்து கொள்ளலாம். சிவப்பு விளக்கு எரிந்தால் அது தவறான லிப்ட் என்று முடிவு செய்யலாம்.

ஒவ்வொரு பளு தூக்கும் கலைஞருக்கும் ஒவ்வொரு வகையான லிப்டிலும் மூன்று சான்ஸ்கள் உண்டு.

கால்ஃப், கால் பந்து, பேஸ்பால் முதலிய விளையாட்டுக்களில் ஈடுபடுபவர்கள் கூட எடை தூக்கும் கலையில் தங்கள் உடலைப் பேண ஈடுபடுகின்றனர். உலகில் அதிக எடை தூக்கும் விற்பன்னர்கள் சாய்ந்த கோபுரங்கள் கட்டும் போது பயன்பட்டிருக்கின்றனர்.

ஐரோப்பியர்கள்தான் முதன் முதலில் பளு தூக்கும் கலையில் முனைந்தார்கள். பல நூற்றாண்டுகளுக்கு முன் ஒரு கிராமத்தான் மற்றொரு கிராமத்தானிடம் தான் அவனை விட அதிக பளு தூக்குவதாகச் சவால் விட்டிருக்கிறான். இந்தச் சவாலை ஏற்று, போட்டி ஏற்பட்டிருக்கிறது.

அந்த நாட்களில் எடை தூக்கும் கலையில் ஜெர்மனியர், பிரெஞ்சுக்காரர்கள், ஸ்காண்டிநேவியர்கள் பிரசித்தமாக ஈடுபட்டிருக்கிறார்கள். ஒலிம்பிக் போட்டிகளில் எகிப்தியர்களும் ஜெர்மனியர்களும் முன்னணியில் இருந்திருக்கிறார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் முந்நூறு பவுண்டு எடையுள்ள கனடியர் லூயிஸ் சிர் ஆர்தர் சாகிவான், ஜெர்மனியைச் சேர்ந்த யூஜின் சாஸ்டோ, ரஷ்யாவைச் சேர்ந்த ஜியார்ஜ் ஹக்சன் ஷிமிட் எடை தூக்கும் கலை பிராபல்யமடைய உதவியிருக்கிறார்கள்.

லூயிஸ் சிர் பீமனைப் போன்ற பலசாலி. ஐந்தடி பத்தங்குலம் உயரம் உள்ளவர். 47 அங்குல இடுப்பு கொண்டவர். தன் முதுகில் 4300 பௌண்ட் எடையுள்ள பிளாட்பாரத்தை ஏற்றிய வல்லமை படைத்தவராம். காலின் சக்தியினால், பின் சதைகளின் உந்துதலினால் அந்தப் பிரும்மாண்டமான பிளாட்பாரத்தைத் தூக்கி யிருக்கிறார். 538 பௌண்ட் எடையை ஒரு விரலால் தூக்கிய பெருமையும் இவருக்கு உண்டு.

1950ல் பால் ஆண்டர்சன் எடை தூக்கும் கலையில் சாம்பியனாகத் திகழ்ந்தார். பால் ஆண்டர்சனுக்குக் கால்பந்தாட்டத்துக்கு அவருக்குக் கிடைத்த கல்லூரி உதவித் தொகையை உதறிவிட்டு எடை தூக்கும் கலையில் ஈடுபட்டார்! உலக சாம்பியனாகவும் இவர் பரிமளித்தார். எடை தூக்கும் கலையைப் பயில வேண்டும் என்று டாக்டர்கள் பல நோஞ்சான்களுக்குச் சொல்வதுண்டு. ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் எடை தூக்கும் பயில்வான்களைக் காணத் திரளான ரசிகர்கள் கூடியிருந்தனர்.





சொல்லாமல் சொன்னார் அப்பா

அப்பாவின் கையில் பிராக்ரஸ் ரிப்போர்ட் இருந்தது.

"இங்கே வாடா."

நடுக்கத்துடன் மணி அருகில் வந்தான்.

"என்னடா இது. முப்பத்தஞ்சு.. முப்பத்தாறுன்னு. ஒரு பாடத்திலகூட நாற்பதைத் தாண்டலே..."

"முப்பத்தஞ்சு வாங்கினாலே பாஸ் தாம்பா..." என்றான் மெதுவாக.

"ஓஹோ.. அப்படியா!"

மணியின் முதுகு சிலிர்த்தது. 'அடி விழப் போகிறது!' என்ற பயத்தில் கண்களை மூடிக் கொண்டான். எதுவும் நடக்கவில்லை. மீண்டும் கண்களைத் திறந்த போது, எதிரில் அப்பா நிற்கவில்லை.

"என்ன ஆச்சு? விட்டு விட்டார்!"

மணிக்குப் புரியவில்லை.

சாப்பாட்டு நேரம். தட்டின் முன்னால் அமர்ந்தான்.

இலையில் அம்மா மோர்ச் சாதம் மட்டுமே பரிமாறினாள். தொட்டுக் கொள்ள எலுமிச்சை ஊறுகாய்.

"என்னம்மா இது..! குழம்பு... கறி... எதுவும் கிடையாதா...?" என்றான் எரிச்சலுடன்.

"உனக்குப் பசிக்குச் சாப்பாடு வேணும். அவ்வளவுதானே! மோர்ச் சாதம் சாப்பிட்டால் வயிறு நிறையாதா?" என்றார் அப்பா வந்து கொண்டே.

மணி தலை குனிந்தபடியே சாப்பிட்டான்.

"இன்னைக்கு லீவுதானே... அவனைக் கடைக்குக் கூட்டிக்கிட்டுப் போய்த் துணி எடுத்துக்கிட்டு வந்துடு..." என்றார் அப்பா.

"சரிங்க..." என்றாள் அம்மா.

"இவனுக்குச் சாதாரணத் துணி போதும். விலை ரொம்ப குறைச்சலா.. காட்டன்ல எடுத்திடு.. சும்மா உடம்பை மறைக்கத்தானே...!" என்றார்.

"என்னை மன்னிச்சுடுங்கப்பா."

மணி ஓடிவந்து அவர் கால்களில் விழுந்தான்.

"இப்ப புரியுதப்பா... மற்றத்தேவைகளில் எல்லாம் எனக்கு உயர்ந்தது, நல்லதுதான் வேண்டியிருக்கு. அதைப் போலப் படிப்பிலேயும் ஆர்வம் காண்பிச்சு உயர்ந்த மதிப்பெண்களை வாங்க முயற்சிசெய்யணும்னு நீங்கசொல்லாமே சொல்லிட்டீங்க..."

திருந்திய மணியைத் தூக்கித் தழுவிக் கொண்டார் அப்பா.

ஸ்ரீரங்கம் ஸ்ரீனிவாசன்



குழந்தைகள் நாளில் குழந்தை நூல்கள்!

1956—ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 14—ஆம் தேதி. அன்று நேருஜியின் பிறந்த நாள். அவருக்கு வா நுத் தெரிவிக்க இலட்சக் கை கான குழந்தைகள் டில்லி நேஷனல் ஸ்டேடியத்தில் கூடியிருந்தனர். அவர்களின் வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டு திரும்பும் வழியில், 'அகில இந்தியப் புத்தகக் காட்சி' நடந்து கொண்டிருப்பதைக் கண்டார் நேருஜி. உடனே, எந்தவிதமான முன் அறிவிப்பும் இல்லாமல் புத்தகக் காட்சி நடக்கும் இடத்திற்குள் புகுந்துவிட்டார்!

அங்கு அவர் குழந்தைப் புத்தகங்கள் இருந்த பகுதியில் நெடு நேரம் செலவிட்டார். பல மொழிகளிலும் வெளிவந்திருந்த புத்தகங்களைக் கையிலே எடுத்துப் புரட்டிப் பார்த்தார். ஒவ்வொரு புத்தகத்தின் அட்டையும் எவ்வாறு இருக்கிறது, புத்தகம் நல்ல முறையில் அச்சிடப்பட்டிருக்கிறதா, குழந்தைகள் உள்ளம் கவரும் வகையில் அமைப்பு இருக்கிறதா என்பதையெல்லாம் ஆர்வத்தோடு கவனித்தார். எப்படிப்பட்ட விஷயங்கள் எழுதப் பட்டிருக்கின்றன, இன்னும் சிறந்த முறையில் குழந்தைப் புத்தகங்கள் வெளிவர என்னென்ன செய்ய வேண்டும் என்பதையெல்லாம் மிகவும் அக்கறையுடன் கேட்டறிந்தார்.

அப்போது, அங்கு தமிழ்ப் பிரதிநிதியாகச் சென்றிருந்த குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் தலைவரும் உடனிருந்தார். நேருஜியின் ஆர்வத்தையும் அக்கறையையும் கண்ட அவரது உள்ளத்திலே ஓர் எண்ணம் உதித்தது.

அவர் சென்னை திரும்பியதும், குழந்தை எழுத்தாளர் சங்கச் செயற்குழு உறுப்பினர்களிடம் டில்லிப் புத்தகக் காட்சியில் நடந்ததைக் கூறி, "நேருஜிக்குக் குழந்தைகளிடத்திலே அதிகமான பிரியம் இருக்கிறது. அத்துடன் குழந்தைப் புத்தகங்களிடத்திலும் அக்கறை இருக்கிறது. அவரது பிறந்த நாளான குழந்தைகள் தினத்தில் குழந்தைப் புத்தகங்களை வெளியிட்டுக் கொண்டாடினால் என்ன?" என்று கேட்டார்.

"புதுமையான முயற்சி. ஆனால், நம் சங்கமே வெளியிடுவதானால், முதல் வேண்டுமே!" என்று ஒருவர் கேட்டார்.

"சங்கம் வெளியிட வேண்டாம். நம் சங்கத்திலிருந்து தமிழகத்திலுள்ள பதிப்பாளர்களுக்கு ஒரு

வேண்டுகோள் விடுப்போம். குழந்தைகள் தினத்தில் குறைந்தது ஒரு குழந்தைப் புத்தகமாவது நீங்கள் கொண்டு வர வேண்டும். நாங்கள் நடத்தும் குழந்தைகள் தினவிழாவிலே உங்களைப் போல் பல பதிப்பகத்தாரும் கொண்டு வரும் புத்தகங்களைத் தக்கவர்களைக் கொண்டு வெளியிடுவோம்' என்று தெரிவிப்போம். நிச்சயம் பதிப்பகங்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்'' என்றார் தலைவர்.

அவ்வாறே சங்கம் வேண்டுகோள் அனுப்பியது. அதற்கு நல்ல மதிப்பு இருந்தது. முதல் ஆண்டிலே—அதாவது 1957—ஆம் ஆண்டு குழந்தைகள் தினவிழாவிலே, பல பதிப்பாளர்கள் தயாரித்த 10 புத்தகங்கள் வெளியிடப்பட்டன. அதிலிருந்து ஆண்டுதோறும் குழந்தைகள் தின விழாவில் குழந்தைப் புத்தகங்கள் வெளியிடும் நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதுவரை இப்படி 600—க்கும் மேற்பட்ட குழந்தைப் புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

உலகக் குழந்தைகள் ஆண்டான 1979—ல் வெளியான புத்தகங்கள் எத்தனை தெரியுமா? 77! இந்த ஆண்டில் 19 எழுத்தாளர்கள் எழுதி 10 பதிப்பகங்கள் தயாரித்த 21 குழந்தைப் புத்தகங்களை, சென்னை உயர்நீதி மன்ற முன்னாள் தலைமை நீதிபதி உயர்திரு மு. மு. இஸ்மாயில் அவர்கள் 25.11.84—ல் மயிலாப்பூரில் நடந்த விழாவில் வெளியிட்டார்.

புத்தகங்களாக வெளியிடுவதற்கு ஏற்ற கையெழுத்துப் பிரதிகளுக்கான போட்டிகளையும் ஆண்டுதோறும் 'குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்துகிறது. அப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ஏ.வி.எம். அறக்கட்டளைப் பதக்கங்களை வழங்குகிறது.

இந்த ஆண்டு சிறுவருக்கான கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற திரு. கொ. மா. கோதண்டம் (இராஜபாளையம்), வாழ்க்கை வரலாற்றில் முதற் பரிசு பெற்ற திரு. மு. சாயபு மரைக்காயர் (புதுச்சேரி) இருவருக்கும் ஏ.வி.எம். தங்கப் பதக்கங்களையும், கவிதையில் இரண்டாம் பரிசு பெற்ற புலவர் திரு. தமிழ்ப்பித்தன் (சென்னை), வாழ்க்கை வரலாற்றில் இரண்டாம் பரிசு பெற்ற திரு. நாகை மனோகரன்—இருவருக்கும் ஏ.வி.எம். வெள்ளிப் பதக்கங்களையும் மாண்புமிகு சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்கள் வழங்கினார்.

பரிசு பெற்றோர் தங்கள் அனுபவங்களைச் சுவையாக எடுத்துக் கூறினர். குழந்தைகளின் ஆடல் பாடல்களையும் வந்திருந்தோர் பெரிதும் ரசித்தனர்.





திருக்குறள் புதிர்



மேலே உள்ள இரண்டு படங்களும் இரண்டு திருக்குறட் பாக்களை நினைவு படுத்தும். எந்த எந்தத் திருக்குறள் என்பதைக் கண்டுபிடித்து ஒரு காகிதத்தில் எழுதிக்கொள்ளுங்கள். பிறகு 73 ஆம் பக்கத்தில் உள்ள விடையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

என் குழந்தைப் பருவம்

— எம்.ஜி.ஆர்.



என் தந்தையார் திரு கோபாலன் அவர்கள் கேரளத்தில் மாஜிஸ்ட்ரேட்டாகப் பணி புரிந்தவர்.

அவருக்கு மூன்றாவது மனைவி என் தாயார் திருமதி சத்தியபாமா அம்மையார்.

அந்தக் காலத்தில் மாஜிஸ்ட்ரேட் என்றால் அவர் வைத்ததுதான் சட்டம். அவர் சொல்வதுதான் வேத வாக்கு. மேலும் அவர் செல்வமுள்ள, செல்வாக்குள்ள வீட்டில் பிறந்தவராகவும் இருந்தார்.

ஆகவே, அவர் பதவி வகித்த ஊர்களில் எல்லாம் நம்பூதிரிகளுக்கு எதிரியாகவே கருதப்பட்டார்.

அதன் காரணமாக அடிக்கடி ஊர் மாறும்படியும் நேர்ந்தது என் தந்தையாருக்கு!

ஆனாலும், அதற்காக அவர் கவலைப்பட்டதே கிடையாது. அவர் கவலைப்பட்டாரோ இல்லையோ அந்தச் சமூகம் அவரை அந்தப் பதவியிலிருந்து விலக்க மிக மிகக் கவலைப்பட்டது.


எதிரிகளோடு எதிர் நீச்சல் போட்டுப் பார்த்தார். நேர்மைக்காகப் போராடினார். கடைசியில் கௌரவமாகப் பதவியை ராஜிநாமாச் செய்துவிட வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது.

அதன் பிறகு கல்லூரிகளில் பிரின்சிபாலாகப் பணியாற்றும் பொறுப்பை ஏற்றார்.

கண்டியில் பிறந்தேன்

இறுதியாக இலங்கைக்குச் சென்றார். கண்டிமாநகரில் உள்ள ஒரு கல்லூரியின் முதல்வராகப் பணி புரிந்தார்.

என் தந்தை கண்டியில் பணி புரிந்த சமயம்தான் நான் பிறந்தேன்.



என் பிறந்த தேதி: 1917 ஜனவரி 17

நான் மட்டும்தான் கண்டியில் பிறந்தேன். எனக்கு முன் பிறந்த காமாட்சி, பாலகிருஷ்ணன், சுபத்ரா, எம். ஜி. சக்கரபாணி ஆகிய நால்வரும் கேரளத்தில் பிறந்தவர்களே.

நான் பிறந்த பின் என் தாயாருக்குத் துன்பங்கள் பிறந்தன.

எனக்கு இரண்டரை வயது ஆன போது என் தந்தையை இழந்து தவித்தார்கள் என் தாயார்.

நாங்கள் திக்கற்றவர்கள் ஆனோம்.

எங்கள் தந்தையாரின் செல்வம் எங்களுக்குக் கிடைக்கவில்லை. அதற்குக் காரணம், கேரளத்தில் ''மருமக்கள் தாயம்'' என்ற முறை வழக்கத்தில் இருந்தது.

அந்த முறை என்ன தெரியுமா?

ஒருவருக்கு எவ்வளவு செல்வம் இருந்தாலும், அவருடைய பிள்ளைகளுக்கு அதில் எவ்விதமான உரிமையும் கிடையாது. அவரது உடன் பிறந்த சகோதரிகளின் மக்களுக்குத்தான் அந்தச் செல்வத்தில் பங்கு உண்டு.

இதன் காரணமாக என் தந்தையார் இயற்கை எய்தியதும், என் தாயாரும் நானும் என் உடன் பிறந்தவர்களும் வெளியேற்றப்பட்டோம்.

எங்களது தூரத்து உறவினரான போலீஸ்காரர் வேலு நாயர் அவர்களின் உதவியோடு வாழ்ந்து வந்தோம்.

வேலு நாயருடைய மைத்துனர் (தங்கையின் கணவர்) நாராயணன் நாயர் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி என்ற நாடகக் குழுவில் பின்னணி இசை பாடுபவராக இருந்தார். மிகவும் பழமையான அந்த நாடகக் குழுவில் சிறுவர்கள் நடிகர்களாகப் பணியாற்றினார்கள்.

நாராயணன் நாயருடன் நாங்களும் கும்பகோணத்தில் குடியேறினோம்.

பள்ளி வாழ்க்கை

படிக்கும் வயது அடைந்த நான் என் தமையனார் எம்.ஜி. சக்கரபாணி அவர்களுடன் கும்பகோணம் 'ஆனையடி ஸ்கூல்' என்ற பள்ளியில் கல்வி பயின்றேன்.

முதன் முதலாக நான் எழுதப் படிக்கத் துவங்கிய மொழி தமிழ். கல்வி பயின்ற இடம் தமிழ்நாடு. ''இனிமைத் தமிழ் மொழி எமது'' என்ற தமிழ் உணர்ச்சியுடன் என் பள்ளி வாழ்க்கை விளங்கியது.

ஒவ்வொரு நாளும் பள்ளியிலிருந்து திரும்பி வந்ததும் என் தாயின் மடியிலே தலையை வைத்துப் படுத்துக் கொள்ளுவேன்.

அவர்கள் என் தலையைக் கோதியபடியே புராணங்களைப் பற்றிய பல பாடல்களைப் பாடிக் கொண்டே இருப்பார்கள்.

அப்போது என் தாயார் எந்த எந்தப் புராணத்தில் எந்த எந்தக் கட்டங்களைப் பற்றிச் சொன்னார்கள் என்பது ஒவ்வொன்றும் இப்போதும் என் நினைவில் இருக்கிறது.

அப்படி என் உள்ளத்தில் பதிந்த பாத்திரங்களில் அபிமன்யு கதையும் ஒன்று.

மகாபாரதக் கதையில் அபிமன்யு என்னும் சிறுவன் மகா வீரன். அவன் அர்ஜுனனின் மகன்.

அவன் தன் தாயின் வயிற்றில் இருக்கும்போதே யுத்த முறையைக் கேட்டான் என்றும் அதனால் மகா வீரனாக வளர்ந்தான் என்றும், பாரதக் கதையில் விளக்கப்படுகிறது.

அபிமன்யு வீரமாகப் போர் செய்து 'பத்ம வியூகம்' என்பதைப் பிளந்து, மரணம் அடைந்தான் என்பதையும் என் தாயார் விவரமாகக் கதை சொன்னார்கள்.

'பத்ம வியூகம்' என்றால் என்ன தெரியுமா? தாமரைப் பூவின் வடிவிலே வீரர்களை அணிவகுத்துக்கொண்டு எதிரியைத் தாக்குகின்ற உத்திக்குப் 'பத்ம வியூகம்' என்று பெயர்.

இதே போல் 'சக்கர வியூகம்' என்ற முறையும் உண்டு.

சண்டைக் காட்சிகளில், திரைப் படங்களில், நான் ஓரளவு நன்றாக நடித்தேன் என்றால் அதற்கும் என் தாயார் அவர்களே காரணம்.

அவர்கள் கதை சொன்ன அழகில், அபிமன்யு பத்மவியூகத்தைப் பிளந்து மரணம் அடைந்த வீரம் என் உள்ளத்தில் மிகவும் நன்றாகப் பதிந்துவிட்டது.

நாடகக் கம்பெனியில் சேர்ந்தேன்

என் ஏழாவது வயதில், நாராயணன் நாயர், என்னையும் என் தமையனாரையும் தாம் வேலை பார்த்த நாடகக் கம்பெனியில் சேர்த்துவிட்டார்.

நாடகக் கம்பெனியில் எங்கள் இருவருக்கும் ஊதியம் கிடையாது.

காலையில் சிற்றுண்டி, பகல் — இரவு உணவு இவைகள் மட்டுமே தரப்பட்டன.

உணவுக் கவலை இல்லாதபடியால் என் தாயாரின் துன்பம் ஓரளவு குறைந்தது.

பின்னர், நாடகக் கம்பெனியில் கிடைத்த ஊதியம் எவ்வளவுதெரியுமா? வாரத்திற்கு நான்கு அணாதான். நன்ருக நடிக்கத் தொடங்கியதும் வாரத்திற்கு எட்டணா ஊதியம்!

தாயாரின் பெருமை

நாடகக் கம்பெனியுடன் பாண்டிச்சேரிக்குப் போக வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்போது எங்கள் தாயாரைப் பிரிந்து செல்ல வேண்டியிருந்தது.

நேரம் தவருமல் தன் பிள்ளைகள் உணவு உண்ணட்டுமே என்ற எண்ணத்தில் எங்களைப் பிரிந்து இருக்க என் தாயார் இசைந்தார்கள்.

யார் யாருடன் எப்படி எப்படிப் பழக வேண்டும் என்று எங்களுக்கு அறிவு விளக்கம் தருவதில் தந்தையாக விளங்கினர் எங்கள் தாயார்.

உள்ளத் தூய்மை தருவதில் எங்கள் தாயார் கடவுளாகவும் இருந்தார்.

அறியாப் பருவத்திலேயே தந்தையை இழந்த என்னைத் தன் அன்பணைப்பிலே வளர்த்து, ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்று சாகும்வரை எனக்காகவும் என் தமையனுருக்காகவும், பாடுபட்டு, உழைத்து, உழைத்து ஓடாகி, மறைந்த பின்னும் மறையாது எங்களுக்கு வழி காட்டிக் கொண்டிருப்பவர்கள் என் அருமைத் தாயார்.

என் வாழ்க்கையில் ஒவ்வொரு நொடியும் என் அருமைத் தாயாரை எண்ணி எண்ணி மனமார வணங்கிக் கொண்டே இருக்கிறேன்.

வீடே உலகம் என்று வாழ்ந்த நான், நாடகமே உலகம் என்ற நிலைக்கு மாறினேன்.

என் வாழ்க்கைக்குப் புத்துயிரும், தொழிலுக்குப் புதுப் பாதையும் காட்டிய நாராயண நாயரின் பாதுகாப்பில் பாண்டிச்சேரிக்குச் சென்றேன்.

ரயிலில் போய், பாண்டிச்சேரியில் இறங்கியதும் சுற்றிப் பார்த்தேன்.

என்னைப் போன்ற பல குழந்தைகள் என்னைச் சுற்றி நின்று வேடிக்கை பார்த்தார்கள். அப்போது ஒரு பையன் மட்டும் என்னைக் கோபத்தோடும் அருவருப்போடும் பார்ப்பதைக் கண்டு திகைத்தேன்.

அவன் நாராயண நாயரின் மகன் தான். அவன் பெயர் பாலகிருஷ்ணன். என்னைவிட இரண்டு வயது மூத்தவன். தன்னுடைய தந்தை தன்னை அதிகம் கவனிக்காமல், யாரோ ஒருவனை—அநாவது என்னை — கொஞ்சுகிருரே என்பதைக் கண்டுதான் அவன் ஆத்திரம் அடைந்தான் என்று தெரிந்து கொண்டேன்.

அவன் சில வருடங்கள் எனக்கு எதிரியாகவே இருந்தான்.

நடன ஒத்திகை

நாடகக் கம்பெனியில் எனக்கும் என் தமையனுருக்கும் நடனம் கற்றுத் தரப்பட்டது.

முதலில் ''தித்தித்தை'' என்று சொல்லிக் கொடுத்தார்கள்.

முதல் நாள் நடன ஆசிரியர் ஸ்ரீராமுலு கற்றுக் கொடுத்தார். பிறகு எனக்கு எதிரிபோல் ஆகிவிட்ட பாலகிருஷ்ணனிடம் நடனம் கற்றுக்கொள்ளும்படி சொல்லிவிட்டார் வாத்தியார்.

ஆனல் அவன் சொல்லிக் கொடுப்பது கிடையாது. வாத்தியாரிடம் நான் அடிபட வேண்டும் என்று பாலகிருஷ்ணன் என்னைப் பற்றித் தவருகக் கோள் மூட்டிவிட்டான்.

மறுநாள், ''ஏன் பாலகிருஷ்ணனிடம் நடனம் கற்றுக் கொள்ள-



லில்லே?'' என்று வாத்தியார் என்னே அடித்தார்.

அவர் அடிப்பது பயங்கரமானது. இரண்டு கால்களேயும் சேர்த்து வைத்து நிமிர்ந்து நிற்க வேண்டும். அடி விழும் போது குனியவும் கூடாது; அழவும் கூடாது! முழங்கால்களுக்குக் கீழே இரண்டு கணுக்கால்களிலும் படும் படியாகக் கனமான கம்பு கொண்டு வாத்தியார் அடிப்பார். துடித்து அலறியபடியே என் அண்ணனேத் திரும்பிப் பார்த்தேன். அவரும் என்னேயே பார்த்துப் பயந்தபடியே 'தித் தித்தை' போட முயற்சி செய்து கொண்டிருந்தார்.

நான் அடிபட்டபோது, என் அன்புத் தாயாரை நினைத்துக் கொண்டு,

'அம்மா, அம்மா!' என்று அழ ஆரம் பித்து விட்டேன். எல்லாரும் சமாதானப் படுத்தினர்கள்.

அன்பு காட்டியவர்

இந்தச் சூழ்நிலையிலும் என்னிடம் அன்புடன் பழகி அனுதாபம் காட்டும் ஒருவர் இருந்தார். அவர் பெயர் எஸ். பக்கிரிசாமி பிள்ளே. அவர்தான் கம் பெனியில் புகழ் பெற்ற நகைச்சுவை நடிகர்.

கம்பெனி முதலாளிகூட பக்கிரி சாமி பிள்ளேயின் கருத்துக்கு மாருக நடக்க மாட்டார்.

நடன வாத்தியார் என்னே அடித்தது கண்டு ஆத்திரம் அடைந்தார் பக்கிரி சாமி பிள்ளே.

மறுநாள் முதல் என் நடன ஒத் திகையின்போது, பக்கிரிசாமி பிள்ளே யும் அருகில் உட்கார்ந்து அடி விழாத படி பார்த்துக் கொண்டார்.

நாடகக் கம்பெனியில் எல்லோருக் கும் சமமான முறையில் சாப்பாடு வழங்கப்பட வேண்டும் என்று போராடி நியாயம் கிடைக்கச் செய்த வரும். பக்கிரிசாமி பிள்ளேதான்.

பாடுவதில் முதல் இடம்

நாடகக் கம்பெனியில் முதன் முத லில் எனக்குக் கடவுள் வணக்கப் பாட்டு சொல்லிக் கொடுத்தவர் பெயர் ஸ்டேஜ் மானேஜராகப் பணிபுரிந்த நன்னேய பாகவதர்.

''கஜமுகதேவா கருணே செய்குவாய்
கயிலேவாசன் மகிழும் மைந்தா
கடைக்கண் பாரையா''

என்ற பாட்டை மிகவும் உரக்கவும் தைரியமாகவும் பாடுவதில் நானும் கருப்பையா என்ற பையனும் முதல் இடம் வகித்தோம். அதனுல்தான் 'லவ-குச' நாடகத்தில் அவனுக்கு லவன் வேடத்தையும், எனக்கு குசன் வேடத்தையும் கொடுத்தார்கள்.

என் முதல் ஆசான்

நாடகத்தில் முதன் முதலாக எனக்கு வசனம் பேசும் வேடம் கிடைக்கும் படியாகச் செய்தவர் காளி. என். ரத்னம் அவர்களே.

அவர் பக்கிரிசாமி பிள்ளேயின் பாணி யில் சிறந்த நகைச்சுவை நடிகராக விளங்கினர்.

மகாபாரத நாடகத்தில் எனக்கு 'உத்தரன்' வேடம் கொடுத்தார்.

எப்படி நடிக்க வேண்டும் என்று ஒத் திகை நடத்திச் சொல்லிக் கொடுத்தார் காளி என். இரத்தினம்.

எனக்கு நடிப்புச் சொல்லித் தந்த முதல் ஆசான் அவர்தான்.

அப்போது மட்டுமல்ல; ''மலேக் கள் ளன்'' திரைப்படத்தில், நான் நடித்த முஸ்லீம் வேடம், காளி என். ரத்தினம் நாடகத்தில் நடித்த முஸ்லீம் வேடத் தின் மறுபதிப்பே ஆகும்.

கொஞ்சம் அனுபவம் பெற்ற பின் மகாபாரதம் நாடகத்தில் 'அபிமன்யு' என்ற முக்கிய வேடத்தை எனக்குத் தரும்படி செய்து, நடிப்பையும் சொல்லிக் கொடுத்தார் காளி என். இரத்தினம் அவர்கள்.

அபிமன்பு கதையை ஏற்கெனவே என் தாயார் எனக்குச் சொல்லிக் கொடுத்திருந்தார்கள் என்பதை முன்பே குறிப்பிட்டுள்ளேன். ஆத லால், நாடகத்தில் அபிமன்யுவாக நடித்த எனக்கு நல்ல பெயர் கிடைத் தது.

இந்த வெற்றியின் காரணமாக எனக்கு எந்த வேடத்தையும் கொடுக்க லாம் என்ற நம்பிக்கையும் முதலாளிக்கு வந்தது. அதன் விளேவு என்ன தெரி யுமா? எனக்கு மாதச் சம்பளம் ரூபாய் ஐந்து என்று அறிவிக்கப்பட்டது.

பிறகு படிப்படியாக கதாநாயகனுக நடிக்கும் வாய்ப்பைப் பெற்றேன்.

பிற்காலத்தில் நான் பெயரும் புக ழும் பெறுவதற்கு, நாடகக் கம்பெனி யில் நான் பெற்ற அனுபவங்கள் எனக்கு மிகவும் துணே புரிந்தன.

—'நடிகன் குரல்' 1956-57 இதழ் களிருந்து தொகுத்தவர்:
கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம்



குளிர் காலம். இரவு நேரம். பனிக் காற்று வீசிற்று. இரண்டு ஏழை விறகு வெட்டிகள் காட்டிலிருந்து விறகு வெட்டிக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். தகுந்த உடைகள் இல்லாததால் அவர்கள் கைகால்கள் விரைத்து விடுவது போல் தோன்றியது. மிகுந்த கஷ்டப்பட்டு அவர்கள் காட்டைக் கடந்தனர். தொலைவிலிருந்த அவர்களுடைய கிராமத்திலிருந்து வெளிச்சம் தெரிந்தது.

அவர்கள் இருவரும் மெதுவாக நடந்து செல்கையில் எதிரே ஓர் அதிசயம் நிகழ்ந்தது. ஆகாயத்திலிருந்து ஒரு நட்சத்திரம் ஒரு புதரின் பின்னால் விழுவதை அவர்கள் கவனித்தனர். நட்சத்திரம் கீழே விழுந்தால், விழுந்த இடத்தில் ஒரு பானை-நிறையத் தங்கம் கிடைக்கும் என்று அவர்கள் கேள்விப் பட்டிருந்தனர். ஆகவே, தங்கத்தை அள்ளும் பரபரப்பில் அவர்கள் அந்த இடத்துக்கு விரைந்தனர்.

ஒரு மரத்தின் அடியில் வெள்ளி நட்சத்திரங்கள் பதித்த பொன் நிறக் கோட் ஒன்றை அவர்கள் கண்டனர். அந்தக் கோட்டை அவசரம் அவசரமாகப் பிரித்துப் பார்த்தனர். அதில் தங்கமும் இல்லை வெள்ளியும் இல்லை. ஒரு சின்னக் குழந்தை அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தது.

''நமக்கே சாப்பாட்டுக்கு வழியில்லை, இன்னொரு குழந்தையையும் எடுத்துப் போய் என்ன செய்யப் போகிறோம்? ஆகவே, இதை இங்கேயே விட்டு விடலாம்'' என்று தங்கம் கிடைக்காத ஏமாற்றத்தோடு ஒருவன் சொன்னான்.

''சே, சே! சின்னக் குழந்தை, பாவம்! இங்கேயே இருந்தால் குளிரில் செத்துவிடும். நான் ஏழைதான். எனக்கும் குழந்தைகள் உண்டு. இந்தக் குழந்தையை எடுத்துப் போகிறேன்... என் மனைவியிடம் கொடுத்து வளர்க்கச் சொல்கிறேன்'' என்று கூறி, அந்தப் பொன் நிறக் கோட்டால் குழந்தையைப் போர்த்தினான். அதை வீட்டுக்கு எடுத்துப் போனான். வறுமையால் கஷ்டப்பட்டாலும், அவனுடைய மனைவி இரக்க சுபாவம் உள்ளவள். அவள் நட்சத்திரக் குழந்தையின் நிலைக்கு இரங்கினாள். அதை அன்போடு பாதுகாத்தாள்.

ஏழை விறகு வெட்டியின் குழந்தைகளுடன் நட்சத்திரக் குழந்தையும் வளர்ந்தது. உணவு, உடை, விளையாட்டு — எல்லாவற்றையும் அவர்களுடன் பகிர்ந்து கொண்டது. நாள் ஒரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நட்சத்திரக் குழந்தை உள்ளத்தைக் கவரும் வகையில் அழகான சிறுவனாக வளர்ந்தது. கிராமவாசிகள் அதன் அழகைக் கண்டு அதிசயித்தனர்.

அந்தோ! அந்த அபூர்வ அழகுத் தோற்றம் நட்சத்திரக் குழந்தைக்கு எந்த நன்மையையும் செய்யவில்லை. அதற்குப் பதிலாக அவனுக்கு அதிக கர்வத்தைக் கொடுத்தது. அவனை ஒரு கல்நெஞ்சன் ஆக்கியது. அவன் ஏழை விறகு வெட்டியின் குழந்தைகளையும், கிராமத்திலிருந்த மற்றக் குழந்தைகளையும் கிண்டலும், கேலியும் செய்தான். அவர்களை வெறுத்

தான்; தன்னை ஒரு தலைவனாகவும், அவர்களை அடிமைகளாகவும் பாவித்தான். ஆயினும், அவனுடைய அழகையும் திறமைகளையும் கண்டு அதிசயித்த ஏழைச் சிறுவர்கள் அவனையே தலைவனா, கற்றுக்கொண்டனர். மேலும் ஊரிலிருந்த ஊனமுற்றோரையும், பிச்சைக்காரர்களையும் அவன் பரிகாசம் செய்தான்; துன்புறுத்தினான். மிருகங்களையும் பறவைகளையும்கூட அவன் விட்டுவைக்கவில்லை. அவற்றையும் கொடுமைப்படுத்தினான். அவனுக்கு அழகானவர்களை மட்டுமே பிடித்தது. குளத்து நீரில் தெரிந்த தன்னுடைய அழகான உருவத்தைப் பார்த்துப் பார்த்து ரசித்தான்.

விறகுவெட்டியும், மனைவியும் நட்சத்திரக் குழந்தையைப் பார்த்து, ''ஏழை எளியவர்களை ஏன் இப்படிக் கொடுமைப்படுத்துகிறாய்? அன்று நாங்களும் கொடுமையாக இருந்திருந்தால் இன்று நீ பிழைத்திருக்க முடியுமா?'' என்று கேட்டனர். மத குருவும் ஒரு நாள் அவனை அழைத்து, ''குழந்தாய்! கடவுள் படைத்த உயிர்களுக்குத் தீங்கிழைக்காதே. அன்பாயிரு'' என்று உபதேசித்தார். ஆனால், அவன் எல்லோரிடமும் சிரித்து மழுப்பி விட்டான். மனம் திருந்தவே யில்லை.

ஒரு நாள் அந்தக் கிராமத்துக்கு ஒரு வயதான பிச்சைக்காரி வந்தாள். களைத்துச் சுருங்கின முகமும், கந்தல் ஆடையும், அழுக்குத் தோற்றமும் கொண்டு ஒரு மரத்தடியில் உட்கார்ந்தாள். நட்சத்திரக் குழந்தை அவளைப் பார்த்து விட்டான். உடனே மற்ற சிறுவர்களை அழைத்தான். ''வாங்கடா, அந்த அழுக்குப் பிச்சைக்காரியை அடித்துத் துரத்துவோம்'' என்று சொல்லி, வாயில் வந்தபடி அவளைத் திட்டினான். அவள் மீது கற்களை வீசினான்.

''யாராவது உதவி செய்யுங்களேன்'' என்று கதறிக் கொண்டே பிச்சைக்காரி கீழே விழுந்தாள். அவளுடைய கதறல் ஏழை விறகு வெட்டியின் காதில் விழுந்தது. அவன் ஓடி வந்தான். விறகு வெட்டிக்கும், நட்சத்திரக் குழந்தைக்கும் வாக்குவாதம் நடந்தது.

''என் விஷயத்தில் தலையிடாதே!'' என்றான் நட்சத்திரக் குழந்தை.

''அன்று உன்னைக் காட்டில் காப்பாற்றியிருக்கிறேன். ஆகவே, தலையிடும் உரிமை எனக்கு உண்டு'' என்று சொல்லி, அவன் பிச்சைக்காரியை வீட்டுக்கு அழைத்துப் போய் உபசரித்தான்.



''நீ இந்தக் குழந்தையைக் காட்டில் கண்டெடுத்ததாகச் சொன்னாயே அது, பத்து வருஷங்களுக்கு முன்னால் இதே நாளில்தானே?'' என்று பிச்சைக்காரி கேட்டாள்.

''ஆமாம், ஆமாம்''—விறகுவெட்டி பதிலளித்தான்.

''அப்போது இவன் ஒரு மஞ்சள் நிற மாலை அணிந்து, பொன்னிறக் கோட்டைப் போர்த்தியிருந்தான் அல்லவா?''

''ஆமாம்'', என்று சொல்லிக் கொண்டே விறகு வெட்டி அந்தப் பொருள்களை உள்ளே இருந்து கொண்டு வந்து காண்பித்தான்.

''ஓ! இவன் என்னுடைய குழந்தைதான். நான் இவனைக் காட்டில் தொலைத்து விட்டேன். அன்று முதல் தேடித் திரிகிறேன். அவனைக் கூப்பிடுங்கள்'' என்றாள் பிச்சைக்காரி.

நட்சத்திரக் குழந்தை வீதியிலிருந்து வரவழைக்கப்பட்டான்.

''நான்தான் உன்னுடைய அம்மா. வாடா கண்ணா! காணாமல் போன உன்னைக் கண்டுபிடிக்க எவ்வளவு கஷ்டப்பட்டேன், தெரியுமா? உன் அன்புக்காக ஏங்குகிறேன், வா'' என்று சொல்லிக் கொண்டே இரு கைகளையும் நீட்டினாள்.

''உனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? நான் உன்னுடைய குழந்தை இல்லை. நட்சத்திரக் குழந்தை. உண்மையாகவே நீ என் அம்மாவாக இருந்தால்கூட, அவலட்சணமான உன்னைக் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை. அவமானமாக இருக்கிறது. இங்கே நிற்காதே, ஓடிப்போ!'' என்று சொல்லி விரட்டினான்.

''ஒரே ஒரு முத்தம் கொடுடா, கண்ணா! போய்விடுகிறேன்'' என்று அவள் கெஞ்சினாள்.


''அவலட்சணமும் அழுக்குமான உனக்கா முத்தம்! முடியாது போ! அதைவிட ஒரு தவளைக்கோ, பாம்புக்கோ முத்தம் கொடுக்கலாம்'' என்று அவன் பதிலளித்தான். பிச்சைக்காரி அழுதுகொண்டே காட்டுக்குப் போனாள்.

நட்சத்திரக் குழந்தை விளையாடுவதற்காக நண்பர்களிடம் போனான். ஆனால் அவர்கள், ''உன்னோடு விளையாட மாட்டோம். நீ ஒரு தவளையைப் போல அழுக்கு. ஒரு பாம்பைப் போல அருவருப்பு. உன்னைப் பார்க்கவே பிடிக்கவில்லை. திரும்பிப் போ!'' என்று சொல்லிக் கேலி செய்தனர். நட்சத்திரக் குழந்தைக்கு அது ஆச்சரியமாக இருந்தது. குளத்திற்குச் சென்று தண்ணீரில் தன் உருவத்தைப் பார்த்தான். அவர்கள் கேலி செய்ததைப் போல நிஜமாகவே அவனுடைய உருவம் அருவருப்பாக மாறியிருந்தது!

அழகை இழந்துவிட்ட நட்சத்திரக் குழந்தைக்குத் தன்னையே பிடிக்கவில்லை. கீழே புரண்டு அழுதான்; கதறினான்; கண்ணீர் விட்டான். ''என் அம்மாவை நான் கொடுமைப் படுத்தினேன். அவளைத் துரத்தினேன். என் கெட்ட குணத்திற்குத்தான் இந்தத் தண்டனை கிடைத்திருக்கிறது. நான் இப்போதே போய் அம்மாவைத் தேடுவேன். மன்னிப்புக் கேட்பேன்.'' என்று தீர்மானித்தான்.

''அம்மா! அம்மா! நீ எங்கே இருக்கிறாய்? இங்கே வா அம்மா! என்னை மன்னித்துவிடு!'' என்று கதறிக் கொண்டே காடு மேடெல்லாம் சுற்றினான். ஊர் ஊராகத் திரிந்தான். எதிரில் வந்த சிறுவர்கள் அவனைக் கேலி செய்து துரத்தினர். எல்லோரும் அவனை ஒரு பைத்தியக்காரன் என்று நினைத்தனர். ஒருவராவது உதவி செய்யவில்லை.

மூன்று வருஷங்கள் நட்சத்திரக் குழந்தை தன் அம்மாவைத் தேடித் திரிந்தான். அதுவரையில் அவன் உலகத்திடம் அன்பு செலுத்தாததால் உலக



கழுதை விலை ஆறாயிரம்!

ஜெய்ப்பூருக்கு அருகில் உள்ள பாங்கார் ஃபாந்தா சந்தையில் சமீபத்தில் 'மங்கள்' என்ற ஃபெயருடைய ஒரு கழுதைக்கு ரூபாய் 5000 வரை விலை பேசப் பட்டதாம். ஆனால், ரூபாய் 6000—க்குக் குறைவாக மங்களை விற்க அதன் உரிமையாளர் சம்மதிக்கவில்லை. பார்த்தவர்கள் எல்லாம் அதன் அழகில் சொக்கி விட்டனராம்... அத்தனை வனப்பு மிக்க மேனியாம் மங்களுக்கு! குதிரையைப் போல உயரமும், பலமும், பொலிவும், அழகும், இளமையும் கொண்ட அக்கழுதை தினந்தோறும் 2 கிலோ வேர்க்கடலை தின்கிறதாம்!

-ஆர். எஸ். சுப்பிரமணியன்.

மும் அவனிடம் அன்பு செலுத்த வில்லை. இப்போது அவன் மனம் திருந்தியிருந்தான். பழைய செயல் களுக்காக வருத்தப்பட்டான்.

வழியில் அவன் ஒரு நகர எல்லையை அடைந்தான். உள்ளே நுழைந்ததும், காவல்காரர்கள் அவனைப் பிடித்தனர். ஒரு வழிப்போக்கனிடம் அவனை அடி மையாக விற்று விட்டனர். அந்த வழிப்போக்கன் ஒரு கெட்ட மந்திர வாதி. அவன் நட்சத்திரக் குழந்தை யைத் தன் மாளிகைக்கு அழைத்துச் சென்றான்; சிறையில் அடைத்தான்; கொடுமைப்படுத்தினான்.

ஒரு நாள் அந்த மந்திரவாதி நட்சத் திரக் குழந்தையை நோக்கி, ''இந்த ஊருக்கு அடுத்த காட்டில்மூன்று பெரிய தங்கக் கட்டிகள் மறைத்து வைக்கப் பட்டுள்ளன. அவை வெள்ளை, மஞ்சள், சிவப்பு ஆகிய நிறங்களில் இருக்கும். இன்று முதல் மூன்று நாட்களுக்கு நீ காலையில் புறப்பட்டுச் செல்ல வேண்டும். தினமும் ஒரு தங்கக் கட்டியைத் தேடி எடுத்து மாலைக்குள் திரும்பி வரவேண்டும். தங்கத்தைக் கொண்டு வராவிட்டால் தண்டனை கிடைக்கும். அப்புறம் நீ வருத்தப் படுவாய்'' என்று கூறிப் பயங்கர மாகச் சிரித்தான்.

நட்சத்திரக் குழந்தை நாள் முழு தும் காட்டில் அலைந்து தேடினான். தங்கக் கட்டி கிடைக்கவில்லை. காட் டில் ஒரு வேடன் வைத்த பொறியில் அகப்பட்டு அவதியுறும் ஒரு முயலைக் கண்டான். அதன்மீது இரக்கப்பட்டு அதை விடுவித்தான். முயல் அவனுக்கு நன்றி தெரிவித்ததோடு, வெள்ளைத் தங்கக் கட்டி இருக்கும் மரப் பொந் தையும் காட்டி உதவியது.

தங்கக் கட்டியை எடுத்து வரும் வழியில் அவன் ஒரு குஷ்டரோகியைச் சந்தித்தான். குஷ்டரோகி பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான். அவன் நட்சத்திரக் குழந்தையைப் பார்த்து, ''தம்பி! ரொம்பப் பசி. உதவி செய் யேன்!'' என்று கெஞ்சினான்.

''என் கையில் இந்தத் தங்கக் கட்டி மட்டும்தான் இருக்கிறது. இதை வைத்துக்கொள். எஜமானர் என் னிடம் கோபித்துக் கொண்டாலும் பர வாயில்லை'' என்று சொல்லி இரக்கப் பட்டு, அதைக் கொடுத்தான். வெறுங் கையோடு மாளிகைக்குத் திரும்பினான். மந்திரவாதி அவனை மிகவும் கோபித் துக்கொண்டான்.

இரண்டாம் நாளும் முறையே மஞ்சள், சிவப்பு நிறத் தங்கக் கட்டிகள்



முயலின் உதவியால் கிடைத்தன. ஆனால், அவற்றையும் அந்தப் பிச்சைக்காரக் குஷ்டரோகி மீது இரக்கப்பட்டு அவனுக்கே கொடுத்து விட்டான்.

மூன்றாம் நாள் அவ்வாறு தங்கத்தைக் கொடுத்துவிட்டு நட்சத்திரக் குழந்தை நகர எல்லைக்குள் நுழைந்தான். காவல்காரர்கள் அவனை வணங்கி வரவேற்றனர். திரளாகக் கூடியிருந்த மக்கள், ''நீங்கள்தான் எங்களுடைய அழகான இளவரசர். உங்களுக்காகத்தான் வெகு நாட்களாக நாங்கள் காத்திருக்கிறோம். வாருங்கள்'' என்று சொல்லி அழைத்தனர்.

''நான் அழகானவனும் இல்லை; இளவரசனும் இல்லை. என்னை விட்டு விடுங்கள்'' என்றான் நட்சத்திரக் குழந்தை. உடனே ஒரு காவல்காரன் பளபளக்கும் கேடயத்தை நீட்டினான். நட்சத்திரக் குழந்தை அதில் தெரிந்த தன்னுடைய அழகான உருவத்தைக் கண்டு அதிசயித்தான். கண்களில் அன்பும் கருணையும் பொங்க, முன்னைவிட அழகாக அவன் மாறியிருந்தான்.

கூட்டத்திலிருந்த பிரபுக்கள், ''இதே தினத்தில் ஓர் அழகான இளவரசன் வருவான். அவனால் நாடு நலம் பெறும் என்று முன்னோர்கள் எழுதி வைத்துள்ளனர்'' என்று கூறி, அவனுக்கு முடிசூட்ட முன்வந்தனர். அதற்குள் அந்தக் கூட்டத்தின் நடுவே நின்றிருந்த பிச்சைக்காரியான அம்மாவையும், அருகில் அந்தக் குஷ்டரோகியையும் கண்டான்.

ஓடிச்சென்று அம்மாவின் கால்களில் விழுந்து, தன்னை மன்னிக்கும்படி கதறினான்.

''மகனே, எழுந்திரு'' என்றாள், அம்மா. எழுந்ததும் அவனுக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. பிச்சைக்காரி ராணியாகவும், குஷ்டரோகி ராஜாவாகவும் மாறிக் காட்சி அளித்தனர்! அவர்கள்தான் தன் பெற்றோர்கள் என்று அறிந்து மகிழ்ச்சியடைந்தான். அவர்கள் அவனை அன்போடு அரண்மனைக்கு அழைத்துச் சென்று இளவரசனாக முடி சூட்டினர். கெட்ட மந்திரவாதி ஊரை விட்டு வெளியேற்றப்பட்டான். நட்சத்திரக் குழந்தை மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்து இனிதே வாழ்ந்தான்.

(Oscar Wilde எழுதிய ''The Star Child'' என்ற ஆங்கிலக் கதையின் சுருக்கமே இது.)

திருக்குறள் புதிர்-விடை

புதிர் 35 :

இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார் வாய்ச் சொல். (415)

வழுக்குகின்ற நிலத்திலே ஒருவருக்கு ஊன்றுகோல் எவ்வாறு பயன்படுகிறது! அதே போலத்தான் ஒழுக்கம் உடைய பெரியோர்களின் வாயிலிருந்து வரும் அறிவுரைகளும் வாழ்க்கையில் சிரமங்கள் ஏற்படும்போது உதவும்.

புதிர் 36 :

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்று எல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். (1033)

மற்றவர்கள் உண்ணும்படி உழவுத் தொழில் செய்து, தாமும் உண்டு வாழ்கின்றவர்தான் உரிமையோடு வாழ்கிறவர். மற்றவர் எல்லோரும் பிறர் தயவால் உண்டு அவரைத் தொழுது அவர் பின்னால் செல்பவர்களே.

கரும்பைக் கடிக்கும் தம்பியே — என்
விருப்பம் உனக்குத் தெரியாதா?
புகைப்படங்கள்:
புகைப்படங்கள்: எம். நடராஜன்.





துள்ளி ஓடும் அணில் — என்
தோளின் மீது பாருங்கள்.

பொங்கல் திருநாள் ஆட்டுக் குட்டிக்கும்
புல்லை நாங்கள் ஊட்டுகிறோம்.
புகைப்படம்: கோவை சிதாராம்.





அண்ணன் தலையில் அமர்ந்திருக்கும்
வண்ணக் கிளியைப் பாருங்கள்

ராணியின் வைர அட்டிகை



—திருமதி. விஸ்வநாதன்—

நீலமலை நாட்டின் ராணிக்குத் துணி வெளுக்கும் சேவகனாக வேலை செய்தான் பொன்னன்.

அவன் எவ்வளவு நன்றாக வேலை செய்தாலும் ராணி அவனுக்குச் சிறிது பணம்தான் கொடுப்பாள். அவனோ இதை உணரவில்லை. அவன் மிகவும் வெகுளி. ஆனால், மிக நல்லவன்; நேர்மையானவன்.

'அவன் மனைவியோ இதற்குமேல் உனக்குச் சம்பாதிக்கத் துப்பில்லை' என்று திட்டுவாள். அப்போதெல்லாம் மன வருத்தத்தோடு ஆற்றங் கரையில் உட்கார்ந்துவிடுவான்.

அன்று அவன் அப்படி உட்கார்ந்திருந்ததைப் பார்த்தாள் அதிர்ஷ்ட தேவதை. 'ராணிக்காக உழைத்து, உழைத்து இவன் ஒரு பலனையும் காணவில்லையே! சரி, இவன் பக்கம் அதிர்ஷ்டத்தைத் திருப்புவோம்' என்று எண்ணினாள்.

அடுத்த நாள் ராணி அருவியில் குளிக்கும் போது நகைகளைக் கழற்றித் தாம்பாளத்தில் வைத்துவிட்டுக் குளித்தாள். தோழிகள் காவலுக்கு நின்றனர்.

அதிர்ஷ்ட தேவதை ஒரு புறாவாக மாறி ராணியின் விலையுயர்ந்த வைர அட்டிகையைக் கொத்திச் சென்றாள். இதை, அறியாத தோழிகள் நகை களவு போனதாக அறிவித்தனர்.

புறாவோ பொன்னன் வீட்டு முற்றத்தில் வைர அட்டிகையை வைத்துவிட்டுச் சென்றது.

வேலை முடிந்து வீடு திரும்பிய பொன்னன், ''ஐயையோ! இதுராணியின் நகையாயிற்றே! இது எப்படி என் வீட்டில் வந்தது!'' என்று வியந்தான்.

சிறிது நேரத்தில் தெருவில் தண்டோராப் போடும் சத்தம் கேட்டது. பொன்னன் வாசலுக்குப்போய்ப் பார்த்தான்.

''டும்...டும்...டும்...ராணியின்வைர அட்டிகை களவு போய்விட்டது. களவாடியவனைப் பிடித்துக் கொடுப்பவருக்குப் பரிசு உண்டு. களவாடிய கள்வனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்படும் டும்.., டும்... டும்...''

பொன்னனுக்கு உடம்பு நடுங்கியது.

''ஐயையோ! அட்டிகை என்னிடமல்லவா இருக்கிறது! என்னையல்லவா கள்வன் என்று பிடிப்பார்கள்! இதை நான் களவாடவில்லையே! இது எப்படி என் வீட்டிற்கு வந்தது..!'' என்று பயந்து நடுங்கினான்.

அரண்மனையில் வேலை செய்பவர்களின் வீடுகளைச் சோதனை போடுவதற்காக அரசாங்கக் காவலர்கள் அவன் வீட்டை நெருங்கினார்கள்.

என்ன செய்வதென்று தெரியாமல் நடுங்கினான் பொன்னன். தூக்குத் தண்டனை பயமுறுத்தியது. விருட்டென்று அட்டிகையைப் பானைக்குள் போட்டுவிட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டான். உள்ளே வந்த சேவகர்கள் அதையும் இதையும் தேடிவிட்டுக் கடைசியில் அரிசிப் பானையைத் தொட்டார்கள்.

'அவ்வளவுதான்! தொலைந்தேன். கள்வனென்று என்னைத் தூக்கில் போட்டு விடுவார்கள். செத்தோம்!' என்று கண்களை மூடிக் கொண்டான்.

இதையறிந்த அதிர்ஷ்ட தேவதை வைர அட்டிகையைப் பாம்பாக மாற்றினாள். அரிசிப் பானைக்குள் கையை விட்டுத் தூக்கிய சேவகன், ''ஐயோ... பாம்பு! பாம்பு!... அரிசிப் பானையில் பாம்பு!'' என்று அலறினான். சேவகர்கள் வேகமாய்த் திரும்பி ஓடினார்கள்.

மாறாகப் பொன்னன் மகிழ்ச்சியுடன், ''என்னைக் காப்பாற்றிய தெய்வமே, வா...'' என்று பாம்பின் அருகில் சென்றான். பாம்பு மீண்டும் வைர அட்டிகையாக மாறியது!

'அட சட்... இது என்ன சோதனை! இந்த அட்டிகை என்னிடம் இருந்தால் எனக்குத் தூக்குத் தண்டனைதான் கிடைக்கும். இதைக் குப்பைத் தொட்டியில் போட்டுவிடலாம். யாராவது எடுத்துக் கொண்டு போகட்டும்' என்று எண்ணியவனாய்க் குப்பைத் தொட்டியில் எறிந்தான்.

''அப்பாடா, நிம்மதி! உயிர் பிழைத்தோம்'' என்று எண்ணினான். அவனுக்கு அதை விற்று நிறையப் பணம் சம்பாதிக்கலாம் என்ற எண்ணமே தோன்றவில்லை!

மறுநாள், கோழிக் கூடையைத் திறந்துவிட்ட பொன்னன் திடுக்கிட்டான். முட்டைகளுக்கு நடுவே பளபளத்தது வைர அட்டிகை. பொன்னனுக்குத் 'திக்'கென்றது. 'இது எப்படி இங்கே வந்தது?'

அவனது வெள்ளைச் சேவல் குப்பையைக் கிளறி வைர அட்டிகையைத் தூக்கி வந்த விஷயம் அவனுக்கு எப்படித் தெரியும்? அவன்தான் அப்போது நிம்மதியாய்த் தூங்கினானே!

''சரி...சரி..., இதைக் குப்பையில் போட்டதனால்தானே எப்படியோ வீட்டுக்குள் மறுபடியும் வந்தது? இதை ஆற்றில் தூக்கி எறிந்து விடலாம்''



கேட்க முடியுமா?

வானொலியில் தொடர் நாடகங்களோ, பிற தொடர் நிகழ்ச்சிகளோ வைக்கும்போது, முடிவில், ''இதன் அடுத்த பகுதியை அடுத்த வாரம் இதே நேரத்தில் கேட்கலாம்'' என்று அறிவிக்கிறார்கள். அவர்கள் சொல்லும் நேரத்திற்கு வைத்தால், நிகழ்ச்சி முடிந்தல்லவா போயிருக்கும்!

-ஆர். எஸ். சுப்பிரமணியன்.

என்று எண்ணியவன், அப்போதே ஆற்றங் கரைக்குச் சென்று வேகமாக அட்டிகையைத் தூக்கி ஆற்றில் விட்டெறிந்தான்.

''அப்பாடி! தொல்லை விட்டது. இனி என் உயிருக்கு ஆபத்து இல்லை''

இரண்டு நாட்கள் நிம்மதியாகத் தூங்கியிருப்பான். மூன்றாம் நாள் காலை,

''இங்கே வாங்களேன். இந்த அதிசயத்தைப் பாருங்களேன்'' என்று அவன் மனைவி அலறவும் ஓடிப்போய்ப் பார்த்தான்.

அவள் வாங்கிவந்த மீனின் வயிற்றில் பளபளத்தது அதே வைர அட்டிகை!

பொன்னன் திகைத்துப் போனான்.

'ஆற்றில் எறிந்த அட்டிகையை மீன் விழுங்கிவிட்டதே! அதை இவள் வாங்கி வந்து அறுத்து... அதன் வயிற்றில்... ஐயோ... எனக்குத் தூக்குத் தண்டனை அல்லவா கிடைக்கும்?'

''அடியே, அந்த நகை நமக்கு வேண்டாம். அதை உடனே தூர எறி'' என்றான்.

''ஆ! நல்லாருக்கு நீங்க சொல்றது! என்ன அழகான நகை! தூக்கி எறியறதாவது? என் கழுத்துக்கு இது எவ்வளவு அழகாக இருக்கும்!'' என்று வைர அட்டிகையை நன்றாக அலம்பிக் கழுத்தில் மாட்டிக் கொண்டாள். எவ்வளவோ அவன் சொல்லியும் அவள் கேட்கவில்லை.

''ஐயோ, போச்சு! என்ன செய்யறது இப்போது...?'' பலவாறு குழம்பிய பொன்னன் சொல்லாமல் கொள்ளாமல் ஊரை விட்டே ஓடிவிட்டான். வேறு ஊருக்கு வந்துபெயரை

மாற்றி வைத்துக் கொண்டான். சிறிய அளவில் அரிசி வியாபாரம் செய்து வாழ்ந்து வந்தான். தூக்குத் தண்டனையிலிருந்து தப்பினால் போதும் என்றஎண்ணத்தில் தன் இருப்பிடத்தை மனைவிக்குச் சொல்லாமல் இருந்தான்.

ஒரு மாதத்துக்குப் பிறகு ஒரு நாள் அரிசி வாங்கி வந்தான். மூட்டையைப் பிரித்து அரிசியைக் கொட்டினான். இடையே ஏதோ பளபளப்பாகத் தெரிந்தது. அரிசியை ஒதுக்கிக் கையில் எடுத்தான்.

அதே வைர அட்டிகை!

''ஐயோ! இதென்ன சோதனை! இது திரும்பவும் என்னிடம் வந்து விட்டதே! எனக்குத் தூக்குத் தண்டனைதானோ?''

அவன் மனைவி அரிசியை விற்கும்போது அட்டிகை கழன்று அரிசியில் விழுந்தது. அதிர்ஷ்ட தேவதைதான் அப்படிச் செய்தாள். இதை அறியாத மனைவி அரிசியை மூட்டை கட்டி அரிசிக்காரனிடம் ஒப்படைத்தாள்.

அந்த அரிசி மூட்டை வேறு ஊரில் விற்பனைக்குச் சென்றது. அதையே பொன்னன் வாங்கும்படி செய்தாள் அதிர்ஷ்ட தேவதை.

இப்போதாவது அதிர்ஷ்டத்தைப் புரிந்துகொண்டு வைர அட்டிகையை வைத்துக் கொள்வான் என்று எண்ணினாள்.

''இதைத் தரையில் போட்டாலும் திரும்பி வந்து விடுகிறது. தண்ணீரில் போட்டாலும் திரும்பி வந்து விடுகிறது. இப்போது இதை வானத்தில் போடுவோம். கடவுளே, இதை எடுத்துக்கொள்ளட்டும்'' என்று எண்ணினான். ஒரு திறந்த வெளி மைதானத்தில் நின்று கொண்டான். வானத்தை நோக்கித் தூக்கி எறிந்தான்.

அது மீண்டும் தரையில் விழுந்தது. மீண்டும் வேகமாக உயரத் தூக்கி எறிந்தான். மீண்டும் அது கீழே வந்து விழுந்தது.

மூன்றும் முறை தன் பலங் கொண்ட மட்டும் மிக வேகமாக எறிந்தான். கீழே எங்கேயாவது விழுந்ததா என்று குனிந்து பார்த்தான்.

அதே சமயம் கீழே விழுந்த அட்டிகை அவன் முதுகுக்குப் பின்னே மேல் அங்கியில் தொற்றிக் கொண்டது. இதை அவன் அறியவில்லை.

''அப்பாடா! தொலைந்தது. தப்பித்தோம்!'' என்று ஆனந்தமாய் நடந்தான்.

இந்த முறை கண்டிப்பாய்ப் புரிந்து கொள்வான் என்று நினைத்தாள் அதிர்ஷ்ட தேவதை.

ஆற்றோரமாய் நடந்தான் பொன்னன். குளித்தால் தேவலை என்று ஆற்றில் இறங்கி ஆனந்தமாகக் குளித்தான். மேல் அங்கியைக் கழற்றித் துவைத்தான்.

கையில் ஏதோ நெருடவே பிரித்துப் பார்த்தான்.

அதே வைர அட்டிகை!

''அட ராமா! இந்தத் தடவையும் வந்து விட்டதே!''

பொன்னன் குழப்பத்துடன் நீண்ட தூரம் நடந்தான். ஓர் அம்மன் கோயில் தெரிந்தது. உள்ளே போனான்.

''அம்பிகையே, நீ என் உயிரைக் காப்பாற்று. உனக்குக் காணிக்கையாக இதைச் செலுத்துகிறேன்'' என்று வேண்டிக்கொண்டான்.

வைர அட்டிகையை அங்கிருந்த பெரிய உண்டியலில் போட்டான்.

நிம்மதியாக வீடு திரும்பினான்.

சலிப்படைந்த அதிர்ஷ்ட தேவதை தன் முயற்சியைக் கைவிட்டாள். அட்டிகை உண்டியலிலேயே கிடந்தது. உண்டியலைத் திறந்த கோயில் அதிகாரிகள் அதிர்ச்சியுடன் அது ராணியினுடையது என்பதை அறிந்து, உடனே ராணியிடம் கொண்டு போய்ச் சேர்த்தனர். ராணி மகிழ்ந்தாள். திருடன் யாரென்று தெரியாவிட்டாலும் வைர அட்டிகை திரும்பக் கிடைத்ததே என்று மகிழ்ந்தாள்.

வைர அட்டிகை ராணியிடம் போய்ச் சேர்ந்துவிட்ட செய்தி பொன்னனுக்குத் தெரிந்தது. ''இனி பயமில்லை'' என்று ஊர் திரும்பினான். அரண்மனைக்குச் சென்று வேலையை மீண்டும் ஒப்புக்கொண்டு நன்கு உழைத்தான்.

அவனுக்குத் தெரிந்ததெல்லாம் உழைப்பு! உழைப்பு! உழைப்புதான்; பணமல்ல!

சென்ற இதழில் இடம் பெற்ற 'ஆஞ்சநேயர் கொடுத்தது' கதையை எழுதியவர்: இரா. சுவாமிநாதன்.

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி
உறுப்பினர் எண், பெயர், முகவரி

2134. கோ. ஐ. வெங்கடேஷ். 333H. மணியம் காலனி, சுப்பிரமணியபுரம் போஸ்ட் கோவை—641 040.
2135. ர. அகிலா. 333H. மணியம் காலனி. சுப்பிரமணியபுரம் போஸ்ட். கோவை. —641 040.
2136. மு. மகேஷ். 16 பி. நாராயண நகர், திண்டுக்கல்.
2137. ச. அச்சுதன். 16. அவுல்காரத்தெரு. கொசப்பேட்டை. வேலூர்—632 001.
2138. பி. சிவக்குமார். 13. பாவாசாமி அக்ரஹாரம். திருவையாறு—613 204.
2139. டி. பெரியநாயகம். 196. கன்னிமாரம்மன் கோவில் தெரு. தென்காசி—627 811.
2140. டி. ஆர். ராதிகா. த/பெ. கவிஞர் மனுபாரதி. தாவணி. நீலகிரி—643 261.
2141. டி. ஆர். சதீஸ்குமார். மே/பா. கவிஞர் மனுபாரதி. தாவணி. நீலகிரி—643 261.
2142. என். உஷா. 57. சலிவன்ஸ் கார்டன் ரோடு. மயிலை. சென்னை 4.
2143. கே. இலட்சுமணன். 1. சோழன் தெரு. உள்ளகரம். நங்கநல்லூர். சென்னை—61.
2144. பெ. பெரியசாமி. த/பெ. எம். பெரியசாமி. ஆசிரியர். தென்மலை—627 770.
2145. டி. எஸ். லலிதா. 81; சன்னதித் தெரு. திருப்பரங்குன்றம். மதுரை—5.
2146. ச. லட்சுமணன். 9. மேலத் தெரு. சிந்துபூந்துறை. திருநெல்வேலி 627 001.
2147. கோ. ஆனந்தகுமார். த/பெ. எஸ். கோவிந்தசாமி பிள்ளை. திண்ணனூர்—621 021.
2148. ஆர். ரவிசங்கர். 58. நடு ரோடு. எட்டயபுரம்—627 902.
2149. ஆர். காமாட்சி. 58. நடு ரோடு எட்டயபுரம்—627 902.
2150. கா. கணபதி சுப்பிரமணியன். சி—22. வீரபாகுநகர். பேட்டை—627 004.
2151. டி. சுப்ரமணி. 61—ஏ. நம்பர் 2. புதுத் தெரு. 'கிச்சிப்பாளையம். சேலம்—1.
2152. கு. க. ஜெய சோபா. த/பெ. பொ. தங்கநாடார். செருப்பாலூர் அஞ்சல்—629 161.
2153. கு. க. ஜெய அருண். த/பெ. பொ. தங்கநாடார் செருப்பாலூர் அஞ்சல்—629 161.
2154. Balaji, 21/1107, Nedumcaud, Karamanai P. O. Trivandrum-2
2155. பெ. சரவணன். த/பெ. வி. பெரியகருப்பன். போஸ்ட் மாஸ்டர். தலைமைத் தபால் நிலையம். திருப்பத்தூர் (இராமநாதபுர மாவட்டம்).
2156. எம். விஜயகுமார். மே/பா. வி. பி. மணிமேகலை. ப. யூ. து. பள்ளி. சித்தாமூர் —603 309.
2157. தேன்மொழி. 5/12. மாரியம்மன் கோவில் வீதி. முருங்கப்பாக்கம். புதுவை. 4.
2158. பா. மதுவித்யா. மே/பா. திரு. பாலசுப்ரமணியன். திருச்செந்துறை அக்ரஹாரம். ஜீயபுரம். திருச்சி- 639 101.
2159. பி. சரவணன். 26 ஏ/2. கொசமேட்டு தெரு. மேலசிந்தாமணி. திருச்சி—2.
2160. ஏ. தண்டபாணி. 5/8. மாரியம்மன் கோயில் வீதி. முருங்கப்பாக்கம். புதுவை—4.
2161. எஸ். குமார். த பெ. எஸ். சங்கரநாராயணன். Co—axial Staff Quarters ராமகிருஷ்ணாநகர். கல்லுக்குழி. திருச்சி—20.
2162. டி. சண்முகராஜு. 24—103—ஏ. வைராவிளை. மணிகெட்டி பொட்டல். குமரி மாவட்டம்.
2163. நா. இராஜமன்னார். 12. ஆசிரியர் குடியிருப்பு. பல்கலைநகர். மதுரை—21.
2164. கி. நப்ரவீனு. ஆற்றின் கரை. கடியப்பட்டணம். மணவாளக்குறிச்சி. குமரிமாவட்டம்
2165. இரா. முருகானந்தம். 24/1. சஞ்சீவிராயப்பேட்டை. திண்டிவனம்—604 001.
2166. ஜி. பி. ரம்யா. 3/26. கம்பரசம்பேட்டை. திருச்சி—2.
2167. ம. அருள். 4. அரண்மனைத் தெரு. சதிராமங்கலம். தஞ்சை மாவட்டம்.
2168. சி. ராம்குமார். 2. குமரகோயில் தெரு. திருவாரூர்.
2169. வி. கார்த்திகேயன். 18. கலாஸ்காரத் தெரு. ஆரணிப்பாளையம். ஆரணி—632301.
2170. ம. கார்த்திகேயன். சி—6. வேப்ப வீதி. வட்டம் 27. நெய்வேலி—3.
2171. ஜெ. அருள்மொழி. த/பெ. எஸ். ஜெகந்நாதன். விடிஸ்டேல் எஸ்டேட். நடுவட்டம் அஞ்சல். நீலகிரி மாவட்டம்.
2172. கீதா ராணி. த/பெ. எம். எஸ். பெருமாள். என்னுவிளை. படுக்கப்பத்து. திருநெல் வேலி மாவட்டம்.
2173. என். லட்சுமிநாராயணன். 15—பி. திருக்கச்சிநம்பி தெரு. சின்ன காஞ்சிபுரம்.
2174. சா. வெங்கடேசன். 26. சிங்கமாள் புரம் தெரு. திருவில்லிப்புத்தூர்.
2175. ப்ரீத்தா. 20. ரயில்வே குவார்ட்டர்ஸ். திருச்சி கோட்டை. திருச்சி—2.
2176. ஆர். முத்துக்குமார். 4. பூசாரி செட்டியார்வீதி. செட்டிபாளையம்—641 201.
2177. Geetha Gopalan, Room No. 4, Ibrahim Chawl, Sion - Trombay road, Chembur, Bombay-71
2178. Balaji Gopalan, Room No. 4, Ibrahim Chawl, Sion - Trombay road, Chembur, Bombay-71
2179. கோ. ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி. 34. பெரிய தெரு. சென்னை—5.
2180. என். மீனாட்சி. ஈ/178. வெள்ளி விழா மனை. டால்மியாபுரம். திருச்சி—621 651.
2181. அ. விவேகானந்தன். ஆனந்தபவன். பழைய தபால் தெரு. கும்மிடிப்பூண்டி-601 201.

2182. ல. ஸ்ரீவித்யா, 34—பி, புதுக்காலனி, மேலச்சிந்தாமணி, திருச்சி—2.
2183. எச். சுந்தரேசன், 10—ஏ, ஜவஹர் சங்கத் தெரு, சொக்கலிங்கபுரம், அருப்புக்கோட்டை.
2184. ஆ. குந்தவை, த/பெ. ஆறுமுகம், செட்டிக்காளிபாளையம், ஜக்கார்பாளையம் — 638 202.
2185. எச். சீதாலஷ்மி, 192, இராஜ வீதி, கோவை—1.
2186. எம். சக்தி, பி. கோபாலபுரம், ஆர். பொன்னாபுரம்— 642 002.
2187. எம். வி. பழனிவேலு பாக்கியராஜ், 47, காமராஜபுரம், 2—வது தெரு, சென்னை—34.
2188. Arvind Kumar 154, Siddhartha Nagar, Dr. T.C.M. Road, Bangalore—560053
2189. இரா. மஞ்சுளா, த/பெ. இரா. இராமச்சந்திரன், வட்டார விரிவு போதகர், ஆரம்ப சுகாதார நிலையம், வால்பாறை—642 127.
2190. வை. குமரகுரு, 10, ராமசாமி மேஸ்திரி தெரு, சென்னை—5.
2191.
2192. ஆர். சீனிவாசன், 16, அக்ரஹாரம், பண்ருட்டி—607 106.
2193. எஸ். சுரேஷ், 11, கோகுலநகர், தேவகோட்டை—623 302.
2194. ஆர். பாலாஜி, 31, சின்னத் தெரு, சத்தியமங்கலம்—638 401.
2195. கே. சிவராமன், 17—ஏ, ஒத்தைவாடைத் தெரு, பாரதிபுரம், பாண்டிச்சேரி—11
2196. பி. சுரேஷ், 54, வெங்கடசாமி தெரு, கோட்டை, சேலம்—1.
2197. N. Kumar, No. 1, Hari — Kunj S.L.V. Press, Galli Ahilyabai Chowk, Kalyan—421301
2198. க. அ. பாலகிருஷ்ணன், 78, சாந்தி இல்லம், கந்தம்பாளையம், க. செ. பாளையம், அஞ்சல், பெரியார் மாவட்டம்.
2199. க. அ. மோகன் சிவக்குமார், 78, சாந்தி இல்லம் கந்தம்பாளையம், க. செ. பாளையம் அஞ்சல், பெரியார் மாவட்டம்.
2200. ச. சுபா, 18, ராமகிருஷ்ண ஐயர் தெரு, தாம்பரம் 600 045.
2201. ஆர். ஸ்ரீநித்யா, 17, நேரு தெரு, ராம்நகர், கோவை—641 009.
2202. S. Narayanamoorthy, 12, New Vishab Coop. Housing Society Ltd., Katemani Vali, kolsewadi, Ganeshwad P. O. Kalyan (E)
2203. S. Sundar, 8, Madhav bhuvan, Deodhar road, Matunga, Bombay-400019
2204. எஸ். பன்னீர்செல்வம், 5—ஏ, கன்னாரத்தெரு, திருவாரூர்—610 002.
2205. கு. இமயவரம்பன், ஜி—5, ஔவைநகர், தருமபுரி—636 705.
2206. என். பி. சங்கீதா, 6/191, புலியகுளம் ரோடு, கோவை—641 018.
2207. ஆ. செந்தில், 105, பெரியார் நகர், (மாடி) திருவானைக்கோயில், திருச்சி—5.
2208. க. ரெகுபதி, 3/21, சன்னதித் தெரு, திருவாடானை—623 407.
2209. கே. டி. மனோகரன், 42, பிள்ளையார் கோயில் தெரு, ஆள்வார்பேட்டை, சென்னை-18
2210. ஒய். அஷ்டலெட்சுமி, 27, கோவலன் நகர், மதுரை—3.
2211. ஒய். விஸ்வபாரதி, 27, கோவலன் நகர், மதுரை—3.
2212. மு. முருகுவேந்தன், த/பெ. கு. முல்லை எழிலன், 'எழிலகம்', அறிஞர் அண்ணா தெரு, மீனாம்பாள்புரம், மதுரை—2.
2213. கே. தியாகராஜன், 117, துர்க்காலயா ரோடு, திருவாரூர்.
2214. ச. சிவக்குமார், 224, கோவிந்த செட்டி தெரு, காவேரிப்பட்டணம், தருமபுரி மாவட்டம்
2215. எஸ். வெங்கடரமணா, பிளாட் எண் 204, கே. கே. நகர், மதுரை—20.
2216. வே. அமுதா, சி—1, எழுத்தாளர் வடக்கு வீதி, வட்டம்—9, நெய்வேலி—1.
2217. ஆர். மணிகண்டன், 144, பரமசிவன் கோயில் தெரு, போடி நாயக்கனூர்—626582
2218. ப. சாமுவேல் பிரபாகர், 77, திருவள்ளுவர்புரம், 1—வது தெரு, குன்றமேடு, சென்னை —600 094.
2219. ஜெ. செண்பகராமன், 14, இராகவன் தெரு, மன்னார்குடி—614 001.
2220. ஜெ. ராஜநாராயணன், 14, இராகவன் தெரு, மன்னார்குடி—614 001.
2221. க. சுதா, 124, அருளானந்த நகர், புதுக்கோட்டை ரோடு, தஞ்சாவூர்.
2222. ஜி. நாகராஜன், த/பெ. டாக்டர் ஏ. ஜி. பதி, பி. எம். சி. எஸ். ஆஸ்பத்திரி கோரக்காட்டு வலசு, காவேரி, ஈரோடு—7.
2223. டி. கணேஷ், 45—சி, ஜெயா நிலையம், காந்திநகர், தர்மபுரி.
2224. ஜெ. எனிற் ரொட்ரிகோ 31—சி, தட்டார் மலைத் தெரு, செங்கற்பட்டு—2.
2225. குரு. வித்யா சங்கர், 23, சந்திரா ரெட்டி ரோடு, அண்ணாமலைநகர்—608 002.
2226. குரு. ஸ்ரீவித்யா, 23, சந்திரா ரெட்டி ரோடு, அண்ணாமலை நகர்—608 002.
2227. வி.எஸ். மாதவன், த/பெ. வி. சீனிவாசன், முருகன் காம்பவுண்ட், முதல் குறுக்குத் தெரு, மீனாட்சி நகர், மதுரை—625 012.
2228. ஆர். பாலாம்ருதா, த/பெ. ஸ்ரீ குருஜி, ஏர்வாடி—609 601.
2229. டி. முத்துக்குமார், 17, முதலியார் தெரு, திருவாரூர், தஞ்சை மாவட்டம்.
2230. க. சிவசங்கரன், த/பெ. எஸ். கருப்பையா, ஆசிரியர், வடக்கு வீதி, ஆச்சாள்புரம் —609 101.
2231. ஜி. சந்திரசேகரன், 65/1, பிள்ளையார் கோயில் தெரு, வேலூர்—632 001.

(இன்னும் வரும்)

சோம்பல் சுகந்தி



வி.ர. வசந்தன்

மணி எட்டைத் தாண்டிவிட்டது. சுகந்தி இன்னும் படுக்கையை விட்டு எழும்பவில்லை. மூன்றாவது முறையாக அவளது அம்மா வந்து எழுப்பவும், வேண்டா வெறுப்பாக எழுந்து உட்கார்ந்து சோம்பல் முறித்தாள். கொட்டாவி விட்டவாறு தோட்டத்திற்குப் போனவள் முகம் கழுவி, பல் விளக்கி வர அரைமணி நேரமானது.

''அடி சுகந்தி, ஸ்கூல் போகவேண்டாமா? சீக்கிரம் குளிச்சிட்டு வாடி'' என்று அம்மா சமையலறையில் இருந்து குரல் கொடுத்தாள்.

அவள் குளித்துவிட்டு, காலை உணவை முடிக்கும்போது மணி ஒன்பது. அவசர அவசரமாகத் தன் நோட்டுப் புத்தகங்களைத் தேடினாள். அவை அங்கொன்றும் இங்கொன்றுமாக இறைந்து கிடந்தன. அட்டவணையைப் பார்த்துத் தேவையானதை எடுத்துக் கொள்ளக்கூட அவகாசம் இல்லை. கையில் கிடைத்ததையெல்லாம் பைக்குள் திணித்தாள். உடை மாற்றிவிட்டுச்செருப்பைத் தேடினால், கட்டிலின் அடியில் ஒன்று கிடந்தது. மற்றொன்றைக் காணோம்! அதைத் தேடிப் பிடிப்பதற்குள் அவள் அம்மாவுக்குப் போதும் போதுமென்றாகி விட்டது. கடைசியில் அந்தப் பொல்லாத செருப்பு அப்பாவின் மேசையடியில் இருக்கும் குப்பைக் கூடையில் கிடந்தது!

அவசர அவசரமாக அம்மாவிடம் விடைபெற்றுக் கொண்டு பள்ளிக்கூடம் கிளம்பிய போது, நேற்று கணித ஆசிரியை வீட்டுப் பயிற்சிக்காகக் கணக்குகளைத் தந்திருப்பது ஞாபகம் வந்தது. கணித ஆசிரியை மிகவும் பொல்லாதவர். வீட்டுப் பயிற்சிகளை ஒழுங்காகச் செய்யாவிட்டால், நூறு தடவை ஒவ்வொன்றையும் எழுதி வரும்படி சொல்லி விடுவார். என்ன செய்வது? பக்கத்து வீட்டு ஜோதி தான் இருக்கிறாளே, அவளைப் பார்த்து எழுதி விட்டால் போகிறது?

ஒரே ஓட்டமாக ஜோதியின் வீட்டுக்கு ஓடினாள் சுகந்தி. ''ஜோதி, ஜோதி'' என்று அவள் அவசரமாகக் கூப்பிட, வெளியே வந்த ஜோதியிடம் ''நேத்து மிஸ் செய்து வரச் சொல்லிக் கணக்குக் குடுத்தாங்களே. நேரமே இல்லேடி. ஒன்னோட நோட்டைக் கொஞ்சம் கொடேன். எழுதிக்கிட்டுத் தர்ரேன். இல்லேன்னா மிஸ் இம்போஸிஷன் போட்டுடுவாங்க'' என்றாள்.

ஜோதி தன் கணித நோட்டைக் கொண்டுவந்து அவளிடம் கொடுத்தாள். அவள் செய்திருந்த அந்தக் கணக்குகளைப் பார்த்து அப்படியே தன் நோட்டில் எழுதிக் கொண்டு, ''ரொம்ப தாங்க்ஸ்டி'' என்று திருப்பித் தந்தாள் சுகந்தி.

சுகந்தி ஒன்றும் வகுப்பில் மக்கு மாணவியல்ல. ஆனால், எதையும் ஒழுங்காகத் திட்டமிட்டுச் செய்ய மாட்டாள். பள்ளிக்கூடம் விட்டு வீட்டிற்கு வந்தால், உடைகளைக் கழற்றி எங்கேயாவது வீசுவாள். கொடியில் கிடக்க வேண்டியது மேசை மீது கிடக்கும். செருப்பைக் கழற்றி எறிவாள். புத்தகங்கள் அலங்கோலமாகச் சிதறிக் கிடக்கும். எப்போதாவது அவளது அம்மா வந்து ஒழுங்குபடுத்தி வைத்தால்தான்! காலையில் வெயில்



முதுகில் அடிப்பது வரையிலும் தூங்குவாள். பின் தோட்டத்தில் சோம்பேறியாகச் சுற்றிக் கொண்டிருப்பாள். பள்ளிக்கூடத்திற்குப் போக வேண்டிய நேரம் வந்ததும், அவசர அவசரமாகக் கிளம்பி, அந்தப் பரபரப்பில் எதையாவது மறந்து விட்டுப் பின் ஆசிரியை கேட்கும்போது விழிப்பாள். வீட்டுப் பயிற்சிகளைச் செய்ய மறந்து விட்டு, கடைசி நேரத்தில் ஜோதியிடம் ஓடுவாள். ஆசிரியைகளின் கோபத்தில் இருந்து தப்பித்துக் கொள்ள, ஜோதியின் பயிற்சி நோட்டுக்கள்தான் அவளுக்குக் கைகொடுத்து வந்தன!

சுகந்தி புத்திசாலி என்பதை ஜோதி அறிவாள். ஆனாலும், அவளது சோம்பேறித் தனத்தைக் குறித்து நேரடியாகச் சொன்னால் அவளது மனம் வருந்துமே என்று முகம் கோணாமல் அவளுக்கு உதவுவாள். ஆனால், அவள் தன் தவற்றை எப்படியாவது உணரும்படி செய்து விட வேண்டும் என்று தனக்குள் நினைத்துக் கொண்டாள் ஜோதி.

அன்றும் சில கணக்குகள் வீட்டுப் பயிற்சிக்காகத் தரப்பட்டிருந்தன. அவற்றைக் கூட்டி, பெருக்கி, வகுத்து, கழித்துக் கொண்டிருக்க, சோம்பல் பட்ட சுகந்தி வழக்கம் போல ஜோதியின் வீட்டை நோக்கி ஓடினாள்.

ஆனால், என்றும் கனகச்சிதமாக நோட்டைக் கொண்டு வந்து, சுகந்தியிடம் கொடுத்துவிடும் ஜோதி, அன்று சரியாகப் போடத் தெரியாமல் கணக்குகளோடு போராடிக் கொண்டிருந்தாள்.

''ஏண்டி, இன்னுமா கணக்குப் போட்டுக்கிட்டு இருக்கே! நேரமாச்சே'' என்றாள் சுகந்தி பரபரப்புடன்.

''ஆமாண்டி, சரியாக வரல்லே... நீயும் போட்டுப் பாரேன், கொஞ்ச நேரத்துல முடிச்சிடலாம்'' என்றாள் ஜோதி.

''அதற்கெல்லாம் நேரமில்லேடி. கிளம்பு. வழியில ஜெயந்தியோட வீடு இருக்கே, அவ கண்டிப்பா செய்திருப்பா. அவளைப் பார்த்து எழுதிக்கலாம்'' என்றாள் சுகந்தி அவசரமாக.

அவள் இப்படிச் சொன்னதும், ''சே. அது தப்புடி... நான் மாட்டேன்... ஏன், அவளால முடிந்தால் நம்மால முடியாதா? எல்லோருக்கும் ஒரே மாதிரியாத்தானே டீச்சர் பாடம் நடத்தறாங்க'' என்றாள் ஜோதி சட்டென்று.

சுகந்தியின் முகம் சுண்டிப்போனது. ஒவ்வொரு நாளும்தான் இவளைப் பார்த்து எழுதுகிறேனே, அப்படியென்றால் என்னைப்பற்றி இவள் மனத்தில் என்ன நினைத்திருப்பாள்!' அவளுக்கு ஒரே வெட்கமாகப் போய்விட்டது.

ஆனால், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் தன் பயிற்சி நோட்டை எடுத்து ஒவ்வொரு கணக்காக முயன்று போட ஆரம்பித்தாள். அரைமணி நேரத்திற்குள் அத்தனையும் போட்டு முடித்துவிட்டாள்!

ஜோதியோ இன்னும் போட முடியாமல் தவித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அதைக் கவனித்த சுகந்தி, ''நான் எல்லாத்தையும் போட்டு முடித்து விட்டேன்... என் நோட்டைத் தரட்டுமா?'' என்றாள் தயக்கத்துடன்.

''வேண்டாம் சுகந்தி... நம்முடைய வேலையை நாமே செய்வதுதான் முறை. அப்போதுதான் அதிலுள்ள கஷ்டமும் எளிமையும் புலனாகும்... இல்லையென்றால் கடுகை மலையாகவும், மலையைக் கடுகாகவும் நினைத்து, நமக்குள்ளேயே தப்புக் கணக்குப் போடும்படி ஆகிவிடும்'' என்றாள் ஜோதி.

அவள் சொல்வது உண்மைதானே! அரைமணி நேரம் வீட்டில் முயன்றிருந்தால், கடைசி நேரத்தில் அங்கும் இங்கும் ஓடி இடர்ப்பட வேண்டியதில்லையே! இருவரும் பள்ளிக்குச் செல்கையில் ஜோதி கூறியவற்றைச் சிந்தித்துக் கொண்டே போனாள் சுகந்தி.

அன்று அத்தனை கணக்குகளையும் ஒழுங்காகச் செய்திருந்தது சுகந்தி மட்டுந்தான்! ஆமாம், அன்று கொடுக்கப்பட்டிருந்த கணக்குகள் எல்லாமே கடினமானவை.

கணித ஆசிரியை அதற்காக அவளைப் பாராட்டிய போது, மட்டில்லாத மகிழ்ச்சியும், திருப்தியும் மனத்துள் நிறைவதை உணர்ந்தாள் சுகந்தி.

மறுநாள், சுகந்தியின் அறைக்குள் நுழைந்த அம்மா, அப்படியே வியந்து நின்றாள். அவள் புத்தகங்கள் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. உடைகள் அழகாகக் கொடியில் தொங்கிக் கொண்டிருந்தன. சுகந்தி, தன் பாடப் பயிற்சிகளை அமைதியாகச் செய்து கொண்டிருந்தாள். ஜோதியைப் போலவே ஒரு தோழி கிடைத்தால், எந்த சுகந்திதான் திருந்தாமல் இருப்பாள்?

“என் கதையைக் கேளுங்கள்” – ஒட்டகம்




நீங்கள் வாழை மரத்தைப் பற்றி மிகவும் பெருமையாகப் பேசுகிறீர்கள். வாழை மரத்தின் இலை, பூ, காய், பழம், தண்டு, கிழங்கு, பட்டை, நார் எல்லாம் உங்களுக்கு உபயோகப்படுவதால்தானே அப்படிச் சொல்லுகிறீர்கள்? நான்கூடத்தான் வாழையைப் போல் பலவிதத்திலும் உதவி வருகிறேன்.

பாலைவனத்தில் சாமான் தூக்கவும், சவாரி செய்யவும் என்னைத்தான் அரேபியர்கள் பயன்படுத்துகிறார்கள். என் பாலைக் கறந்து குடிக்கிறார்கள். அதிலே பாலாடைக் கட்டி செய்து, பலநாள் கெடாமல் வைத்திருக்கிறார்கள். என் உரோமத்தில் கயிறு திரிக்கிறார்கள்; துணி நெய்கிறார்கள். இவை மட்டுமா? ஓவியர்கள் உபயோகப் படுத்துகிறார்களே தூரிகை, அதற்கும் என் உரோமம் உதவுகிறது. என் சாணத்தைக்கூட அரேபியர்கள் விடுவதில்லை. வறட்டி தட்டி எரிக்கிறார்கள். அரேபியர்களில் சில பொல்லாதவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் என் இனத்தவரைக் கொன்று மாமிசத்தையும் தின்றுவிடுகிறார்கள்!

செத்த பிறகுகூட நாங்கள் உபயோகப்படுகிறோம். எங்களுடைய தோலைப்பதனிட்டுப்பைகள், குல்லாக்கள் செய்கிறார்கள். தந்தத்தைப் போல் எங்களுடைய எலும்பிலும் பல சாமான்கள் செய்கிறார்கள்.

என் முதுகைப் பாருங்கள். எனக்கு ஒரே ஒரு திமில்தானே இருக்கிறது? சில ஒட்டகங்களுக்கு இரண்டு திமில்கள் இருக்கும். ஆனால், அவற்றை நான் பிறந்த அரேபியப் பாலைவனத்திலே காண முடியாது. சைனாவிலும் சைபீரியாவிலுமே காணலாம். அவை எங்களைவிடக் குள்ளமாகவும், குண்டாகவும் இருக்கும். கால்களும் குட்டையாக இருக்கும். அங்கெல்லாம் மலைகள் அதிகம். கால்கள் குட்டையாக இருப்பதால், மலை மேல் ஏறுவது சுலபம். ஆனால், எங்களைப் போல் மணல் வெளியில் நடப்பதற்குக் குட்டைக் கால்களை விட நெட்டைக் கால்கள்தான் வசதியாயிருக்கின்றன. ஆகவேதான், எங்களுடைய கால்கள் நெட்டையாயிருக்கின்றன.

எங்களுடைய உரோமத்தைவிட அவைகளின் உரோமம் அடர்த்தியாயிருக்கும். காரணம், அவை வசிக்கும் இடங்களில் அடிக்கடி குளிர் காற்று வீசும். வறண்ட பாலைவனத்தில் வசிக்கும் எங்களுக்கு அவ்வளவு அடர்த்தியான உரோமம் எதற்கு?



என் இனத்தவரை அரேபியாவில் மட்டுமல்ல; வட ஆப்பிரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் உள்ள சில வறண்ட பிரதேசங்களிலும் காண

லாம். உங்கள் தேசத்தில்கூட என் இனத்தைச் சேர்ந்த சிலர் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் வண்டி இழுக்கிறார்கள். சிலர் வயலை உழுகிறார்கள். கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைக்கவும் சிலர் உதவுகிறார்கள்.

நான் பாலைவனத்தில் வசிப்பதாகச் சொன்னேன் அல்லவா? பாலைவனம் என்றால் உங்களுக்குத்தான் தெரியுமே! இங்கு உயரமான கட்டடங்களைப் பார்க்கவே முடியாது. பசுமையான வயல்களைப் பார்ப்பதே அபூர்வம். இங்கு மழை எப்போதாவதுதான் பெய்யும். சில இடங்களில் 6, 7 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் மழை பெய்வதுண்டு!

என்னுடைய எஜமானர் பெயர் அப்துல்லா. அவருக்குச் சொந்தமாக வீடு கிடையாது. கூடாரம்தான் அவருடைய வீடு. அவரும் அவருடைய குடும்பத்தாரும் பாலைவனத்திலே ஓரிடத்தில் நிலையாகத் தங்க மாட்டார்கள். ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்கள் ஓரிடத்தில் கூடாரம் போடுவார்கள். பிறகு, அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டு வேறு ஓரிடத்திற்குப் போவார்கள். இப்படி இடம் விட்டு இடம் போவதற்கு நான்தான் மிகவும் உதவியாயிருப்பேன். அவர்களுடைய கூடாரம், சாமான்கள், கம்பளிகள் எல்லாவற்றையும் நான்தான் சுமந்து செல்வேன்.

பாலைவனத்தில் என்னைப்போல் எவராலுமே நடக்க முடியாது. அதனால்தானே என்னைப் 'பாலைவனக் கப்பல்' என்கிறீர்கள்! முதுகிலே 600, 700 பவுண்டு எடையைச் சுமந்துகொண்டு ஒருநாளுக்கு 25 அல்லது 30 மைல் தூரங்கூட நடப்பேன். அதற்கு மேல் என்றால் முடியாது. வீண் தொந்தரவு செய்தால், விழுந்து படுத்துக் கொள்வேன்!

என் எஜமானர் ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்திற்குப் புறப்படுவதற்கு முன்னால், என் திமிலை ஒரு பார்வை பார்ப்பார். அது 'கொழு கொழு' என்று இருந்தால், ''சரி, கவலையில்லை; நீண்ட தூரம் போகலாம்'' என்று முடிவு கட்டுவார். புறப்படுவதற்கு முன்பு, மோட்டார் காரில் பெட்ரோல் இருக்கிறதா என்று பார்க்கிறீர்களே, அப்படித்தான்!

பாலைவனத்தில் எனக்கு அபூர்வமாகவே உணவு கிடைக்கும். கடற்கரை ஓரத்தில் அல்லது ஆற்றங்கரை அருகேதான் மரம் செடி கொடிகளைக் காண முடியும். அங்கேதான் மக்களும் வீடு கட்டிக்கொண்டு நிரந்தரமாக வசிப்பார்கள். அங்கு என் எஜமானர் வியாபாரத்திற்காகச் செல்வதுண்டு. அப்படிப் போகும்போது, அங்கு ஏராளமாக உணவு கிடைக்கும். நிறைய நிறையச் சாப்பிடுவேன். தேவைக்கு அதிகமாகவே சாப்பிட்டு வைப்பேன். நான் தேவைக்கு மேல் சாப்பிட்டது எவ்வளவு என்பதை, என்னுடைய திமிலைப் பார்த்தே கண்டு பிடித்து விடலாம். கொழுப்பாக அது அங்கே இருக்கும்.

பாலைவனத்தில் செல்லும்போது பல நாட்களுக்கு உணவு கிடைக்காது. அப்போது என் திமிலில் இருக்கும் கொழுப்பு உதவியாயிருக்கும். எனக்கு வேண்டிய சத்து அங்கிருந்து கிடைக்கும். நாள் ஆக ஆக, திமில் சிறுத்துக் கொண்டே வரும். கடைசியில் அது தொய்ந்து போய் முதுகோடு ஒட்டிக் கிடக்கும்.

தண்ணீர் கிடைக்கும் போதும் இப்படித்தான் செய்வேன். அளவுக்கு மேல் குடித்துவிடுவேன். என் வயிற்றிலே தேன்கூடு போல் பல அறைகள் உள்ளன. அந்த அறைகளில் தண்ணீர் தேங்கி நிற்கும். அந்த அறைகளிலிருந்து தேவையான தண்ணீரை எடுத்துக் கொள்வேன். இதனால், பல நாட்கள் தண்ணீர் குடிக்காமலே என்னால் காலம் தள்ள முடிகிறது.

வறண்ட பாலைவனத்தில் சில முட் செடிகள் வளர்வதுண்டு. அந்தச் செடிகளைப் பார்த்தால் நான் விட மாட்டேன். ''அடேடே, அதிலுள்ள முட்கள் நாக்கைக் குத்திவிடுமே! வாயைக் கிழித்து விடுமே!'' என்று கவலைப்படுகிறீர்களா? கவலைப்படாதீர்கள். அந்த முட்கள் எங்களை ஒன்றுமே செய்வதில்லை. குள்ளமாக அங்கே ஒரு முள் செடி இருக்கிறது. அதற்குப் பெயர் என்ன தெரியுமா? ஒட்டக முள்ளேசடி! எங்களுக்குப் பிரியமான செடியாக இருப்பதால்தான் அதற்கு அப்படிப் பெயர் வைத்து விட்டார்கள்!

ஆடுமாடுகளைப் போல் நானும் அசை போடும் மிருகம்தான். கிடைக்கும் உணவை அப்படியே விழுங்கிவிடுவேன். .பின்னர் சாவதானமாக, விழுங்கிய உணவை வாய்க்குக் கொண்டு வந்து பற்களால் நன்றாக மென்று தின்பேன்.

எனக்கு நீந்தத் தெரியாது. ஓடும் தண்ணீரைக் கண்டாலே பயம்தான்! நான் என்ன, தண்ணீர்க் கப்பலா? பாலைவனக் கப்பல்தானே! பாலைவனத்



தில் தண்ணீரைக் கடக்கவேண்டிய தேவையே வருவதில்லையே!

பாலைவனத்தில் பகல் நேரத்திலே வெயில் மிக மிக அதிகம். பாலைவனத்தில் பல ஆண்டுகளாக வாழும் என் எஜமானர்கூட நடுப்பகலில் வெளியே தலைகாட்ட மாட்டார். அவரும், அவர் குடும்பத்தாரும் கூடாரத்திற்குள்ளே தங்கியிருப்பார்கள். ஆனால், நான் சூரியனுக்குப் பயப்படுவதே இல்லை. கடுமையான வெய்யிலில்கூட நான் வெட்டவெளியில்தான் படுத்திருப்பேன்.

பாலைவனத்தில் அடிக்கடி சூறாவளி வீசும். அந்தக் காற்று மணலை வாரி வாரி இறைக்கும். அப்போது நான் தரையிலே கழுத்தை நன்றாக நீட்டிப் படுத்துக் கொள்வேன். கண்களையும், மூக்கையும் இறுக மூடிக் கொள்வேன்.

''கண்களை மூடுவதற்குத் தான் கண் இமைகள் இருக்கின்றன. மூக்கை எப்படி மூட முடியும்?'' என்றுதானே கேட்கிறீர்கள்? என் மூக்கைக் கூர்ந்து பாருங்கள். அது அகலமாகவோ அல்லது வட்டமாகவோ இருக்கிறதா? இல்லையே! உண்டியல் பெட்டியில் ஓட்டை இருப்பது போலத்தான் என் மூக்கும் இருக்கிறது! அதனால் மணற் காற்று வீசும்போது மூக்கை நான் இறுக மூடிக்கொண்டு விடுவேன். ஒரு தூசுகூட என் மூக்குக்குள்ளே நுழைய முடியாது!

மணற்காற்று அடிக்கும்போது, என் எஜமானர் என்ன செய்வார், தெரியுமா? தலை முதல் கால் வரை போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு, என் பக்கத்திலே வந்து கால்களை முடக்கிப் படுத்துக்கொள்வார். காற்று நின்றதும் எழுந்து போர்வையில் உள்ள மண்ணைத் தட்டி விடுவார்.

அரேபியாவில் அடிக்கடி ஒட்டகப் பந்தயம் நடக்கும். அதில் கலந்து கொள்ளும் ஒட்டகங்களுக்குப் 'பந்தய ஒட்டகங்கள்' என்று பெயர். ஆனால், குதிரையைப் போல் அவர்களால் வேகமாக ஓட முடியாது. அதிகமாகப் போனால், மணிக்குப் பன்னிரண்டு மைல் வேகம் போகும்.

அரேபியாவில் 'ஒட்டகச் சண்டை' ஆண்டுக்கு ஒரு முறை நடக்கும். எனக்கு இதிலெல்லாம் பழக்கமில்லை. ஆனாலும், எனக்குத் தெரிந்த சில நண்பர்கள் நன்றாகச் சண்டை போடுவார்கள். இந்தப் பந்தயத்தில் வெற்றி பெறும் ஒட்டகத்தின் எஜமானருக்குப் பரிசு கிடைக்கும். என்ன பரிசு தெரியுமா? ஒரு கழுதைதான் பரிசு!

குதிரைச் சவாரி செய்யும்போது, நீங்கள் கால்கள் இரண்டையும் இருபுறமும் தொங்க விடுகிறீர்கள். ஆனால், எங்கள் மேல் அப்படி உட்கார்ந்து சவாரி செய்யமாட்டார்கள். திமிலில் அமர்ந்து கால்கள் இரண்டையும் பிடரியில் வைத்துக் கொள்வார்கள்.

என் முதுகில் ஏறிச் சவாரி செய்ய உங்களுக்கும் ஆசையாயிருக்கிறதா? இதோ நான் தயார். ஆனால், குதிரைச் சவாரி போல் இந்தச் சவாரியும் சுகமாக இருக்கும் என்று நினைத்து விடாதீர்கள்! மிகவும் அசௌகரியமாயிருக்கும். இப்படியும் அப்படியும் அசைந்து அசைந்து நான் செல்வதால் புதிதாகச் சவாரி செய்பவர்களுக்கு மயக்கம்கூட வந்துவிடும்.! ''மயக்கம் வந்தால் வரட்டுமே!'' என்கிறீர்களா? சரி, வாருங்கள். தங்கள் வரவு நல்வரவாகுக!



உமாவின் பாட்டி

ஆர். ராதாகிருஷ்ணன்

மீனாட்சிப் பாட்டிக்கு இப்படி ஒரு நோய் வந்து எழுந்து நடக்கக் கூட முடியாமல் படுத்த படுக்கையாய் இருக்க வேண்டிய நிலைவரும் என்று யாரும் கனவில்கூட எதிர்பார்த்திருக்க முடியாது. காலில் சக்கரத்தைக் கட்டிக் கொண்டாற்போல, எப்பொழுதும் ஒரு வண்ணத்துப் பூச்சி போல ஓய்வில்லாமல் தன் கடமையில் உழன்று கொண்டிருந்த மீனாட்சிப் பாட்டி இப்போது சிறகொடிந்த பறவையாய், தன் இயலாமையால் புலம்பிக் கொண்டிருக்கிறாள்.

மீனாட்சிப் பாட்டியைத் தெரியாதவர்கள் யாரும் அந்த ஊரில் இருக்க மாட்டார்கள். அந்த ஊர் மக்களின் தேவையை நிறைவேற்றி ஒரு வேலைக்காரி போலப் பணியாற்றியவள் மீனாட்சிப் பாட்டி. மீனாட்சிப் பாட்டியை நாம் ஒரு வேலைக்காரி அளவில் வைத்து எண்ணக் கூடாது. ஏனென்றால், ஒரு வேலைக்காரிக்குரிய சுயநலமும், பண ஆசையும் அவளிடம் இல்லை. அந்த ஊரில் உள்ள ஒவ்வொருவருக்கும் தேவையான காலத்தில் அவள் செய்த உதவிகள் ஏராளம். ஆனால், இப்போது எழும்ப முடியாமல் படுத்த படுக்கையாய் இருக்கும் மீனாட்சிப் பாட்டியைக் கவனிக்க யாரும் தயாராய் இல்லை. தங்களுக்குத் தேவையான காலத்தில் மீனாட்சிப் பாட்டியை நன்றாகப் பயன்படுத்திய அந்த ஊர்க்காரர்கள் இப்போது அவளை 'அம்போ' என்று விட்டுவிட்டனர்.

''பாட்டி, இப்ப உடம்புக்கு எப்படி இருக்கு...? உங்களுக்கு உடம்பு சரியாகிறவரை நான் பள்ளிக்கூடத்துக்குப் போக மாட்டேன்'' என்றாள் அந்த எட்டு வயதுச் சிறுமி உமா. உமா வேறு யாருமல்ல. அவள் மீனாட்சிப் பாட்டியின் பேத்திதான். உமாவுக்கு ஐந்து வயது நடக்கும் போதே அவள் அம்மா காலமாகி விட்டாள். அன்று முதல் இன்று வரை உமா மீனாட்சிப் பாட்டியின் அரவணைப்பில்தான் வளர்ந்து வருகின்றாள்.

மீனாட்சிப் பாட்டி, தன்ஏழைமையைப் பொருட்படுத்தாமல் தன் ஒரே குல விளக்கான உமாவை நல்லபடியாய் வளர்க்க வேண்டும் என்ற ஆசையில் ஒருநாள்கூட ஓய்வில்லாமல் ஊரில் உள்ளவர்களுக்கு உழைத்து அதில் கிடைத்த சொற்பத் தொகையில் உமாவின் படிப்பைக் கவனித்து வந்தாள்.

''நான் பள்ளிக்கூடத்துக்குப் போக மாட்டேன்'' என்ற உமாவின் குரல் கேட்டதும், மீனாட்சிப் பாட்டி துடிதுடித்துப் போய்விட்டாள். அந்தச் சின்னஞ் சிறுமலரான உமாவைப்படிக்க வைத்துச் சமுதாயத்தில் நல்ல நிலைக்கு உருவாக்க வேண்டும் என்ற ஆசையில் தானே மீனாட்சிப் பாட்டி தன் உடலை வருத்தி, மற்றவர்கள் சொன்ன எடுபிடி வேலைகளை எந்தவித மறுப்பும் இன்றி இதுவரைக்கும் செய்து வந்தாள்?

''உமா,''பள்ளிக்கூடத்துக்குப் போக மாட்டேன் என்று இன்னும் ஒரு தடவை சொல்லாதே! என் வாழ்வின் ஒரே ஆசையையும், நம்பிக்கையையும் நாசமாக்கி விடாதே! கடவுளை வணங்கு, என் நோய் குணமாகி விடும்''. என்றாள் மீனாட்சிப்பாட்டி உமாவிடம்.

''ஆமாம்... எதுக்கு எடுத்தாலும் கடவுளை வணங்கிடச் சொல்றீங்க. வருஷம் வருஷமாய்க் கோயிலுக்குப் போய்க் கடவுளை வணங்கியதில் என்ன

பலன் கிடைச்சிருக்கு? பாட்டி... எனக்கென்னவோ உங்களை இந்த நிலையில் பார்த்த பிறகு கோயிலுக்குப் போக வேண்டும் என்ற ஆசையே விட்டுப் போச்சு...'' தன் பிஞ்சுக் குரலில் படபடத்தாள் உமா.


''என்னடி பேசறே..? உமா, உனக்கு என்ன ஆச்சு'' மீனாட்சிப் பாட்டியின் இந்தக் கேள்வியில் சூடு இருந்தது.

''நான் தவறாமல் ராமஜெயம் எழுதச் சொன்னீங்க... நானும் எழுதி வந்தேன்... என் பாட்டிக்கு நல்ல சுகத்தைக் கொடு என்று கடவுளை வேண்டாத நாளே இல்லை... அப்படியிருந்தும் நீங்க படுத்த படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியாமல் இப்படி நோய்வாய்ப்பட்டு... என்னால் இதைத் தாங்க முடியவில்லை'' என்றாள் உமா.

''உமா, நாம் எதையும் எதிர்பார்க்காமல் கடவுளை வணங்கணும்.... என்றைக்காவது ஒருநாள் கடவுள் நம் வாழ்வில் பூரண கருணை காட்டுவார்... மனம் தளராதே! நம்பிக்கை இழக்காதே! என்றைக்கு நீ கடவுளிடம் நம்பிக்கை இழக்கிறாயோ, அன்றே கடவுளின் அன்பைப் பெறுவதில் நீ காலம் தாழ்த்தப்பட்ட நிலையில் இருக்கின்றாய்... தூய அன்போடு ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்தால், அவன் அருள் நிச்சயம்'' இப்படியெல்லாம் ஆறுதல் வார்த்தைகள் கூறி உமாவின் மனத்தைத் தேற்றினாள் மீனாட்சிப் பாட்டி.

அடுத்த வாரம்... வெள்ளிக்கிழமை. அந்த ஊர் முருகன் கோவிலில்... உமா தன்னை மறந்து, கடவுளை நினைத்து உருகி, வழிபட்டுக் கொண்டிருந்தாள். ''கடவுளே, என் பாட்டியைக் காப்பாற்று. என் பாட்டியைக் காப்பாற்று'' என்று அந்தச் சிறுமியின் உதடுகள் பக்தியுடன் முனகிக் கொண்டிருந்தன. அவள் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்து கொண்டிருர்தது.

உமாவின் இந்தச் செய்கையைக் கோவிலுக்கு வந்திருந்த செல்வந்தர் ராஜமாணிக்கம் கவனிக்கத் தவறவில்லை. ராஜமாணிக்கம் கோவில் குருக்களிடம் உமாவைப் பற்றி விசாரித்தார். ''சார்... அந்தச் சிறுமி பெயர் உமா. ஏழ்மையும், வறுமையும்தான் அவள் சொத்து. தன்னை அரும்பாடு



பட்டு வளர்த்து வரும் பாட்டி, நோய்வாய்ப்பட்டு எழும்பக்கூட முடியாத நிலையில் இருக்கிறாள். தன் பாட்டியைக் காப்பாற்றத்தான் இவ்வளவு நேரமாகக் கசிந்துருகி இறைவனை வழிபட்டுக் கொண்டிருக்கிறாள். அந்தச் சின்னஞ் சிறுமியின் படிப்பும் இடையிலே முடியும் நிலையில் இருக்கின்றது. கடவுள் கண் திறந்தால்தான் அந்தச் சிறுமியின் வாழ்வு மலரும்'' கோவில் குருக்கள் மூச்சு விடாமல் பேசி முடித்தார்.

அடுத்தநாள், ஒரு கார் மீனாட்சிப் பாட்டியின் வீட்டு முன்னால் வந்து நின்றது. ராஜமாணிக்கம், ஒரு டாக்டருடன் காரில் இருந்து இறங்கினார். டாக்டர் மீனாட்சிப் பாட்டியை நன்றாகச் சோதித்தார். இரண்டு ஊசிகள் போட்டார். சில மாத்திரைகள் கொடுத்தார்.

''இனிமேல் உடம்பு நன்றாகக் குணம் ஆகிவிடும்... கவலைப்படாதீங்க அம்மா'' என்றார் டாக்டர்.

மீனாட்சிப் பாட்டிக்கு நம்பவே முடியவில்லை. எத்தனையோ உதவிகளை மீனாட்சியிடம் பெற்று, 'மீனாட்சி', 'மீனாட்சி' என்று தேன் குழைய அழைத்தவர்கள்கூட மீனாட்சியைக் கடந்த ஒரு மாதமாய் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. ஆனால், முன்பின் தெரியாத இவர் செய்த உதவி?

மீனாட்சிப் பாட்டிக்குத் தான் கனவுலகில் இருக்கின்றோமா, அல்லது நனவுலகில் இருக்கின்றோமா என்பதை அறியவே கொஞ்சம் நேரமாயிற்று.

''நீங்க யாரு... நீங்க எனக்கு முன்பின் தெரியாதவங்களாய் இருந்தும் மருத்துவ உதவி செய்யறீங்களே!'' என்று மீனாட்சிப் பாட்டியின் குரல் நன்றியின் ஆழத்தில் இருந்து ஒலித்தது.

''என் பேர் ராஜமாணிக்கம்... இந்த ஊர் முருகன் கோவிலுக்கு வந்திருந்த போது உங்கள் பேத்தி உமாவின் உருக்கமான வேண்டுதலைப் பார்த்தேன். உங்களைப் பற்றிய முழு விவரங்களையும் கேட்டு அறிந்த நான் இந்த டாக்டரோடு இங்கு வந்தேன்.. உமாவின் படிப்புக்குக்கூட நான் உதவி செய்யத் தீர்மானித்துள்ளேன். திக்கற்றவர்களுக்கு உதவி செய்வது கடவுளுக்கு நாம் செய்யும் பணி... உமா பள்ளிக்கூடத்தில் இருந்து வந்ததும் இந்தப் பேப்பரை அவளிடம் கொடுத்து விடுங்கள்... நான் வருகிறேன்'' ராஜமாணிக்கம் இதைக் கூறிவிட்டு, ஒரு பேப்பரை மீனாட்சிப் பாட்டியிடம் கொடுத்துவிட்டு டாக்டருடன் வெளியே சென்றார். ஆச்சரியத்தால் மீனாட்சிப் பாட்டி அப்படியே ஸ்தம்பித்து நின்றாள்.

மாலை ஐந்து மணிக்குப் பள்ளிக்கூடத்தில் இருந்து வந்த உமா, தன் பாட்டி கட்டிலில் எழுந்து உற்சாகமாய்உட்கார்ந்து இருந்ததைப் பார்த்து மகிழ்ச்சியுடன் துள்ளினாள்.

''பாட்டி, உங்க உடம்பு நன்றாக ஆகி விட்டதா? கடவுள் நம்மீது கருணை காட்டத் தொடங்கி விட்டார்..!'' உமா ஆனந்தத்தில் சத்தமிட்டாள். அந்தச் சிறுமியின் முகத்தில் ஆயிரமாயிரம் மகிழ்ச்சிப் பூக்கள் மலர்ந்தன.

உமாவிடம் மீனாட்சிப் பாட்டி நடந்த விவரங்களைக் கூறி ராஜமாணிக்கம் கொடுத்த பேப்பரைக் கொடுத்தாள். அந்தப் பேப்பரை ஆவலோடு பிரித்துப் பார்த்தாள் உமா. ''கடவுள் தந்த பரிசு'' என்று அந்தப் பேப்பரில் எழுதியிருந்தது.

''என் பாட்டியின் உயிரைக் காப்பாற்றி எனக்குக் கடவுள் தந்த பரிசு இது'' என்று கூறி அந்தப் பேப்பரைத் தன் நெஞ்சோடு அணைத்தாள் உமா. உமா எழுப்பிய இந்த மகிழ்ச்சிக் குரல் முருகன் கோவில் பூஜை மணியோடு கலந்து சங்கமம் ஆனது.

யார் பெரியவன்?


தாத்தா: முரளி, கண்ணன் உன்னை விட இரண்டு வருஷம் பெரியவன். அதனாலே அவனை நீ அண்ணா என்று கூப்பிடணும்.

முரளி: சரி தாத்தா, ஆனால், இன்னும் மூணு வருஷம் போனால், நான் அவனை விட ஒரு வருஷம் பெரியவனாய் விடுவேனே, அப்போ அவன் என்னை அண்ணான்னு கூப்பிடுவானா?.

-லலிதா செல்லப்பா.



கண்ணன் வந்தது உண்மையா?



கல்யாண வெங்கடேசன்

அன்று 'கோகுலாஷ்டமி' தினம். காலையிலிருந்தே சின்னப் பையன் ராமனின் அம்மா சீடை, முறுக்கு எல்லாம் செய்யத் தொடங்கி விட்டாள். ராமனுக்கு ஐந்து வயதாகிறது. இவனும் ஏதோ காரியம் செய்கிற மாதிரி அம்மா கூடவே அலைந்தான். ஏதோ விசேஷம் என்று தெரிந்ததே ஒழிய, என்னவென்று அவனுக்கு விளங்கவில்லை. அம்மாவைத் துளைக்க ஆரம்பித்தான்.

''அம்மா...''

''என்னடா ராமு...?''

''இன்னிக்கு என்னம்மா விசேஷம்...?''

''இன்னிக்குக் கண்ணன் பிறந்த நாள். அதுக்குத்தான் எல்லாம் பண்றோம்.''

சொல்லிவிட்டுக் கொல்லைப்புறம் கிணற்றடியில் தண்ணீர் இறைக்கப் போய் விட்டாள் ராமனின் அம்மா.

ராமனுக்கு இன்னும் ஏதோ சந்தேகம். மறுபடியும் அம்மாவிடம் போனான்.

''ஏம்மா...!''

''என்னடா...?''

''ஏம்மா கண்ணன் நம்ம வீட்டிலேயா பிறந்தார்...?''

''இல்லேடா கண்ணு. அவர் கோகுலத்திலே பிறந்தார்...''

''கோகுலம் எங்கேம்மா இருக்கு?''

''அது... அது... வடநாட்டிலே இருக்குடா கண்ணு. ரொம்பத் தூரத்திலே...''

''அதுக்கு நம்ம வீட்டுலே ஏம்மா பிறந்த நாள் கொண்டாடணும்? அவங்க வீட்டிலே கொண்டாட மாட்டாங்களா...? போன வாரம் சீனுவோட பிறந்த நாளை நம்ம வீட்டிலே கொண்டாடலியே!''

அம்மா ஒரு விநாடி திகைத்தாள்.

''கண்ணு, இவர் கடவுள். சாதாரண ஆள் இல்லே. நம்ம வீட்டிலே கொண்டாடினால், அவர் நம்ப வீட்டுக்கு வருவார். சாமி வந்தால் உனக்குப் பிடிக்குமில்லையா!''

ராமன் தலையாட்டினான்...

''அவர் எப்பம்மா வருவார்...?''

''எப்ப வேணும்னாலும் வருவார். வந்தவுடனே நம்ம பட்சணங்களை எல்லாம் அவருக்கு நைவேத்தியம் பண்ணிட்டு அப்புறமாச் சாப்பிடணும். சரி... சரி... தொந்தரவு பண்ணாமப் போய்ச் சமர்த்தா உட்காரு.''

ராமன் உள்ளே உட்கார்ந்து விட்டான். அம்மா மறுபடியும் வேலைகளை மும்முரமாகக் கவனிக்க ஆரம்பித்தாள். ராமன் சிறிது நேரம் குட்டி போட்ட பூனை மாதிரி இங்குமங்கும் அலைந்தான்.

இதற்குள் மத்தியானம் ஆகிவிட்டது. அம்மா கோலம் போட ஆரம்பித்தாள். வண்ண வண்ணக் கோலங்கள் தரை முழுவதும் ஆக்கிரமித்துக் கொண்டன. அப்புறம் வாசலிலிருந்து சின்னச் சின்னக் கால்களைப் போட

ஆரம்பித்துப் பூஜை அறைக்குக் கொண்டு வந்து முடித்தாள். ராமன் பேசாமல் அம்மா செய்வதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''ராமா, இந்தக் கால்களை அழிச்சுடாதே. இது இப்படியே இருக்கணும். ஜாக்கிரதை!''

''சரிம்மா!'' ராமன் அம்மாவைப் பார்த்துக்கொண்டே பதில் சொன்னான்.

''அம்மா...!''

''என்னடா ராமா...?''

''கண்ணன் எப்படியம்மா இருப்பார்...?''

''கண்ணன்...! அதோ அந்தப் படத்திலே இருக்கார் பாரு... அதே மாதிரி இருப்பார். உன்னை மாதிரித்தான் பேசிக்கொண்டே இருப்பார்.''

''இன்னிக்குக் கட்டாயம் வருவாரா அம்மா!''

''கட்டாயம் வருவார்டா கண்ணு..! அவருக்காகத்தானே நாம இவ்வளவும் பண்றோம்.''

ராமன் தலையாட்டிக் கொண்டே கிருஷ்ணர் படத்தருகே சென்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அது குழந்தை வடிவத்திலிருந்த புல்லாங்குழல் கிருஷ்ணன். ராமனைப் பார்த்துப் புன்னகை பூத்துக்கொண்டிருந்தது போல் தோன்றியது.

ராமன் அந்த உருவத்தை நன்றாக மனத்தில் வாங்கிக்கொண்டு வாசலில் போய் உட்கார்ந்தான். கண்கள் தெருக்கோடியை நோக்கி இருந்தன. கண்ணன் வருவார்! எப்ப வேணும்னாலும் வருவார்!

ராமனின் அம்மா, தன் வேலையைக் கவனிக்கப் போய் விட்டாள்!

ராமன் காத்துக் கிடக்க ஆரம்பித்தான், கண்ணன் வரவை எதிர்நோக்கி, ''வரவேண்டும், கண்ணா! நிச்சயம் நீ வர வேண்டும்!'' நேரம் மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது.

நீலமேக சியாமள வண்ணனுக்குக் குழந்தை ராமனின் தவிப்பு புரியாமல் இருக்குமா என்ன? குழல்கள் அசைந்தாட பட்டுப் பீதாம்பரம் உடுத்தி, சின்னக் கண்ணன் கையில் குழலுடன் தெருக்கோடியில் தலையைக் காட்டினான்.

''அம்மா...! அம்மா...! கண்ணன் வந்தாச்சு...! கண்ணன் வந்தாச்சு...! சீக்கிரமா வா...!''

ராமனின் அம்மாவுக்குக் காதில் விழவில்லை. கொல்லைப்புறத்தில் ஏதோ வேலையாக இருந்தாள்.

இதற்குள் கண்ணன் ராமன் வீட்டருகே வந்து விட்டான். தொலைவிலே போய்க் கொண்டிருந்தோர் சிலர், யாரோ தம் பிள்ளைக்கு அழகாக வேஷம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள் என்று நினைத்துக்கொண்டே சிரித்தவாறு சென்றனர்.

அன்று கோகுலாஷ்டமி ஆதலால் இதுபோல் சர்வ சாதாரணமாக எல்லோரும் செய்வதுண்டு. இது உண்மையான பரந்தாமன்தான் என்று யாருக்கும் துளிக் கூடத் தோன்றவில்லை. யாருக்கும் நம்பிக்கையில்லை. நம்பிக்கை யில்லாதவர்களுக்கு உண்மை எப்படி விளங்கும்? ராமன் நம்பினான். உண்மையான கண்ணனே வந்தாயிற்று.

''கண்ணா, பார்த்து வா. அந்தக் கோலத்திலே இருக்குதே கால் அது மேலே கால் வைச்சு வா, இப்படி,வா, இந்த வழியா வா...''

''அம்மா! கண்ணன் வந்தாச்சு! சீக்கிரம் வா.'' கொல்லைப்புறம் பார்த்துக் குரல் கொடுத்தான் ராமன். ஆனால், அவன் அம்மா கவனிக்கவேயில்லை. ஏதோ வேலையாக இருந்தாள். அல்லது, கண்ணனின் மாயமோ தெரியாது. ராமன் குரல் அவள் காதில் விழவே இல்லை.

ராமனுக்கு, கண்ணனை விட்டு நகரவே விருப்பமில்லை. பூஜையறைக்குக் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு சென்றான்.

ஒரு பலகையைப் போட்டு உட்காரச் சொல்லி, சீடை, முறுக்கு எல்லாம் முன்னால் எடுத்து வைத்தான். தானும் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டான்.

''சாப்பிடு கண்ணா! எல்லாம் உனக்குத்தான்!''

''நீ சாப்பிடலே ராமா...?''

''இல்லே கண்ணா...! நீ சாப்பிட்ட பிறகுதான் எல்லாம்னு அம்மா சொல்லிட்டா... நீ சாப்பிடு... நானும் சாப்பிடறேன்.''

''சரி...!''

கமலவண்ணன் பவள வாய் திறந்து பலகாரங்களை உண்ணத் தொடங்கினான்.

இரண்டு வாய் சாப்பிட்டான். பிறகு தனது கையால் ராமனுக்கு ஊட்டினான்.

ராமனுக்கு ரொம்ப சந்தோஷம். ஆடாமல், அசையாமல் கண்ணனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''கண்ணா! உன்னாலே இவ்வளவையும் இப்ப சாப்பிட முடியாது!



மடியிலே கட்டிக்க; வீட்டிலே போய்ச் சாப்பிடலாம்!''

ராமன் சொன்னமாதிரி மடியிலே கட்டிக் கொண்டான், கண்ணன். இப்பொழுது பாத்திரங்கள் எல்லாம் காலி!

''கண்ணு! உன் வீடு ரொம்ப தூரத்திலே இருக்காமே! நடந்து போனால் கால் வலிக்காது?''

''வலிக்கும்... என்ன பண்றது...?'' முகத்தைச் சோகமாக வைத்துக் கொண்டான், பரந்தாமன்.

''ச்சூ...! ச்சூ...! பாவம். கஷ்டப் பட்டு வந்திருக்கே; இல்லியா...?''

''ஆமாம்! உன்னைப் போலச் சின்னப் பையன் கூப்பிட்டா வராமல் என்ன பண்றது? நீங்க ஏமாந்து .போவீங்க இல்லியா..? அதான் கஷ்டமானாலும் பரவாயில்லேன்னு வந்துடுவேன்.''

''நீ ரொம்ப நல்லவன் கண்ணு!''

''நீயும்தான் ராமா...''

பேசிக்கொண்டே வாசல் வரை வந்து விட்டனர்.

''கண்ணு, கொஞ்சம் புல்லாங்குழல் வாசியேன்.''

கார்மேகன் குழலிசைக்க ஆரம்பித் தான். ராமன் மயங்க ஆரம்பித் தான். கண் விழித்தபோது சின்னக் கண்ணன் அங்கு இல்லே.

இதற்குள் ராமனின் அம்மா வாச லுக்கு வந்து விட்டாள்.

''என்னடா மத்தியானத்திலேருந்து வாசல்லியே நிக்கறியே? கால் வலிக்கப் போறது... உட்காரு...''

''அம்மா...! அம்மா...! கண்ணன் வந்துட்டுப் போயாச்சு... நான் உன்னைக் கூப்பிட்டேன். உனக்குக் காதே கேக்கலே.''

''கண்ணன் வந்தாச்சா! என்னடா உளர்றே...?''

''நான் ஒண்ணும் உளறல்லே... கண்ணன் அப்பவேவந்துட்டுப்போயாச்சு வடை, முறுக்கு, இவையெல்லாம்கூட சாப்பிட்டாச்சு. மடியிலே கூடக் கொஞ்சம் கட்டி எடுத்துப்போனுர் அம்மா. நீ வேணு உள்ளே போய்ப் பாரேன்.''

ராமனின் அம்மா ஏதோ முணு முணுத்துக்கொண்டே பூஜையறைக் குள் சென்று பார்த்தாள். பட்சணம் வைத்திருந்த .பாத்திரத்தில் ஒன்றும் இல்லே.

''நான் சொன்னேனே, பாத்தியா அம்மா...!''



குரங்குபோல் நடந்தால்...?



மனிதன் ஆரம்ப நாட்களில் குரங்காக இருந்த போது எப்படிக் கைகளையும் கால்களையும் தரையில் ஊன்றி நடந்தானோ, அப்படியே இப்பொழுதும் நடந்துகொண்டிருந்தால், அவனுக்கு மூலம், முதுகு வலி போன்ற வியாதிகளே வந்திருக்காது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

-ஆர். எஸ். சுப்பிரமணியன்.

''அட பாவிப் பயலே!... பட்சணத்தை எல்லாம் சகப்பிட்டுவிட்டு 'கண்ணன் வந்தான்'னு பொய்யா சொல்றே? அவ்வளவையும் எப்படிடா சாப்பிட்டே?.. உடம்புக்கு வந்தா என்னடா பண்றது...? அதுவுமில்லாம பொய் வேற சொல்றியேடா பாவி!''

''இல்லேம்மா! நான் பொய் சொல்லலே! நிஜமா கண்ணன் வந்தான் அம்மா. என்னாலே எப்படி அம்மா எல்லாத்தையும் சாப்பிட முடியும்?''

''போடா திருக்குப் பயலே. நான் தான் வாசலையே பார்த்துண்டு இருந்தேனே! நீதான் நடுவிலே ஒரு தரம் உள்ளே வந்து பூஜையறைக்கு உள்ளே நுழைஞ்சே. அப்பவே நினைச்சேன். ஆனால், இப்படிப் பண்ணுவேன்னு நினைக்கல்லே. அதுவுமில்லாமே பொய் வேறே சொல்றியேடா! இனிமே இப்படிப் பண்ணுவியா... பண்ணுவியா...?''

சொல்லிக் கொண்டே முதுகிலே இரண்டடி போட்டாள். ராமன் அழுது புலம்பிக் கொண்டிருந்தான். 'இல்லேம்மா! கண்ணன் வந்தான்; அவன்தான் சாப்பிட்டான்.''

''போடா போ...! பொய் வேறே சொல்லிட்டுச் சாதிக்கிறியா...!''

முதுகிலே இன்னும் இரண்டு கொடுத்து அறைக்குள் தள்ளிவெளியே தாழ் போட்டாள்.

''இரு, இரு, அப்பா வந்தவுடனே, டாக்டர்கிட்டக் கூட்டிக்கிட்டுப்போகச் சொல்றேன். அவ்வளவையும் சாப்பிட்டுட்டு இருக்கியேடா பாவி. இப்ப என்ன பண்றது?''

ராமன் அழுதுகொண்டு தலையணையில் முகம் புதைத்துக் கொண்டான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

பாற்கடல் — பரந்தாமனின் கால்களை வருடிக்கொண்டே லக்ஷ்மி கேட்டாள்.

''நன்றாக இருக்கிறது உங்கள் விளையாட்டு! இன்னும் பூலோக ஆசை விடவில்லை போலிருக்கு. இப்பப் போயிட்டு வந்திருக்கீங்களே, அதனுடைய விளைவுகளைப் பார்த்தீங்களா? பாவம், உங்களாலே அந்தச் சின்னக் குழந்தைக்கு எவ்வளவு கஷ்டம்! இப்ப என்ன பண்ணப் போறீங்க? பையனுடைய அம்மாவுக்குத் தரிசனம் கொடுத்து, உண்மையைச் சொல்லப் போறீங்களா? இது கலி காலம்னு மறந்து போய் விளையாட்டுப் பண்ணினா இப்படித்தான் சிக்கல்! பாவம், அந்தக் குழந்தையைக் கவனிங்கோ.''

பரந்தாமன் புன்முறுவலுடன்....

''என்ன பண்ணனும் லக்ஷ்மி. அந்தக் குழந்தை அவ்வளவு ஆர்வமா, நம்பிக்கையா என்னை எதிர்பார்த்து வாசல்ல இருக்க ஆரம்பிச்ச உடனே, இங்கே இருப்புக் கொள்ளலே எனக்கு. இரு..., இரு... கொஞ்ச நேரத்திலே பாரு... எல்லாம் சரியாப் போயிடும்!''

''ஹும்...! யாருக்குப் புரியறது உங்கள் செய்கை...?''

ராமனின் அம்மா முணுமுணுத்துக் கொண்டே மறுபடியும் பூஜை அறைக்குள் வந்தாள். அலமாரியைத் திறந்து பார்த்தவள் திடுக்கிட்டுப் போனாள். அவள் வைத்திருந்த பட்சணங்கள் கொஞ்சங்கூடக் குறையாமல் அப்படி அப்படியே பாத்திரங்களில் இருந்தன!

''அடடா, என்ன முட்டாள்தனம்! பட்சணத்தை எல்லாம் உள்ளே எடுத்து வைச்சுட்டு, குழந்தை சாப்பிட்டுட்டான்னு அடிச்சுட்டேனே, பாவம்!''

சொல்லிக்கொண்டே ராமனை உள்ளே தள்ளிச் சாத்திய அறையை நோக்கி ஓடிவந்தாள். கதவு தாழ்ப்பாள் போடாமல் திறந்தே கிடந்தது. தாழ்ப்பாள் போட்டது அவளுக்கு மறந்தே போயிற்று.

''கண்ணு எழுந்திருடா...! கண்ணு.! பட்சணம் அப்படியே இருக்கு. நீ சாப்பிடல்லே. தெரியாமல் அடிச்சுட்டேண்டா...''

ராமன் தூங்கி எழுந்தவன் போல் எழுந்திருந்தான்.

''அம்மா, நான்கூட சொப்பனத்திலேதான் அம்மா கண்ணன் வந்தது போலக் கண்டேன். நிஜம் இல்லேம்மா.''

குழந்தைக்கு நடந்த விஷயம் கனவாகப் போயிற்று. யார் பார்த்தார்கள், அல்லது யாருக்குத் தெரிந்தது இந்த நாடகம்?...

தாத்தா சொன்ன குட்டிக் கதைகள்



கணிகை உலகநாதன்

மூத்துத் தாத்தா என்பவர் முத்தியாலுப்பேட்டையில் வாழ்ந்து வந்தார். அவர் ஓர் ஓய்வு பெற்ற தமிழாசிரியர். அவருக்கு மாணிக்கம் என்று ஒரு பெயரன் இருந்தான். மாணிக்கம் அடிக்கடி தாத்தாவிடம் கதை கேட்பான். கதை சொல்வதில் தாத்தா மிகவும் கெட்டிக்காரர். சில சமயங்களில் அவர் உண்மை நிகழ்ச்சிகளையே கதை போலக் கூறுவார். அவர் கூறும் கதை வேடிக்கையாகவும் இருக்கும்; பலனுள்ளதாகவும் இருக்கும்.

ஒருநாள் மாணிக்கம், ''தாத்தா, தாத்தா, இன்று எனக்குக் கதை ஒன்று கூறுங்கள். கதை கேட்க ஆசையாக இருக்கிறது'' என்றான்.

தாத்தா நீண்ட கதைகள் சொல்லாமல் குட்டிக் கதைகள் கூற ஆரம்பித்தார். ''மாணிக்கம், உனக்கு ஒரு குட்டிக்கதை கூறுகிறேன். இது உண்மையில் நடந்த கதை.''

''உண்மையில் நடந்த கதையா! சொல்லுங்கள் தாத்தா.''

''நான் உன்னைப் போல் பள்ளியில் படிக்கும் போது பள்ளி ஆண்டுவிழா நடந்தது. அந்த ஆண்டு விழாவில் 'அலெக்சாண்டர்' என்னும் நாடகம் நடந்தது. அலெக்சாண்டருக்கும் புருஷோத்தமனுக்கும் தட்சசிலம் என்னும் இடத்தில் போர் நடந்தது. புருஷோத்தமன் தோற்று விட்டான். அலெக்சாண்டர் வெற்றி பெற்றார். வெற்றிபெற்ற அலெக்சாண்டருக்கு எதிரில் புருஷோத்தமன் நிறுத்தப் பட்டான். அலெக்சாண்டராக நடித்த மாணவன், புருஷோத்தமனாக நடித்தவனைப் பார்த்து, 'அடே! புருஷோத்தமா! உன் வாலைக் கீழே வை'' என்று அதட்டிக் கூறினான்.

புருஷோத்தமன், பின்புறம் தடவிக் கொண்டே, ''ஐயா, எனக்கு வாலே இல்லை'' என்று வேடிக்கையாகப் பதில் கூறினான். நாடகம் பார்த்தவர்கள் வயிறு குலுங்கச் சிரித்தார்கள். அவ்வளவுதான்! அலெக்சாண்டர் வெட்கத்தால் தலைகுனிந்து திரைக்குப் பின்னால் ஓடி ஒளிந்து கொண்டார். நாடகம் அத்துடன் நின்று விட்டது.

மாணிக்கம், ''தாத்தா, வேடிக்கையான கதை. வாளை என்று சொல்ல வேண்டிய அலெக்சாண்டர் வாலை என்று சொன்னது விபரீதமாகி விட்டதே!'' என்றான்.

''தமிழில் சிலர் இப்படி ர, ற; ல, ள; ந, ண, ன முதலிய எழுத்துக்கள் வரும் சொற்களைச் சரியாக உச்சரிக்காமையால் பொருள் வேறுபட்டு விடுகிறது'' என்றார் தாத்தா.

தாத்தா மேலும் சொன்னார்: வரதப்பன் என்னும் வட்டிக் கடைக்காரன் ஏகாம்பரம் என்னும் ஏழைக் குடியானவனுக்கு 100 ரூபாய் கடன் கொடுத்தான். வரதப்பன் அதை 300 ரூபாய் (மூன்னூறு) என்று பாண்டு எழுதி வாங்கிக் கொண்டான். குடியானவன் நூறு ரூபாயும் வட்டியும் சேர்த்துக் கொடுத்துக் கடனைத் தீர்க்க வந்தபோது, ''நீ எனக்கு 300 ரூபாயும் வட்டியும் கொடுக்க வேண்டும். இல்லையேல் ஊர்ப் பஞ்சாயத்திடம் சொல்லி அபராதம் விதிக்கும்படி செய்வேன்'' என்று அதட்டினான். பஞ்சாயத்தாரிடமும் முறையிட்டான். வரதப்பனின் ஏமாற்று வித்தையை ஏகாம்பரம் தன் ஊரில் வாழ்ந்த தமிழாசிரியர் ஒருவரிடம் முறையிட்டான். அவர் வரதப்பனின் கொடிய செயலைக் கண்டித்து ஏகாம்பரத்தைக் காப்பாற்றினார்.

''அது எப்படி?'' என்றான், மாணிக்கம்.

வரதப்பன் இப்படி ஏழைகளை ஏமாற்றிப் பணம் பறிக்கும் தன்மையை அவர் நன்றாக அறிந்தவர். அதனால் ஊர்ப் பஞ்சாயத்தாரிடம் சென்று, ''இந்த வரதப்பன் கொடுத்தது ரூபாய் 100தான். முன்னூறு என்று எழுதி இருப்பதைப் பாருங்கள்.



அதாவது முன்னே கொடுத்த நூறு என்பது இதன் பொருள். உண்மையில் 300 ரூபாய் கொடுத்திருந்தால் முந்நூறு (மூன்று நூறு) என்று எழுதி இருக்க வேண்டும். ஏழைகள் பலரை இந்த வட்டிக் கடைக்கார வரதப்பன் இப்படி ஏமாற்றுவது வழக்கம்'' என்று விளக்கிக் கூறினார்.

தமிழாசிரியரின் விளக்கத்தைக் கேட்ட பஞ்சாயத்தார் ஏகாம்பரத்தின் பக்கமாகத் தீர்ப்புக் கூறினர். வரதப்பன், ''நூறு ரூபாயும் வட்டியும் கிடைத்தால் போதும்'' என்று வேண்டினான். ஏழை ஒருவனை ஏமாற்றப் பார்த்ததால் அதையும் கொடுக்க வேண்டாம் என்று பஞ்சாயத்தார் ஏகாம்பரத்தை விடுவித்தனர்.

''தாத்தா, நீங்கள் சொல்வது கதையாக இருந்தாலும் நல்ல கருத்து இருக்கிறதே முன் + நூறு = முன்னூறு.; மூன்று + நூறு = முந்நூறு என்னும் சொற்களின் பொருள் வேறுபாட்டை இன்று நான் நன்றாகப் புரிந்துகொண்டேன்; நன்றி'' என்றான் மாணிக்கம்.

''மாணிக்கம், தமிழில் இது போல் ஒலி வேறுபாடும் பொருள் வேறுபாடும் உள்ள சொற்கள் பல உண்டு. அவற்றுள் சிலவற்றையேனும் நீ தெரிந்து கொள்வது நல்லது'' என்றார்.

''சொல்லுங்கள் தாத்தா, குறித்து வைத்துக் கொள்வேன்'' என்றான் மாணிக்கம்.

தாத்தா ஒலி வேறுபாடுள்ள சில முக்கியமான சொற்களையும், அவற்றின் பொருளையும் மாணிக்கத்துக்கு விளக்கிக் கூறினார். மாணிக்கம் அவற்றைத் தன் குறிப்பேட்டில் குறித்து வைத்துக்கொண்டு எழுதும் போதும் பேசும்போதும் பிழையில்லாமல் எழுதினான்; பேசினான்.

அரம் – ஒரு கருவி; அறம் – தருமம்.
அரை–பாதி; அறை – வீட்டின் பகுதி
கூரிய – கூர்மையான; கூறிய – சொல்லிய.
பரி – குதிரை; பறி – கவர்ந்துகொள்
மாரி–மழை; மாறி – மாறுபட்டு.
இரை – உணவு; இறை – கடவுள்.
காலை – பொழுது; காளை – எருது
வலி – வலிமை; வளி – காற்று.
ஒலி – ஓசை; ஒளி – வெளிச்சம், ஒளிந்துகொள்.
பனி – குளிர்ச்சி; பணி – கட்டளை,
ஆனி–ஒருமாதம்; ஆணி–ஒரு கருவி.
ஊன் – மாமிசம்; ஊண் – உணவு.
பேன்–ஒரு பூச்சி; பேண்–காப்பாற்று.

வீரத்தின் விளைநிலம்

பொங்கி எழும் சிங்கங்கள்-4

இராமநாதபுரம் மாவட்டத்தின் ஒரு பகுதி சிவகங்கைச் சீமை. அதனை, யாவரும் போற்ற அரசாண்டவர்களே சின்ன மருது, பெரிய மருது என்ற இரு சகோதரர்கள். தமிழின்பால் அன்பும் இறைபக்தியும் அதனிலும் மேலாக நாட்டுப் பற்றும் மிக்கவர்கள் இந்தச் சகோதரர்கள்.

குன்றக்குடிக் கோயிலும், காளையார் கோவிலும் இவர்கள் புகழுக்கு அத்தாட்சியாய் நிற்கின்றன. இலக்கியத்தையும், கலையையும் வளர்த்த இவர்கள் வளர்ந்தது சிவகங்கைச் சீமையின் மன்னர் முத்துவடுகநாத பெரிய உடையணத் தேவரிடம். மன்னரின் மனைவி வேலு நாச்சியாரும் பெரிய வீராங்கனையாகத் திகழ்ந்தார். மருது பாண்டியரின் வீரதீர மதிநுட்பங்களை அறிந்து மன்னர் அவர்களைச் சிவகங்கைச் சீமையின் அமைச்சராக்கினர்.

புதுக்கோட்டைத் தொண்டைமான் வெள்ளையரின் கைக்கூலியாக விளங்கி, 'பெருவாழ்வு' வாழ்ந்து கொண்டிருந்தாலும், சிவகங்கைச் சீமையின் 'வளப்பமும், துள்ளலும்' அவன் கண்ணை உறுத்திக்கொண்டே இருந்தன. ஆர்க்காட்டு நவாபு சிவகங்கைச் சீமையின் வளர்ச்சியையும், வேலு நாச்சியாரின் வீரத்தையும் மருது சகோதரர்களின் வாள் வலி — தோள் வலி — இவைகளையும் அறிந்து நடுங்கிக் கொண்டிருந்தார். புதுக்கோட்டை மன்னனும், ஆர்க்காட்டு நவாபுமாகச் சேர்ந்து கும்பினி அதிகாரிகளைக் காணப் புறப்பட்டனர்.

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் முதல் ஏவுகணையாகக் 'கப்பம் கட்டச் சொல்லி'ச் சிவகங்கைச் சீமைக்கு ஆணை பிறந்தது.

கங்கா ராமமூர்த்தி



அலட்சியம் செய்தார் ஆங்கிலேயரை முத்து வடுக நாதர். ஆங்கிலேயரும், ஆர்க்காட்டு நவாபுமாகக் குறுநில மன்னர்களையும், குடிமக்களையும் துன்புறுத்தினார்கள்; பணத்தைச் சூறையாடினார்கள்; படையெடுத்தார்கள்.

ஒருபடை இராமநாதபுரத்தை வளைத்தது. இராமநாதபுரத்தை அரசாண்ட சேதுபதியையும் அவரது தாய், உடன் பிறந்த சகோதரி என எல்லோரையும் சிறையில் தள்ளினார்கள். இராமநாதபுரத்தைத் தாக்கிய வெள்ளையர்கள் சிவகங்கைச் சீமையையும் தாக்கினார்கள்.

வயது முதிர்ந்த வடுகநாதர் போருக்குக் கிளம்பினார்.

வீரமங்கை வேலு நாச்சியார் வாளை உருவிக் கொண்டு குதிரை ஏறினார்.

பெரிய மருது சுழல் கத்தி எடுத்தார்.

சின்ன மருது மீசையை முறுக்கிய படியே வெள்ளையரைவாளால் வெட்டிச் சாய்க்க ஒரு சிங்கம் போலக் கிளம்பினார்.

காளையார் கோவிலை அடுத்த காடு. நவாபின் கூலிப்படை, இந்த வீர மறப்படைக்கு முன் நிற்க முடியுமா? பிண மலைகள் குவிந்தன.

இரத்த ஆறு ஓடியது. எங்கும் ஓலக் குரல். மருது பாண்டியரின் வீரத்துக்கு முன் நிற்க இயலாத கூலிப் படை, வெள்ளையனின் உதவியோடு திரும்பி வந்தது.

கம்பெனியின் படையிலே துப்பாக்கி இருந்தது; பீரங்கிகளும் இருந்தன.

துப்பாக்கிக்கு முன் வாள் வீச்சு என்ன செய்யும்? பாவம், வயது முதிர்ந்த முத்து வடுக நாதர் இப் போரில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து வீரமரணமடைந்தார்.

வேலுநாச்சியாரும், மருது பாண்டியரும் வீரத்துக்கு இனி வேலை இல்லை என்று அறிந்து திண்டுக்கல் கோட்டையில் தஞ்சமடைந்தார்கள்.

இராமநாதபுரத்தோடு, சிவகங்கைச் சீமையும் ஆர்க்காட்டு நவாபின் வசமானது. திண்டுக்கல்லில் மருதுபாண்டியர் — மக்களோடு தொடர்புகொண்டு வரிப்பணத்தை அரசிக்கே கொடுக்கச் செய்தார்கள்.

நவாபு எவ்வளவு முயன்றும் ஒன்றும் வசூல் செய்யமுடியவில்லை. நாடு வறுமைப்பட்டது. பிணியும் கள்ளர் தொல்லையும் அதிகரிக்கவே, நவாபுக்குச் சீமையை உதறினால் போதும் என்று தோன்றிவிட்டது.

மறவர் நாடுகளை மீண்டும் வேலு நாச்சியாரிடம் கொடுத்து விட்டான் ஆர்க்காட்டு நவாபு. வேலுநாச்சியார் பெயருக்குத்தான் அரசியே தவிர நாட்டைத் திறம்பட நிர்வகித்தது மருது சகோதரர்கள்தான்.

மக்களின்பேரன்பாலும் மருது பாண்டியரின் அஞ்சாத உழைப்பாலும் சீமை மீண்டும் சிறப்படைந்தது.

சுதந்திரமாக மக்கள் பயமின்றி இருந்தனர்.

ஆர்க்காட்டு நவாபுக்கு இதைக் கண்டு பொறுக்குமா? பல சதிகள் செய்தான். ஒன்றும் பலிக்கவில்லை.

20 ஆண்டுகள் முழுமையாக —சுதந்திரமான நிர்வாகத்தோடு வாழ்ந்தார்கள் சீமை மக்கள்.

கயத்தாற்றில் வீரபாண்டியனைக் கம்பெனி தூக்கிலிட்டதும் வீரபாண்டியனின் தம்பி ஊமைத்துரை மருது பாண்டியரிடம் வந்தார்.

ஊமைத்துரைக்கு அடைக்கலம் தந்ததோடு, கம்பெனிக்குக் கப்பம் கட்டவும் மறுத்த மருதுபாண்டியர்மேல் கோபம் கொழுந்து விட்டெரிந்தது.

இதற்கிடையே வேலு நாச்சியார் உயிர் துறந்தார்.

வெள்ளையர் படை சீமையை நோக்கி நகர்ந்தது. கண்ணிலே தென்பட்ட கிராமங்களைத் தீக்கிரையாக்கிற்று. கொள்ளையடித்து, கொலை செய்து... ஓ கொடுமை!

வீரமறவர்களான சீமை வீரர்களை வெல்வது வெள்ளைப் படைக்கு மிகவும் கடினமானதாகவே இருந்தது. நய வஞ்சக வழிகளையெல்லாம் கடைப் பிடித்தார்கள். 150 நாட்கள் போர் நடந்தது. வெள்ளையர்கள் உளவாளிகளை வைத்து மருது பாண்டியரின் படை மர்மங்களை அறிந்து கொண்டார்கள்.

இறுதியில் காளையார் கோயிலை வெள்ளையர் பிடித்து விட்டனர். மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று காட்டிலே யோசனை செய்து கொண்டிருந்த போது, அவர்களை ஒருவன் காசுக்கு ஆசைப்பட்டுக் காட்டிக் கொடுத்து விட்டான்! மருது பாண்டியர் பிடிபட்டனர். திருப்பத்தூர்க் கோட்டையில் அந்த வீர சகோதரர்களை வெள்ளையர்கள் தூக்கிலிட்டார்கள்.

நாட்டுரிமைப் போரிலே தோற்றாலும், சுதந்திர உணர்ச்சியை நாட்டு மக்களிடம் மங்காத ஒளியாக, தீபமாக ஏற்றி வைத்தவர்கள் மருது சகோதரர்களே!

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543)


Editor: K. Rajendran



டாக்டர் மார்ட்டின் லூதர் கிங்

பிறந்த நாள்: 15-1-1929 அமரரான நாள்: 4-4-1968

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka



"ஹல்லோ! ஹேப்பி நியூ இயர்!"
"ஹாய்! பொங்கல் வாழ்த்துக்கள்!"
புகைப்படம்: ஆர். பி. எஸ். மணி